வள்ளுவ ஆண்டு 2057 – ஆவணி 15 – செவ்வாய்க்கிழமை – 01.09.2026 | பக்கங்கள் – 36 | இதழ் – 03

BEHIND ME MEDIA

WE SEE BOTH AHEAD AND BEHIND

web : behindmenews.org

குறள் 3 : மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்

பொருள் : அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் கடவுளின் சிறந்த திருவடிகளை இடைவிடாமல் நினைக்கின்றவர் இன்ப உலகில் நிலைத்து வாழ்வார்.

# "ஒன்ராறியோ ஏரி" திறப்பு: நாங்கள் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம் : ஒன்ராறியோ முதல்வர் டக் ஃபோர்ட்






அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், 'ஒன்ராறியோ ஏரி'யின் (Lake Ontario) பெயரை "அமெரிக்கா ஏரி" (Lake America) என மாற்றியமைத்த சர்ச்சைக்குரிய உத்தரவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், ஒன்ராறியோ மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் "ஒன்ராறியோ ஏரி" எனும் பிரம்மாண்ட பெயர் பலகையை திறந்து வைத்துள்ளார்.

கனடா - அமெரிக்கா இடையிலான வர்த்தகப் போர் முற்றிவரும் வேளையில், ஒன்ராறியோவின் வைனோனா (Winona) பகுதியில் சனிக்கிழமை பிற்பகல் நடைபெற்ற இந்த நிகழ்வில் பங்கேற்றுப் பேசிய டக் ஃபோர்ட், ஒன்ராறியோ தனது உரிமைகளுக்காக எப்போதும் போராடும் என்றும், ஒருபோதும் பின்வாங்காது என்றும் எச்சரித்தார்.

நாங்கள் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம்' அமெரிக்க அரசு அமைப்புகள் மற்றும் 'வரைபடங்களில் 'ஏரி அமெரிக்கா' என்ற பெயரைப் பயன்படுத்துமாறு அதிபர் டிரம்ப் நிர்வாக உத்தரவில் கையெழுத் திட்டிருந்தார். இதற்கு முன்பாக 'மெக்சிகோ வளைகுடா'வை 'அமெரிக்க வளைகுடா' என மாற்ற டிரம்ப் முயற்சித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நடவடிக்கை குறித்துப் பேசிய முதல்வர் டக் ஃபோர்ட்: " அதிபர் டிரம்ப் அதை என்ன வேண்டு மானாலும் அழைக்கட்டும், ஆனால் உலக மக்கள் அனைவரும் அதை எப்போதும் 'ஒன்ராறியோ ஏரி' என்றுதான் அழைப்பார் கள். அமெரிக்க மாநிலங்களின் ஆளுநர்கள் பலரும் என்னைத் தொடர்பு கொண்டு, தாங்கள் எப்போதும் 'ஒன்ராறியோ ஏரி' என்றே அழைப்போம் என உறுதியளித்துள்ளனர். கனடாவும் அதைத்தான் செய்யும். அதிபர் டிரம்பிற்கு இதுவே எங்கள் செய்தி" என்றார்.

P- 13

# டொராண்டோ மேயர் பதவிக்கு 53 பேர் போட்டி!

டொராண்டோ மேயர் பதவிக்கு 53 பேர் போட்டியிடுகின்றனர். 25 வார்டுகளில் 190 பேர் போட்டியிடுகின்றனர். முக்கிய வேட்பாளர்கள்: கிரிஸ் அலெக்சாண்டர் (Chris Alexander): அஜாக்ஸ் - பிக்கரிங் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் (2011 - 2015), குடியுரிமை மற்றும் குடியேற்ற அமைச்சர் (2013 - 2015). பிராட் பிராட்ஃபோர்ட் (Brad Bradford): வார்டு 19 பீச்சஸ்-ஈஸ்ட் யார்க் நகர சபை உறுப்பினர் (2018 - முதல்), 2023 மேயர் இடைத்தேர்தலில் போட்டியிட்டு 8 ஆம் இடம் பிடித்தவர். ஒலிவியா சௌ (Olivia Chow): டொராண்டோ மேயர் (2023 - முதல்), டிரினிட்டி-ஸ்பேடினா தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் (2006 - 2014), டிரினிட்டி-ஸ்பேடினா மற்றும் டவுன்டவுன் நகர சபை உறுப்பினர் (1991 - 2006), டொராண்டோ பள்ளி வாரிய அறங்காவலர் (1985 - 1991).தற்போது, ஒலிவியா சௌ தனது முதலாவது முழுமையான பதவிக் காலத்தைக் கைப்பற்றுவதற்குச் சாதகமான வாய்ப்புகளைக் கொண்டுள்ளார்.

# முன்மொழிவுகளை முன்வைக்கிறார் டொராண்டோ மேயர் வேட்பாளர்



டொராண்டோ மேயர் வேட்பாளரான டாக்டர் பாஹிரா அப்தெல்ஸலாம் (Dr. Bahira Abdelsalam), தான் தேர்தலில் வெற்றி பெற்று பதவியேற்றால், நகராட்சியின் கொள் முதல் முறைகளில் வெளிப்படைத் தன்மையைக் கொண்டு வருவதற்கும், காசா மோத லால் பாதிக்கப்பட்டு வெளியேறும் குடும்பங்களுக்கு மனிதநேய ஆதரவை வழங்குவதற்கும் முன்னுரிமை அளிப்பதாகத் தனது தேர்தல் அறிக்கையில் முக்கிய கொள்கை முன்மொழிவுகளை வெளியிட்டுள்ளார்.

"தேர்ந்தெடுக்கப்பட்டால் காசா மக்களை டொராண்டோவிற்கு அழைத்து வர உறுதியளிக்கும் டொராண்டோ மேயர் வேட்பாளர்" என்ற தலைப்பிலான பிரச்சாரப் பொருட்களில் இடம்பெற்றுள்ள அறிக்கை ஒன்றில், நகர சபையில் தான் கொண்டு வரத் திட்டமிட்டுள்ள ஆரம்பகட்ட முன்மொழிவுகள் குறித்து அப்தெல்ஸலாம் விவரித்துள்ளார்:

"டொராண்டோ நகரின் மேயராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டால், நகர சபையில் நான் கொண்டுவரும் முதல் முன்மொழிவு இதுவெ: முதலாவதாக, நமது நகரம் எவற்றை வாங்குகிறது, யாரிடமிருந்து வாங்குகிறது என்பதை டொராண்டோ மக்களுக்கு வெளிப்படையாகக் காட்டுவதுடன், அதனை சர்வதேச சட்டத்திற்கு உட்படுத்தி அளவிடுவது. ,ரண்டாவதாக, காசாவில் துயரத்தை அனுபவித்து, அங்கிருந்து இந்த நகரத்திற்கு வரும் குடும்பங்களுக்காக நமது கதவுகளைத் திறந்து வைப்பது."

# காத்திரமாக அமைந்த செம்மணி எழுச்சி : அணையா தீபம் விழித்தெழு தமிழா!






BEHIND ME MEDIA மற்றும் BEHIND ME FOUNDATION ஆகிய நிறுவனங்களின் ஏற்பாட்டில் 'செம்மணி எழுச்சி - அணையா தீபம்' 'விழித்தெழு தமிழா!' நிகழ்வு கடந்த 30 ஆம் திகதி பெருந்திரளான மக்களின் ஆதரவுடன் கனடா ALBERT CAMPBELL SQUARE இல் நடைபெற்றது.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் நினைவாகவும், நீதிக்காகக் காத்திருக்கும் குடும்பங்களின் குரலாகவும் ஒன்றிணைந்து நடாத்தப்பட்ட செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் என்புக் கூடுகளாக மீட்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒவ்வொரு உறவுக்கும் நீதி கேட்டு 'செம்மணி எழுச்சி - அணையா தீபம்' - 'விழித்தெழு தமிழா!' மிகுந்த காத்திரமாக நடைபெற்றது.

எம்மினத்துக்காகக் குரல்கொடுப்பதற்கு கனேடிய மண் மேடை கொடுத்தமைக்கு நன்றி கூறியபடி ஆரம்பமாகிய நிகழ்வில், செம்மணி என்பது வெறும் மண்ணல்ல... பல குடும்பங்களின் வலியான வரலாறு!

காணாமற் போன எம் உறவுகள் குறித்த உண்மைகள் வெளிவரவேண்டும் என்ற எம்மினத்தின் ஆறாத வலிகள், தேடல்கள், காத்திருப்புக்கள், போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், மௌனித்த வார்த்தைகள்... என எல்லாவற்றுக்கும் சர்வதேச நீதிமன்றத்தின் ஊடாகப் பதிலைப் பெற்றுத் தரவே இன்று நாங்கள் கூடியுள்ளோம் என்ற செய்தி மற்றும் "அன்னைத் தமிழீழ மண்ணே" என்ற தாயகப்பாடலுடன் நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.

BEHIND ME MEDIA தற்போது நடாத்திக் கொண்டிருக்கும் நீதிக்கான போராட்டத்தின் அடையாளச் சின்னமாகவுள்ள செம்மணி மனிதப் புதைகுழிக்கு பதிலைக் கேட்கும் அணியில் நாங்களும் இணைந்து கொள்கின்றோம் என்பதோடு தமிழர் நலன் குறித்த சகலரும் ஓரணியாகத் திரள வேண்டும் எனவும் நிகழ்வில் உரையாற்றிய பிரமுகர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டது. உலகளாவிய ரீதியிலான ஆதரவுக் குரல்களோடு நடை



**கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் ஷல்மா ஜாஹித், ஸ்கார்பரோ-ரூஜ் பார்க் நகரசபை உறுப்பினர் நீதன் ஷான் மற்றும் ரொறண்டோ மேயர் பதவி வேட்பாளர் பிராட் பிராட்பேர்ட் ஆகியோர் வருகை நிகழ்வுக்கு வலுச் சேர்த்திருந்தது**

பெற்ற மேற்படி விழித்தெழு தமிழா! நிகழ்வில் செம்மணி மனிதப் புதைகுழிப் பேரவலமே எம்மினத் தின் மீது சிங்களப் பேரினவாத அரசினால் நடாத்தப்பட்ட இனப்படு கொலைக்கான சாட்சியாக உள்ளதை நாம் மறக்கக் கூடாது என்றும் நிகழ்வில் உரையாற்றியவர்கள் தெரிவித் திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் ஷல்மா ஜாஹித், ஸ்கார்பரோ-ரூஜ் பார்க் நகரசபை உறுப்பினர் நீதன் ஷான் மற்றும் ரொறண்டோ மேயர் பதவி வேட்பாளர் பிராட் பிராட்பேர்ட் ஆகியோர் வருகை நிகழ்வுக்கு வலுச் சேர்த்திருந்தது. அவர்கள் எமது போராட்டத்திற்கு பக்க பலமாகவும் உறுதுணையாகவும் இருப்பதோடு சர்வதேச நீதியை எமக்குப் பெற்றுத்தருவதில் தமது பங்கும் பெரிதாக இருக்கும் எனவும் கூறியிருந்தார்கள்.

செம்மணியில் இலங்கை இராணுவத்தால் வயது பேதமின்றி எமது மக்கள் மீது நடாத்தப்பட்ட வன்முறைச் சம்பவங்களை மீளவும் கண்முன்னே கொண்டு வந்த நாடகமானது தமிழினப் படுகொலைக்கு மேலதிகமாக எந்த வித வார்த்தைகளும் மொழியும் தேவையில்லை எனும் அளவுக்கு யதார்த்தமாக அமைந்திருந்தது. ஒவ்வொருவரும் தான் வகித்த கதாபாத்திரத்தின் வலிகளை மிகத் தத்ரூபமாக வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

BEHIND ME MEDIA வின் நிறுவனரும் தலைவருமான கணா செல்வா தனது ஏற்புரையில்,

ஒரு ஊடகம் எதற்காக செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரிய ஒரு நிகழ்வை இரண்டாவது ஆண்டாகவும் நடாத்துகின்றது என்பது குறித்தும் மிகுந்த குரூரமாக கொலை செய்யப்பட்டு செம்மணி மனிதப்புதைகுழியின்... P- 13

# செம்மணி எழுச்சி – அணையா தீபம் விழித்தெழு தமிழா!






**BEHIND ME MEDIA மற்றும் BEHIND ME FOUNDATION ஆகிய நிறுவனங்களின் ஏற்பாட்டில் 'செம்மணி எழுச்சி – அணையா தீபம்' 'விழித்தெழு தமிழா!' நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள்.**



















# செம்மணி எழுச்சி – அணையா தீபம் விழித்தெழு தமிழா!












**BEHIND ME MEDIA மற்றும் BEHIND ME FOUNDATION**
**ஆகிய நிறுவனங்களின் ஏற்பாட்டில் 'செம்மணி எழுச்சி - அணையா தீபம்' 'விழித்தெழு தமிழா!' நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள்.**
















# ஸ்கார்பரோ நார்த் வார்டு 23 ஹான் டோங்கின் பிரசார அலுவலக திறப்பு விழா

BEHIND ME MEDIA










ஸ்கார்பரோ நார்த் வார்டு 23 நகரசபை உறுப்பினர் தேர்தலில் போட்டியிடும் ஹான் டோங் அவர்களின் தேர்தல் பிரசார அலுவலக திறப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆகஸ்ட் 30 அன்று Scarborough 19 Glen Watford Drive இல் நடைபெற்றது. அதன் பின்னர் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பும் இடம்பெற்றன.

ஹான் டோங் அவர்கள், 2014 முதல் 2018 வரை மாகாண நாடாளுமன்ற உறுப்பினராகவும் (MPP), 2019 முதல் 2025 வரை கூட்டாட்சி நாடாளுமன்ற உறுப்பினராகவும் (MP) பணியாற்றியுள்ளார். மாகாண மற்றும் கூட்டாட்சி வரவு-செலவுத் திட்டங்கள், பொது கணக்குகள் மற்றும் மாகாணங்களுக்கு இடையிலான அரசாங்க விவகாரங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அவருக்கு அனுபவம் உள்ளது.

நிதி ரீதியாக பொறுப்பு வாய்ந்தவராகவும் கடின உழைப்பாளராகவும் மக்கள் சேவைகளில் நம்பிக்கைக்குரியவர் என்றும் ஹான் டோங் அவர்கள் பற்றி கனேடிய அரசியல் தளத்தில் பதிவுகள் உண்டு.

மேற்படி நிகழ்வில் தனது அரசியற் செயற்பாடுகள் குறித்து ஹான் டோங் அவர்கள் கருத்து வெளியிட்ட போது குயின்ஸ் பார்க் மற்றும் ஒட்டாவாவில் பணியாற்றிய அனுபவத்தின் மூலம், வரி செலுத்துவோரின் ஒவ்வொரு டாலரையும் எவ்வாறு பயனுள்ளதாக பயன்படுத்துவது என்பதை நான் நன்கு அறிவேன். அக்டோபர் 26 அன்று, உங்கள் ஆதரவை எனக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

கனடாவின் பொருளாதார மற்றும் நிதி இயக்கத்தின் முக்கிய மையமாக விளங்கும் டொராண்டோ, அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகள், திறனற்ற நிர்வாகம், போக்குவரத்து நெரிசல் மற்றும் நீண்டகால தொலைநோக்குப் பார்வையின்மை போன்ற சவால்களை எதிர்கொள்கிறது. குறிப்பாக, சமீப ஆண்டுகளில் உருவாகியுள்ள பல்வேறு நிச்சயமற்ற சூழ்நிலைகளுக்கு மத்தியில், டொராண்டோ தனது போட்டித்திறனைத் தொடர்ந்து நிலைநிறுத்த வேண்டிய அவசியம் உள்ளது.



நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த குடும்பங்கள் பொருளாதார ரீதியாக பின்தங்கிக் கொண்டிருக்கின்றன. நான் தேர்ந்தெடுக்கப்பட்டால், பல தசாப்தங்களாகப் பெற்றுள்ள எனது அரசியல் அனுபவத்தைப் பயன்படுத்தி, டொராண்டோவுக்காக மாகாண மற்றும் மத்திய அரசுகளிடமிருந்து கூடுதல் வளங்களைப் பெற்றுத்தருவதுடன், ஸ்கார்பரோ நார்த்தில் அதிக முதலீடுகளை ஈர்த்து, வேலை வாய்ப்புகளை உருவாக்க பாடுபடுவேன் என அவர் மேலும் தெரிவித்திருக்கின்றார்.







# “ஸ்திரமான தொடக்கம்” : நீதன் ஷானின் பிரசார அங்குரார்ப்பண விழா!

**A powerful start to #TEAMNEETHAN 2026**

BEHIND ME MEDIA







ஸ்கார்பரோ - ரூஜ் பார்க் நகரசபை உறுப்பினர் நீதன் ஷான் அவர்களின் தேர்தல் பிரசாரத்தை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கும் அங்குரார்ப்பண விழா கடந்த ஆகஸ்ட் 27ஆம் திகதி Scarborough, The Church of the Nativity இல் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் நீதன் ஷான் மீண்டும் ஸ்கார்பரோ - ரூஜ் பார்க் தொகுதியின் நகரசபை உறுப்பினராக ஏன் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் கனேடிய அரசியலில் அவரின் வகிபாகத்தின் தேவை குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

நீதன் ஷான் தற்போது ஸ்கார்பரோ - ரூஜ் ரிவர் தொகுதியின் நகரசபை உறுப்பினராக (Councillor) பணியாற்றி வருகிறார். இதற்கு முன்னர், இன உறவுகள் தொடர்பான நகர்ப்புறக் கூட்டமைப்பான Urban Alliance on Race Relations (UARR) அமைப்பின் நிர்வாக இயக்குநராகப் பணியாற்றினார். கல்வித் துறையிலும் தலைமைப் பொறுப்புகளை வகித்துள்ள அவர், ஸ்கார்பரோவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் Toronto District School Board (TDSB) அறங்காவலராகவும், TDSB தலைவராகவும் பணியாற்றியுள்ளார். 2006 முதல் 2010 வரை York Region District School Board அமைப்பின் அறங்காவலராகவும் அவர் சேவையாற்றினார்.

நீதன் தனது தொழில் வாழ்க்கையை மலெர்ன் பகுதியில் இளைஞர் சமூகத் தொடர்புப் பணியாளராகத் தொடங்கினார். பின்னர் அப்பகுதியில் இளைஞர் திட்டங்களுக்கான மேலாளராகப் பொறுப்பேற்றார். பல்வேறு பாடசாலைகளில் 20 - க்கும் மேற்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தினார். கணிதம் மற்றும் அறிவியல் ஆசிரியர், கல்லூரிப் பேராசிரியர், Canadian Tamil Youth Development Centre (CanTYD) மற்றும் Council of Agencies Serving South Asians (CASSA) ஆகிய அமைப்புகளின் நிர்வாக இயக்குநர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளில் அவர் பணியாற்றியுள்ளார்.







CASSA அமைப்பில் பத்து ஆண்டுகள் பணியாற்றிய காலத்தில், தெற்காசிய சமூகங்களுக்கான சுகாதார சமத்துவத்தை முன்னேற்றுவதில் நீதன் முக்கிய பங்காற்றினார். GTA - வைத் தாண்டிய நகராட்சிகளில் உள்ளடக்கத்தை மேம்படுத்தும் பிரச்சாரங்களை முன்னெடுத்தார். மாகாண அளவில் இனவெறி எதிர்ப்பு இயக்குநரகத்தை உருவாக்குவதற்காகக் குரல் கொடுத்தார். மேலும், தெற்காசியர்களுக்கும் சமத்துவத்தில் பின்தங்கிய பிற சமூகங்களுக்கும் சமூக மற்றும் பொருளாதார நீதியை வலியுறுத்தும் வகையில், ஒன்ராறியோ முழுவதும் 100 - க்கும் மேற்பட்ட அமைப்புகளை ஒன்றிணைத்தார்.

சமூக சேவைகள் துறையிலும் நீதனின் ஈடுபாடு விரிவானது. Parent Action on Drugs, Malvern Community Coalition, Community Use of Schools Council, kw;Wk; Scarborough Youth Task Force உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றியுள்ளார்.

தற்போது, அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் இனநீதிக்காக நீதன் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார். கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம் மற்றும் நீதி ஆகிய துறைகளில் அமைப்புசார் கொள்கை மாற்றத்தை ஏற்படுத்துவதில் அவர் கவனம் செலுத்துகிறார். கல்வி, சுகாதாரம் மற்றும் சட்ட உதவிகளுக்கான நிதிக் குறைப்புகளை எதிர்த்து சமூகப் பிரச்சாரங்களை முன்னெடுத்துள்ளார். மேலும், COVID-19 தொற்றுநோய்க்குப் பிந்தைய மீட்பு நடவடிக்கைகள் இனச் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும் என்பதை உறுதி செய்வதற்கான முயற்சிகளையும் தற்போது முன்னெடுத்து வருகிறார்.








மனித உரிமைகளுக்காக அவர் மேற்கொண்ட பணிக்காக நீதன் பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார். அவற்றில் UARR வழங்கிய Race Relations Award மற்றும் Toronto Community Foundation toq;fpa Vital People Award ஆகியவை அடங்கும். டொராண்டோ நகரசபை உறுப்பினராகப் பணியாற்றிய காலத்தில், நகரின் Youth Equity Champion மற்றும் Newcomer Advocate ஆகிய அங்கீகாரங்களையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.









# புதிய கருத்துக்கணிப்பு மேயர் ஒலிவியா சௌ தொடர்ந்து முன்னிலையைத் தக்கவைத்துக் கொள்கிறார்!



தேர்தல் நாளுக்கு இன்னும் இரண்டு மாதங்களே உள்ள நிலையில், கவுன்சிலர் பிராட் பிராட்போர்ட்டை (Brad Bradford) விட மேயர் ஒலிவியா சவ் (Olivia Chow) கருத்துக்கணிப்பில் பெற்றுள்ள முன்னிலை ஸ்திரமாக நீடிப்பதாகத் தெரிகிறது. இருப்பினும், அக்டோபர் 26 அன்று யாருக்கு வாக்களிப்பது என்று வாக்காளர்களில் நான்கில் ஒரு பங்கினர் (24%) இன்னும் முடிவெடுக்கவில்லை.

808 டொராண்டோ வாக்காளர்களிடம் எடுக்கப்பட்ட புதிய பலாஸ் டேட்டா (Pallas Data) கருத்துக்கணிப்பின்படி, மொத்த வாக்காளர்களில் சவ் 38 சதவீத ஆதரவைப் பெற்றுள்ளார். பிராட்போர்ட் 30 சதவீதத்தையும், கிறிஸ் அலெக்சாண்டர் 6 சதவீதத்தையும் பெற்றுள்ளனர். மற்றொரு 2 சதவீதத்தினர் வேறு ஒரு வேட்பாளரை விரும்புவதாகவும், 24 சதவீதத்தினர் இன்னும் முடிவெடுக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

723 வாக்காளர்களிடம் மார்ச் மாதம் எடுக்கப்பட்ட பலாஸ் கருத்துக்கணிப்போடு ஒப்பிடும்போது, சவ்வின் எண்கள் சற்று அதிகரித்துள்ளன. அப்போது சவ் 35 சதவீத ஆதரவையும், பிராட்போர்ட் 29 சதவீத ஆதரவையும் பெற்றிருந்தனர் 25 சதவீதத்தினர் முடிவெடுக்காமல் இருந்தனர். (ஜூலை மாதமே தேர்தலில் போட்டியிடப் பதிவு செய்ததால், மார்ச் கருத்துக்கணிப்பில் அலெக்சாண்டர் சேர்க்கப் படவில்லை).

சவ்வின் 3 சதவீத உயர்வும், பிராட்போர்ட்டின் 1 சதவீத வீழ்ச்சியும் பிழை எல்லைக்குள்ளேயே (Margin of error - சுமார் 5 சதவீதம்) வருகின்றன. இருப்பினும், இந்த உயர்வு சவ்விற்கு ஒரு "மிதமான லாபம்" என்று பலாஸ் டேட்டாவின் தலைமை நிர்வாக அதிகாரி ஜோசப் அங்கோலானோ தெரிவித்துள்ளார்.

முடிவெடுத்த மற்றும் ஒரு குறிப்பிட்ட வேட்பாளரை நோக்கிச் சாயும் வாக்காளர்களை மட்டும் எடுத்துக்கொண்டால், அது ஒலிவியா சவ் இரண்டாவது முறையாக வெற்றி பெறுவதற்கான வாய்ப்பையே காட்டுகிறது என்று அங்கோலானோ கூறினார். முடிவெடுக்காத வாக்காளர்களை விலக்கிப் பார்த்தால், சவ் 50-39 என்ற சதவீதக் கணக்கில் பிராட்போர்ட்டை விட முன்னிலையில் உள்ளார் அலெக்சாண்டர் 8 சதவீதத்திலும், 3 சதவீதத்தினர் வேறு வேட்பாளரையும் ஆதரிக்கின்றனர்.

"லேபர் டே (Labour Day) பிரச்சாரங்கள் தீவிரமடையும் இந்தச் சமயத்தில், இந்த எண்கள் அவரை முதன்மை நிலையில் நிறுத்துகின்றன" என்று அவர் கூறினார். "பிரச்சாரத்தின் இறுதிப் பகுதி தொடங்குகிறது, அவர் முன்னிலையில் இருக்கிறார். அவர் இருக்க விரும்பும் இடம் இதுவே."

முடிவெடுக்காத வாக்காளர்களின் சதவீதம் அதிகமாக இருந்தபோதிலும், ஆதரவளிக்கும் வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதற்கு முன் அவர்கள் வேட்பாளர் களிடமிருந்து கூடுதல் விபரங்களை எதிர்பார்க்கிறார்கள் என்று அர்த்தமில்லை என அங்கோலானோ கூறினார்.

"முடிவெடுக்காத இந்த வாக்காளர்களின் மனநிலை யை எதுவும் மாற்றுவதாகத் தெரியவில்லை, அதாவது இவர்கள் வாக்களிக்கவே வராமல் போவதற்கான சாத்தியக்கூறுகள் மிக அதிகம்" என்று அவர் கூறினார்.

பிராட்போர்ட்டை பொறுத்தவரை, தற்போதைய மேயர் மீதுள்ள அதிருப்தியை மட்டும் மூலதனமாகப் பயன்படுத்தாமல், தானே சிறந்த தேர்வு என்பதை அவர் மக்களுக்கு நிரூபிக்க வேண்டும் என்பதால், அதிகளவில் முடிவெடுக்காத வாக்காளர்கள் இருப்பது சவ்விற்கே சாதகமாக அமைகிறது.

நவீன பிரச்சாரங்களில் "தற்போதைய மேயரை எனக்குப் பிடிக்கவில்லை" என்று கூறுவது மட்டும் போதாது என்று அங்கோலானோ கூறினார். "வாக்காளர்களுக்கும் முதன்மை சவாலளிப் பவருக்கும் இடையே ஒரு நம்பிக்கைப் பாலம் கட்டப்பட வேண்டும். அந்தப் பாலம் இதுவரை கட்டப்படவில்லை அது இல்லாத வரை பிராட்போர்ட்டால் வெற்றி பெற முடியாது."

வாக்களிக்கும் எண்ணம் சார்ந்த புள்ளிவிவரங்கள் சவ் நல்ல நிலையில் இருப்பதை உணர்த்தினாலும், அவரது விருப்பத்தன்மை (Favourability) புள்ளிவிவரங்கள் வேறு திசையைக் காட்டுகின்றன.

ஒட்டுமொத்தமாக, 48 சதவீத பதிலளித்தவர்கள் சவ்வின் மேயர் செயல்பாட்டில் திருப்தியில்லை என்று கூறியுள்ளனர் 37 சதவீதத்தினர் மட்டுமே அவர் நல்ல பணியாற்றியதாக நினைக்கிறார்கள்.

அங்கீகார எண்களைக் குறிப்பிட்டுப் பேசிய அங்கோலானோ, சவ் ஒரு "சவாலான நிலையிலுள்ள மேயர;" எனக் குறிப்பிட்டார். மேலும், "ஒலிவியா சவ் போட்டியிடுவது ஒரு பூரணமான மேன்மைக்கு எதிராக அல்ல, அவர் பிராட்போர்ட்டிற்கு எதிராகவே போட்டியிடுகிறார். மக்கள் பிராட்போர்ட்டை ஒரு சிறந்த மாற்றாகவோ அல்லது நன்கு அறிந்த ஒருவராகவோ நினைக்கவில்லை."

வாக்காளர்கள் பொதுவாக ஆபத்தைத் தவிர்க்கவே விரும்புவார்கள் தங்களுக்குத் தெரியாத, நிலைமையை இன்னும் மோசமாக்கக்கூடிய ஒரு புதிய வேட்பாளரின் மீது சூதாடுவதை விட, தங்களுக்குப் பிடிக்காவிட்டாலும் நன்கு அறிமுகமான வேட்பாளருடனேயே நிற்க விரும்புவார்கள். டொராண்டோ மேயர் தேர்தல்களில் இது மிகவும் உண்மை என்று அவர் கூறினார்.

## போர்க் குற்றவாளி மிலாடிச் காலமானார்



தண்டனை பெற்ற போஸ்னிய செர்பிய போர்க் குற்றவாளியான ரட்கோ மிலாடிச், தி ஹேக் (The Hague) நகரில் உள்ள ஐ.நா சிறையில் தனது 84-வது வயதில் காலமானார்.

1992-95 காலகட்டத்தில் முன்னாள் யுகோஸ்லாவியாவில் நடந்த போர்களின் போது இனப்படுகொலை, போர்க் குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டதற்காக 2017-இல் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

"போஸ்னியாவின் கொடூரன்" (Butcher of Bosnia) என்று அழைக்கப்பட்ட இவருக்கான தண்டனையை 2021-இல் ஐ.நா நீதிமன்றம் மேல்முறையீட்டிலும் உறுதி செய்தது. அவர் இறப்பதற்கு முன் ஐ.நா தடுப்பு மையத்தின் மருத்துவமனையில் தணிக்கை சிகிச்சை (Palliative care) பெற்று வந்தார்.

வியாழக்கிழமை அவரது மரணத்தை உறுதிப்படுத்தி வெளியிட்ட அறிக்கையில், நெதர்லாந்து அதிகாரிகள் இது குறித்து விசாரணையைத் தொடங்கியுள்ளதாக ஐ.நா நீதிமன்றம் தெரிவித்துள்ளது. மேலும், மிலாடிச்சின் மரணத்தின் சூழ்நிலைகள் குறித்து முழுமையான விசாரணை நடத்த நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

போஸ்னிய செர்பிய பிரிவினைவாதத் தலைவர் மிலோராட் டொடிக் (Milorad Dodik), "மிலாடிச் செர்பிய மக்களால் மதிக்கப்பட்டவர். ஒரு தளபதியாக அவர் செர்பியர்களைப் பாதுகாக்க நின்று போராடினார்" என்று கூறினார். பெல்கிரேடைச் சேர்ந்த சிலர், அவர் செர்பிய மக்களைப் பாதுகாப்பதே தனது கடமையாகச் செய்தார் என்றும், அவர் மீது தி ஹேக் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்தது அநீதி என்றும் கருத்து தெரிவித்தனர்.

# பாதுகாப்புத் துறையைப் பலப்படுத்தும் கனடா! உள்ளூர் நிறுவனங்களுக்கு புதிய வாய்ப்புகள்…



உள்நாட்டு உற்பத்திக்கு முக்கியத்துவம்: அமெரிக்க இராணுவப் பொருட்களின் மீதான சார்பைக் குறைக்கும் நோக்கில், கனடா தனது சொந்த பாதுகாப்புத் துறையை வேகப்படுத்தி வருகிறது. பிரீமியம் ஆடை நிறுவனமான 'வக்ஸ்லி' (Wuxly) இராணுவப் சீருடைகள் மற்றும் ஹெல்மெட் உரைகளைத் தயாரிப்பது முதல், பிற உள்ளூர் நிறுவனங்கள் ஆர்க்டிக் மண்டலப் பாதுகாப்பு உணரிகள் (Sensors), ட்ரோன்கள் மற்றும் தன்னாட்சி ரோபோக்களைத் (Autonomous robots) தயாரிப்பது வரை இத்துறை வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது.

பிரதமர் மார்க் கார்னியின் புதிய உத்தி: அமெரிக்காவுடனான வர்த்தக மோதல்கள் மற்றும் வரிகளுக்கு மத்தியில், நாட்டின் பொருளாதார சுயசார்பை அதிகரிக்க பிரதமர் மார்க் கார்னி முயல்கிறார். அடுத்த 5 ஆண்டுகளில் பாதுகாப்புத் துறைக்காக கூ60 பில்லியன் டாலர் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், அடுத்த 10 ஆண்டுகளில் நாட்டின் பாதுகாப்புத் துறையை மும்மடங்காக உயர்த்தவும், 1,25,000 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் அரை டிரில்லியன் டாலருக்கும் அதிகமான முதலீட்டு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கூட்டாண்மைகள்: அமெரிக்க நிறுவனங்களை மட்டும் நம்பியிருக்காமல், சுவீடனின் 'சாப்' (Saab) நிறுவனத்திடம் இருந்து ரேடார் விமானங்களையும், ஜெர்மனியின் 'திஸன்க்ரப்' (ThyssenKrupp) நிறுவனத்திடம் இருந்து நீர்மூழ்கிக் கப்பல்களையும் வாங்க கனடா ஒப்பந்தம் செய்துள்ளது.

இருபயன் தொழில்நுட்பங்கள் (Dual-use technology): 'வோலேட்டஸ் ஏரோஸ்பேஸ்' (Volatus Aerospace) மற்றும் 'நியூ ஃப்ரண்டியர் ரோபோடிக்ஸ்' (New Frontier Robotics) போன்ற கனடிய நிறுவனங்கள் இராணுவத்திற்கும், சிவில் பயன்பாடுகளுக்கும் (மருத்துவ உதவிகளை ட்ரோன் மூலம் வழங்குவது மற்றும் தொழில்துறை பயன்பாடுகள்) ஒரே நேரத்தில் பயன்படக்கூடிய நவீன தொழில்நுட்பங்களை உருவாக்கி வருகின்றன.

BEHIND ME MEDIA

# அமெரிக்காவின் வரி விதிப்புத் திரும்பப் பெறப்படும் - அல்பர்ட்டா மாகாண முதல்வர் ஸ்மித்




அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எரிபொருள் பொருட்களுக்குப் பழிவாங்கும் நோக்கில் பதிலடி வரிகளை விதிக்க அல்பர்ட்டா மாகாணம் உடன்படாது என முதல்வர் டேனியல் ஸ்மித் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

கனடாவின் சுமார் 28 பில்லியன் டாலர் மதிப்புள்ள பொருட்களுக்கு அதிபர் டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ள 50% வரிகளை "துரதிர்ஷ்டவசமானது, நியாயமற்றது மற்றும் முற்றிலும் தேவையற்றது" எனக் கண்டித்துள்ள அதேவேளையில், கனடா அரசு அச்சுறுத்தல்களுக்குப் பதிலாக இராஜதந்திர பேச்சுவார்த்தைகள் மூலம் சூழ்நிலையைத் தணிக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த வர்த்தக மோதலால் அல்பர்ட்டாவின் 1.5 பில்லியன் டாலர் ஏற்றுமதி பாதிக்கப்படலாம் என்ற போதிலும், மாகாணத்தின் முக்கிய தொழில்களான கச்சா எண்ணெய், எரிவாயு மற்றும் கால்நடை இறைச்சித் துறைகள் இதுவரை பாதிக்கப்படவில்லை. வர்த்தகச் சவால்களைச் எதிர்கொள்ளும் சிறு மற்றும் நடுத்தர வணிகங்களுக்கு உதவ சிறப்பு அமைச்சரவைக் குழு மற்றும் ஆலோசனைப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன என அவர் முன்மொழிந்துள்ளார்.

# கனடாவுடனான அலுமினிய ஏற்றுமதிக்கு அமெரிக்காவிற்கு மாற்று இல்லை!



அமெரிக்கா தனது தேவைக்கான முதன்மை அலுமினிய இறக்குமதியில் 75% கனடாவையே நம்பியுள்ளது. கனடா நிறுவனங்கள் ஐரோப்பா போன்ற பிற சர்வதேச சந்தைகளுக்கு எளிதாகத் திருப்புவதன் மூலம் நஷ்டத்தைச் சமாளித்துவிடும். ஆனால் அமெரிக்காவிற்கு மலிவான விலையில் அலுமினியம் வழங்கும் வேறு ஒரு நாட்டைக் கண்டுபிடிப்பது சாத்தியமற்றது என கனடாவின் அலுமினிய சங்கத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஜான் சிமார்ட் (Jean Simard) தெரிவித்துள்ளார்.

அமெரிக்க உற்பத்தியாளர்களுக்கே பாதிப்பு: 50% வரிகளால் கனடிய உற்பத்தியாளர்களை விட அமெரிக்க உற்பத்தி நிறுவனங்களே அதிக நிதி நெருக்கடியைச் சந்திக்கும். ஐரோப்பியப் போட்டியாளர்களை விட மெட்டல் ஒன்றுக்கு $1,500 முதல் $2,000 டாலர் வரை கூடுதலாகச் செலுத்துவதால், அமெரிக்கப் பொருட்கள் சர்வதேச ஏற்றுமதிச் சந்தைகளில் போட்டியிடும் திறனை இழக்கும்.

ஆற்றல் பற்றாக்குறை (Energy Constraint): அமெரிக்காவில் குறைந்த எண்ணிக்கையிலேயே அலுமினியம் உருக்கும் ஆலைகள் உள்ளன. கனடாவைப் போல தொடர்ச்சியான நீர் மின் சக்தி (Hydroelectric power) கட்டமைப்பு அமெரிக்காவிடம் இல்லாத தால், அவர்களால் உடனடியாக உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்க முடியாது.

வேலைவாய்ப்புத் தாக்கம்: கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அலுமினியப் பொருட்களை வைத்து அமெரிக்காவில் உருவாகும் ஒவ்வொரு 1 தொழிலாளரின் வேலைக்கும் 13 வேலைவாய்ப்புகள் உருவாகின்றன. எனவே, இந்த வரிகள் அமெரிக்க உற்பத்தித் துறையையே கடுமையாகப் பாதிக்கும்.

# யாழ் மாவட்ட செயலக பகுதியில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார் மீதான பலப்பிரயோகத்துக்கு தமிழ்த்தலைமைகள் கண்டனம்!

BEHIND ME MEDIA



தமக்கு நீதிவேண்டி யாழ் மாவட்ட செயலகத்துக்கு முன்பாகப் வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் தாய்மார் பொலிஸாரால் பலவந்தமாக வெளியேற்றப் பட்டமையையும், அவற்றை உள்ளே இருந்தவாறு கையடக்கத் தொலைபேசி ஊடாகப் பார்த்துக் கொண்டிருந்த நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக் காரவின் செயலையும் தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப் பட்டோருக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தினால் செவ்வாய்க்கிழமை (25) யாழ் மாவட்ட செயலகத்தில் விசேட நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், அதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் தாய்மார் பொலிஸாரினால் இழுத்துச்செல்லப்பட்டு மாவட்ட செயலகத்துக்கு வெளியே தள்ளிவிடப்பட்டனர்.

அதுமாத்திரமன்றி பேஸ்புக் வாயிலாக ஒளிபரப்பப்பட்ட இந்தப் போராட்டக் காணொளியை நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மாவட்ட செயலகத்துக்குள் இருந்தவாறு அவரது கையடக்கத் தொலைபேசியில் பார்வையிடும் புகைப்படமொன்றும் பேஸ்புக்கில் பரவலாகப் பகிரப்பட்டு பலரதும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது.

இதுகுறித்து கடும் கண்டனம் வெளியிட்டுள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், “வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் தாய்மார் நேற்று முன்தினம் யாழ் மாவட்ட செயலகத்திலிருந்து பொலிஸாரால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கிறோம்“ எனத் தெரிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி, “இந்தச் சம்பவங்களை மாவட்ட செயலகத்துக்குள் இருந்து தனது கையடக்கத் தொலைபேசி ஊடாகப் பார்த்துக்கொண்டிருந்த நீதியமைச்சர் எனக் கூறப்படுபவரின் செயலையும், இவற்றை வெளிக்கொணர்ந்த ஊடகவியலாளர் களை பகிரங்கமாக தாக்கிப்பேசிய அமைச்சர் சந்திரசேகரனின் செயலையும் கடுமையாகக் கண்டிக்கிறோம்“ என்றும் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை இச்சம்பவம் தொடர்பில் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ள ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான புளொட் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், கட்டமைப்பு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதாகக் கூறி ஆட்சிபீடமேறிய தற்போதைய அரசாங்கமும் முன்னைய அரசாங்கங்களைப் போலவே செயற்படுவதாக விசனம் வெளியிட்டுள்ளார்.

மேலும் வலிந்து காணாமலாக்கப் பட்டோரின் உறவினர்கள் உள்ளடங்கலாகக் கடந்தகால மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் போன்ற உள்ளகக் கட்டமைப்புக்களில் நம்பிக்கை இழந்திருப்பதாகவும், சுயாதீன சர்வதேச நீதிப்பொறிமுறையே அவர்களது கோரிக்கையாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று இப்போராட்டம் குறித்துக் கருத்துரைத்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன், “வலிந்து காணாமலாக்கப் பட்டோரின் உறவுகளின் போராட்டம் பல வருடங்களாக இடம்பெற்று வருகிறது. ஆனாலும் இந்தப் போராட்டம் ஏன் அந்த உறவுகளின் போராட்டமாக மட்டுமே இன்னமும் இருக்கிறது? தன் ஒற்றை உறவைத் தேடி அலையும் இந்த அம்மா இனப் படுகொலைக்கான சர்வதேச விசாரணையையே கோரி நிற்கிறார்.

இந்தப் போராட்டத்தினை இந்த அம்மாவுடன் நாங்கள் எங்கள் வசதிக்காக மட்டுப்படுத்திக் கொள்ளலாம். ஆனாலும் அறம் சார்ந்து நிற்கும் இந்த அம்மாவின் போராட்டம் எம் இனத்தின் விடுதலைக்கானது என்பதை உணர மறுக்கிறோம். இந்த அம்மா எங்களுக்காகவுமே போராடுகிறார். சிங்கள பௌத்த பேரினவாத இலங்கை அரசினால் எங்களது இன்னுமொரு உறவு காணாமலாக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே உரத்துக் குரல் கொடுக்கிறார்.

“இவர்கள் தெருவில் நின்று போராடுவதனால் தான் எங்கள் இழப்புக்களும் வலிகளும் இன்னமும் உயிர்ப்புடன் உலக அரங்கில் பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. போராட்டக்காரர்களின் எண்ணிக்கையில் தங்கியிருப்பது அல்ல போராட்டம். இனமாக ஒன்றிணைவோம்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை உள்ளிருந்தே அவதானித்த நீதி அமைச்சர்!

யாழ்.மாவட்ட செயலகத்திற்கு வெளியே காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்புப் போராட்டம் தொடர்பில், நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மாவட்ட செயலகத்தின் உள்ளிருந்தவாறே தனது கைபேசியினூடாக நேரலையில் அவதானித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகத்தின் நிகழ்விற்காக அமைச்சர் வருகை தந்திருந்த வேளையில், வெளியே போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே பரபரப்பான சூழல் நிலவியது. இதன்போது வெளியே இடம்பெற்ற போராட்டக் காட்சிகளை முகநூல் பக்கத்தின் நேரலை ஊடாக அமைச்சர் தனது கையடக்கத் தொலைபேசியில் நேரடியாகக் கண்காணித்துள்ளார்.



# லிபரல் கட்சி எம்.பி.யின் வீட்டில் கார்கள் கொளுத்தப்பட்ட சம்பவம்: தீவைப்புச் சதியா? அரசியல் பிரமுகர்கள் கண்டனம்!

BEHIND ME MEDIA

ஸ்கார்பரோ சென்டர் தொகுதி எம்.பி. சல்மா ஜாஹித்தின் காரும், அருகிலிருந்த வாகனமும் தீக்கிரையாக்கப்பட்டதை அவரது அலுவலகம் உறுதி செய்துள்ளது.

ஸ்கார்பரோ (Scarborough) தொகுதி எம்பியின் வீட்டில் வியாழக்கிழமை அதிகாலை பல கார்கள் தீக்கிரையாக்கப்பட்டதை அடுத்து, இது திட்டமிட்ட தீவைப்புச் சதியா என்ற கோணத்தில் டொரொண்டோ காவல்துறை விசாரணை நடத்தி வருவதாக அவரது அலுவலகம் உறுதி செய்துள்ளது.



ஸ்கார்பரோ சென்டர்-டான் வேலி ஈஸ்ட் (Scarborough Centre-Don Valley East) தொகுதி எம்பி சல்மா ஜாஹித் (Salma Zahid) வியாழக்கிழமை வெளியிட்ட எழுத்துப்பூர்வ அறிக்கையில், அடையாளம் தெரியாத நபர் ஒருவர் நள்ளிரவில் தனது வீட்டிற்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனது காரையும் மற்றொரு வாகனத்தையும் தீவைத்து கொளுத்தியதாகக் கூறியுள்ளார்.

“இரண்டு வாகனங்களும் முற்றாக அழிந்துவிட்டன. வீட்டிற்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை. நானும் எனது குடும்பத்தினரும் பாதுகாப்பாக இருக்கி றோம்,” என்று அவரது அறிக்கை தெரிவிக்கிறது.

“இதன் பின்னணியில் என்ன நோக்கம் இருக்கும் என்பது குறித்து நான் ஊகிக்க விரும்பவில்லை. காவல்துறையின் விசாரணை முடிவுகளுக்காகக் காத்திருக்கிறோம்,” என்றும் அவர் கூறினார்.

மதிய வேளையில் தனது வீட்டிற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய ஜாஹித், இந்தச் சம்பவம் தனது குடும்பத்திற்கு “மிகவும் அதிர்ச்சிகரமான அனுபவமாக” இருந்தது என்றார்.

“நாங்கள் இதில் இருந்து மீண்டு வர முயல்கிறோம்... எனது பாதுகாப்பு, எனது பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் எனது குடும்பத்தின் பாதுகாப்பு குறித்து நான் கவலையடைகிறேன்,” என்று கூறிய அவர், அன்றைய தினம் தனது தொகுதி அலுவலகத்தை மூடியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

(நள்ளிரவில் தனது வீட்டுப் பாதையில் இரண்டு கார்கள் தீக்கிரையாக்கப்பட்டதைத் தொடர்ந்து, செய்தியாளர்களிடம் பேசும் சல்மா ஜாஹித் – படம்: எவன் மிட்சுய்.·.சிபிசி)

பெல்லாமி ரோடு (Bellamy Road N.) மற்றும் லாரன்ஸ் அவென்யூ (Lawrence Avenue E.) பகுதிக்கு அருகில் அதிகாலை 1:20 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக மொத்தம் மூன்று கார்கள் சேதமடைந்ததாக டொரொண்டோ காவல்துறை தெரிவித்துள்ளது. ஆனால், இந்தச் சம்பவத்திற்கும் ஜாஹித்திற்கும் உள்ள தொடர்பை காவல்துறை இன்னும் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்த வில்லை.

வியாழக்கிழமை மின்னஞ்சல் மூலம் தகவலைப் பகிர்ந்த டொரொண்டோ காவல் செய்தித் தொடர்பாளர் ஸ்டெபானி மிசெலி (Stephanie Miceli), அதிகாரிகள் கண்காணிப்பு கேமரா (CCTV) காட்சிகளை ஆய்வு செய்து வருவதாகவும், சாட்சிகளிடம் விசாரிக்க விரும்புவதாகவும் தெரிவித்தார். இது தொடர்பான தகவல் வைத்திருப்ப வர்கள் காவல்துறையைத் தொடர்பு கொள்ளு மாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

தீப்பற்றி எரிந்ததைக் கண்ட அண்டை வீட்டாரின் வாக்குமூலம்

தனது படுக்கையறை ஜன்னல் வழியாக வெளிச்சத்தைப் பார்த்ததாகவும், வெளியே எட்டிப் பார்த்தபோது ஜாஹித் வீட்டின் முன் முற்றத்தில் தீப்பிழம்புகளைக் கண்டதாகவும் அவர் கூறினார்.

“நான் வெளியே ஓடினேன்;... நானும் என் அம்மாவும் அதிர்ச்சியிலும் பதற்றத்திலும் என்ன செய்வதென்று தெரியாமல், அண்டை வீட்டாரை வீட்டை விட்டு வெளியேற்ற முயன்றோம்,” என்று அவர் கூறினார்.

தீ வேகமாக இரண்டு கார்களுக்கும் பரவியதாகவும், அது வீட்டிற்கும் பரவிவிடுமோ அல்லது கார்கள் வெடித்துச் சிதறிவிடுமோ என்று பயந்ததாகவும் ஜாஹித் கூறினார்.

“எங்கள் குடியிருப்புப் பகுதியைக் கருத்தில் கொண்டு பார்க்கையில், நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன்,” என்று அவர் கூறினார்.

லிபரல் கட்சியின் பின்புல எம்பியான ஜாஹித், 2015 முதல் ஸ்கார்பரோ சென்டர் தொகுதியின் எம்பியாக இருந்து வருகிறார். அவர் தற்போது அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக்கான நிலையான குழுவின் தலைவராகவும், கனடா-சீனா நாடாளுமன்ற சங்கத்தின் துணைத் தலைவராகவும் உள்ளார்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து நாடாளுமன்றத்தின் ‘சர்ஜென்ட்-அட்-ஆர்ம்ஸ்’ (sergeant-at-arms) அதிகாரியுடன் ஆலோசிக்கவுள்ளதாக ஜாஹித் தெரிவித்தார்.

இருப்பினும், பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த தகவல்களைத் தங்களால் பகிர முடியாது என்று நாடாளுமன்றத்தின் செய்தித் தொடர்பாளர் மின்னஞ்சல் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளமான ஓ-ல் பதிவிட்டுள்ள பிரதமர் மார்க் கார்னி (Mark Carney), “சல்மாவும் அவரது குடும்பத்தினரும் பாதுகாப்பாக இருப்பதை அறிந்து நிம்மதியடைகிறேன்” என்று குறிப்பிட்டதுடன், இச்சம்பவத்தை “ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று” என்றும் வர்ணித்துள்ளார். “இது வன்முறை மற்றும் அச்சுறுத்தலின் கோழைத்தனமான செயல்,” என்று அவர் கூறினார்.

சல்மாவும் அவரது குடும்பத்தினரும் பாதுகாப்பாக உள்ளனர் என்பதைக் கேட்டுத் தானும் “நிம்மதி அடைந்ததாக” பியர் பொய்லீவ்ரே (Pierre Poilievre) தெரிவித்துள்ளார்.

“இந்தக் கோழைத்தனமான தாக்குதலுக்குக் காரணமான குற்றவாளி பிடிக்கப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்,” என்று அவர் X தளத்தில் பதிவிட்டுள்ளார்.

கனடிய முஸ்லிம்களின் தேசிய கவுன்சில் (NCCM) இச்சம்பவம் குறித்து “அதிர்ச்சியும், அருவருப்பும்” அடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. ஒன்டாரியோ என்.டி.பி. (NDP) கட்சித் தலைவர் மார்ட் ஸ்டைல்ஸும் (Marit Stiles) X தளத்தில் கருத்து தெரிவித்து, இந்தச் செய்தியை “மிகவும் அதிர்ச்சிகரமானது” என்று அழைத்துள்ளார்.





# அமெரிக்க வரிகளுக்கு முகங் கொடுக்க கூடிய கனேடிய மேயர் வேட்பாளர்களின் திட்டங்கள்!

வர்த்தகப் போர் தீவிரமடைந்து வரும் நிலையில், கிரேட்டர் டொராண்டோ பகுதியின் (GTA) மேயர் வேட்பாளர்கள், வரி விலக்கு முதல் “உள்ளூர் பொருட்களை வாங்குவோம்” திட்டங்கள் வரை பல நடவடிக்கைகள் மூலம் சிறு வணிகங்களைப் பாதுகாப்பதற்கான தங்களது திட்டங்களை முன்வைத்து வருகின்றனர்.

அமெரிக்காவின் புதிய 50 சதவீதம் வரையிலான இறக்குமதி வரிகளும், அதற்குப் பதிலடியாகப் பல்வேறு அமெரிக்கப் பொருட்கள் மீது கனடா விதிக்கவுள்ள எதிர்-வரிகளும் ஏற்றுமதியாளர்களையும் எல்லை தாண்டிய வர்த்தகத்தைச் சார்ந்திருக்கும் நிறுவனங்களையும் நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளன. மேலும் இது செலவுகள், வேலைவாய்ப்புகள் மற்றும் அமெரிக்கச் சந்தைக்கான அணுகல் குறித்து நிச்சயமற்ற தன்மையை உருவாக்கியுள்ளது.

டொராண்டோ மற்றும் மிசிசாகா (Mississauga) நகர மேயர் வேட்பாளர்கள் முன்வைத்துள்ள சில முக்கிய வாக்குறுதிகள் கீழே தொகுக்கப்பட்டுள்ளன.

டொராண்டோ நகரம் (City of Toronto)

டொராண்டோ மேயர் வேட்பாளரான ஒலிவியா சௌ (Olivia Chow), நகரம் ஏற்கனவே அமல்படுத்தியுள்ள நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டி, உள்ளூர் வணிகங்களுக்கு ஆதரவளிக்கவும் கனடியப் பொருட்களை வாங்கவும் குடியிருப்பாளர்களை வலியுறுத்துகிறார்.

“டிரம்ப்பின் வர்த்தகப் போர் ஒரு தவறான வணிக அணுகுமுறை,” என்று வியாழக்கிழமை காலை செய்தியாளர்களிடம் கூறிய சௌ, தொடர்ந்து விதிக்கப்படும் வரிகளால் டொராண்டோ மக்களுக்கு மளிகைப் பொருட்களின் விலைகள் மேலும் உயரக்கூடும் என்று எச்சரித்தார்.

வணிக விரிவாக்கம் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் நிறுவனங்களுக்குச் சொத்து வரி விலக்கு அளிக்கும் டொராண்டோவின் நுனுபுநு (Economic Development and Growth in Employment) திட்டத்தை சௌ சுட்டிக்காட்டினார். ஜனவரி 2025-ல் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, இத்திட்டம் சுமார் $220 மில்லியன் கட்டுமான முதலீட்டைக் குறிக்கும் 8 திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளதாகவும், இதன் மூலம் 583 புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கம் மற்றும் 725 வேலைவாய்ப்புகள் தக்கவைக்கப் படும் என்றும் அவர் தெரிவித்தார்.

டொராண்டோ நகரச் கொள்முதல் செலவினங் களில் 98 சதவீதத்திற்கும் அதிகமானவை ஏற்கனவே கனடிய நிறுவனங்களுக்கே செல்கின்றன என்றும், 2026 ஆம் ஆண்டில் சிறு வணிகங்களுக்கான சொத்து வரி குறைப்பை நகரம் 20 சதவீதமாக உயர்த்தியுள்ளது என்றும் சௌ கூறினார்.

அதேவேளையில், மற்றொரு வேட்பாளரான பிராட் பிராட்போர்ட் (Brad Bradford), வர்த்தகப் போர் நீடிக்கும் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 3,500 தொழிற்துறை வணிகங்களுக்கு 25 சதவீத சொத்து வரி விலக்கு அளிக்க முன்மொழிகிறார். இத்திட்டம் வணிக உரிமையாளர்கள் “இந்த நெருக்கடியைச் சமாளிக்கவும், ஊழியர்களை வேலையில் தக்கவைக்கவும் உதவும்” என்று அவர் கூறுகிறார்.

அனுமதிகள், கொள்முதல் மற்றும் வணிக ஆதரவு ஆகியவற்றில் நகரம் வேக செயல்பட வேண்டும் என்று வாதிடும் பிராட்போர்ட், உற்பத்தியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் தொழில்முறைப் பிரதிநிதிகளை ஒன்றிணைக்கும் ஒரு நிரந்தர “வரி-எதிர்ப்பு ஆலோசனைக் குழுவை“ அமைக்கவும், வசதிகளை விரிவாக்கும் அல்லது நவீனமாக்கும் வணிகங்களுக்கு விரைவான ஒப்புதல்களை வழங்கவும் திட்டமிட்டுள்ளார்.

மற்றொரு வேட்பாளரான கிறிஸ் அலெக்சாண்டர் (Chris Alexander), தற்போதைய EDGE திட்டத்தை விரிவாக்குவது, முதலீடுகளை ஈர்ப்பது மற்றும் வர்த்தக நெருக்கடியைச் சமாளிக்க நடைமுறை மூலதனத்தை வழங்குவது உள்ளிட்ட 7 அம்ச நடவடிக்கை திட்டத்தை முன்மொழிந்துள்ளார்.

“புதிய வணிகங்களைத் தொடங்கும் வணிக உரிமையாளர்களுக்கு வர்த்தகச் சொத்து வரிகளைத் திருப்பிச் செலுத்துவதற்கும் EDGE திட்டத்தை விரிவாக்க விரும்புகிறோம்,” என்று அலெக்சாண்டர் பேட்டியில் தெரிவித்தார்.

வரிகளால் குறுகிய கால பணப்புழக்கப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் வணிகங்க ளுக்கு நிதியுதவி வழங்க, கடன் சங்கங்கள் மற்றும் “பிசினஸ் டெவலப்மென்ட் பேங்க் ஆ∴ப் கனடா” ஆகியவற்றை உள்ளடக்கிய “சிறு வணிக பால-ஆதரவுத் திட்டத்தை” (small-business bridge-support program) நகரம் உருவாக்க வேண்டும் என்றும் அவர் முன்மொழிகிறார்.

தெருவோர வியாபாரிகள், உழவர் சந்தைகள் மற்றும் பிற சிறு வணிகங்களுக்கான நகராட்சி உரிமக் கட்டணத்தை 30 சதவீதம் குறைப்பதாகவும், டொராண்டோவின் வணிக மற்றும் குடியிருப்பு சொத்து வரி விகிதாச்சாரத்தை விரைவாகக் குறைப்பதாகவும் அலெக்சாண்டர் கூறினார். மேலும், “மேயராக தனது முதல் இரண்டு ஆண்டுகளில் குடியிருப்புச் சொத்து வரிகளை உயர்த்த மாட்டேன்” என்றும் அவர் உறுதியளித்தார்.

மிசிசாகா நகரம் (City of Mississauga)

மிசிசாகாவில், தற்போதைய மேயர் கேரோலின் பாரிஷ் (Carolyn Parrish), அமெரிக்க வர்த்தகத்துடன் தொடர்புடைய உள்ளூர் வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை காரணமாக இந்த வர்த்தக மோதல் மிகவும் கவலையளிப்பதாகக் கூறுகிறார்.













சுமார் 89,000 மிசிசாகா வேலைவாய்ப்புகள் அமெரிக்க வர்த்தகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன என்றும், மோட்டார் வாகனம், இயந்திரங்கள், எலக்ட்ரானிக்ஸ், பிளாஸ்டிக், தளபாடங்கள், எ∴கு மற்றும் அலுமினியம் உள்ளிட்ட துறைகள் இதனால் பாதிக்கப்படக்கூடியவை என்றும் அவர் குறிப்பிட்டார். பாதிக்கப்பட்ட சிறு வணிகங்களுக்குச் சொத்து வரி மானியம் அல்லது வரி விலக்கு அளிப்பதற்கான சாத்தியக்கூறுகளை நகரம் ஆராய்ந்து வருவதாகப் பாரிஷ் தெரிவித்தார்.

மிசிசாகா மேயர் போட்டியில் போட்டியிடும் பானி க்ரோம்பி (Bonnie Crombie), அமெரிக்க வரிகளால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட தகுதியுள்ள வணிகங்களின் வர்த்தக மற்றும் தொழிற்துறை வரிகளில் ”வட்டியற்ற சொத்து வரி ஒத்திவைப்புகளை” வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தகுதியுள்ள உள்ளூர் சிறு மற்றும் நடுத்தர விற்பனையாளர்களுக்கு 15 நாட்களுக்குள் நகரம் பணத்தைச் செலுத்த வேண்டும் என்றும், “கனடியப் பொருட்களை வாங்குவோம்“ மற்றும் “மிசிசாகாவில் தயாரிக்கப்பட்டது“ கொள்முதலை நிரந்தரமானதாகவும் அளவிடக்கூடியதாகவும் மாற்ற வேண்டும் என்றும் அவரது திட்டம் கோருகிறது.

முக்கிய நிறுவனங்கள் வேலைவாய்ப்பு அல்லது முதலீட்டு முடிவுகளை எதிர்கொள்ளும்போது 48 மணி நேரத்திற்குள் செயல்படும் வகையில் “மேயரின் வரி நடவடிக்கை குழுவை“ (Mayor’s Tariff Action Team) அமைக்கவும் க்ரோம்பி முன்மொழிகிறார்.

மற்றொரு மேயர் வேட்பாளரான ஆல்வின் தெட்ஜோ (Alvin Tedjo), பொருளாதாரத்தைப் பன்முகப்படுத்து வதற்கான ஒரு வாய்ப்பாக மிசிசாகா இந்த வர்த்தக மோதலைப் பயன்படுத்த வேண்டும் என்று கூறினார்.

மிசிசாகாவில் ஐந்தில் ஒரு வேலைவாய்ப்பு அமெரிக்க வர்த்தகத்தைச் சார்ந்து இருந்தாலும், புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்கான பணிப்படை, தொழில்முறைத் தளம் மற்றும் விநியோகச் சங்கிலிக் கட்டமைப்புகள் நகரத்தில் உள்ளதாக அவர் வாதிடுகிறார்.




# இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகருடன் முக்கிய கலந்துரையாடல்!

இலங்கைக்கான கனடிய உயர்ஸ்தானிகர் இசபெல் மார்ட்டின் மற்றும் கனடிய உயர்ஸ்தானிகராலயத்தின் அரசியல் மற்றும் வர்த்தக ஆலோசகர் குவென் டெம்மல் ஆகியோரை வெகுஜன ஊடக அமைச்சில் அண்மையில் சந்தித்து கலந்துரையாடியதாக வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினர் கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.



இந்த சந்திப்பின்போது, இலங்கை அஞ்சல் சேவையின் வளர்ச்சி மற்றும் நவீனமயமாக்கலுக்காக கனேடிய அஞ்சல் சேவையிடமிருந்து தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையின் ஊடகத் துறையில் ஏற்பட்டுவரும் புதிய போக்குகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. குறிப்பாக, ஊடகத்துறையில் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தின் பயன்பாடு உள்ளிட்ட நவீன தொழில்நுட்ப மாற்றங்கள் தொடர்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன.

இலங்கை அஞ்சல் சேவையின் திறனை மேம்படுத்துவதற்கான சர்வதேச தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் ஊடகத்துறையின் புதிய தொழில்நுட்ப வளர்ச்சிகளைப் பயன்படுத்துதல் ஆகிய விடயங்கள் இந்த சந்திப்பில் முக்கியத்துவம் பெற்றதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கைக்கும் கனடாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான சிறந்த வாய்ப்பாக இந்த சந்திப்பை கருதுவதாக கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன குறிப்பிட்டுள்ளார்.

கனடா மற்றும் இலங்கைக்கு இடையிலான ஒத்துழைப்பை பல்வேறு துறைகளில் மேலும் விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு கடந்த 30 ஆம் திகதி யாழில் நடைபெற்ற கண்ணீர்ப் பேரணி

BEHIND ME MEDIA



### வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் கண்ணீர்ப் பேரணி...

வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு, வலிந்து காணாமலாக்கப் பட்டோரின் உறவுகளால் யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சர்வதேச மாநாட்டை நோக்கிய பேரணி கடந்த (30) ஞாயிற்றுக்கிழமை காலை ஆரம்பமானது.

இதன் போது, யுத்தகாலத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்ட மற்றும் கொல்லப் பட்ட உறவுகளை நினைவுகூர்ந்து, ஈகைச் சுடரேற்றப்பட்டது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் புகைப் படங்களை ஏந்திய பேரணி ஊர்தி முன்னால் தாய்மார் மற்றும் உறவுகள் கண்ணீர் சிந்தியவண்ணம் பங்கேற்றனர்.









# யாழில் இடம்பெற்ற ”நீதிக்கான நீள் பயணம்”








வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த 30ஆம் திகதி நடைபெற்ற சர்வதேச மாநாடு.

வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட ”நீதிக்கான நீள் பயணம்” - சர்வதேச மாநாட்டை நோக்கிய பேரணி கடந்த 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஆரம்பமானது.

இதன்போது, யுத்தகாலத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்ட மற்றும் கொல்லப்பட்ட உறவுகளை நினைவுகூர்ந்து, ஈகைச்சுடரேற்றப்பட்டது. வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் புகைப்படங்களை ஏந்திய பேரணி ஊர்தி முன்னால் தாய்மார் மற்றும் உறவுகள் கண்ணீர் சிந்தியவண்ணம் பங்கேற்றனர்.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் சர்வதேசத்தின் பங்கேற்புடன் கூடிய சுயாதீன குற்றவியல் நீதிப்பொறிமுறை ஒன்று அவசியம் என வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத் தலைவி கனகரஞ்சனி யோகராசா தனது உரையில் தெரிவித்தார்.

“வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளுக்காகப் போராடி வரும் ஒவ்வொரு தாயும் உயிரிழக்கும்போதும், எதிர்கால நீதிக்கான ஒரு சாட்சியம் அழிகிறது. எனவே, இந்த சாட்சியங்கள் தற்போதே முறையாகப் பதிவுசெய்யப்பட வேண்டும்.

மனிதப் புதைகுழிகள் தொடர்பான விசாரணைகள் வெறுமனே ஒரு தொழில்சார் பணியாக இருக்கக்கூடாது. மாறாக, அவை நீதியை நோக்கிய பயணமாக அமைய வேண்டும். இன்றைய சர்வதேச மாநாட்டின் ஊடாக ‘எங்களுடைய உறவுகள் எங்கே?’ என்ற முக்கியமான செய்தியை சர்வதேச சமூகத்தை நோக்கி அனுப்பி வைக்கின்றோம்” என்றார்.









இலங்கையின் பொறுப்புக்கூறலின் ஆழமான தோல்வியைப் பிரதிபலிக்கிறது - சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்திருக்கின்றது. வலிந்து காணாமலாக்கப்படல்களுக்கு நீதி கோரிய போராட்டம் இலங்கையில் பொறுப்புக்கூறலின் ஆழமான தோல்வியைப் பிரதிபலிக்கிறது என சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசியப்பிராந்தியப் பணிப்பாளர் ஸ்மிரிதி சிங் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் உண்மை மற்றும் நீதி ஆகிய இரண்டுக்கும் உரித்துடையவர்களாவர்.

அரசாங்கம் நல்லிணக்கம் பற்றிப் பேசுகின்ற போதிலும், அரசாங்கத்தின் நோக்கத்துக்கும் செயலுக்கும் இடையில் பெரும் இடைவெளி காணப்படுகிறது என்றார்.

வலிந்து காணாமலாக்கப்படல்கள் பற்றிய ஆதாரங்கள் உள்ள போதிலும் அரச அதிகாரிகள் மறுப்பதை வலுவாக எதிர்க்கிறோம் = ஐ.நா. பணிக்குழு உறுப்பினர் தனது கருத்தை அங்கே பகிர்ந்திருந்தார்.

வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் முறையான நம்பகமான ஆதாரங்கள் உள்ள போதிலும், அவற்றை அரச அதிகாரிகள் மறுப்பதை நாம் வலுவாக எதிர்க்கிறோம் என வலிந்து காணாமலாக்கபடலகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் பணிக்குழுவின் உறுப்பினர் அனா லொரெனா டெல்கடில்லோ பேர்ஸ் தெரிவித்தார்.

இன்றைய நாளை வலிந்து காணாமலாக்கப் படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினம் என்பதைப் போலவே “கொடூர மனிதர்களின் தினம்” என்றும் அடையாளப்படுத்த முடியும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் தெரிவித்தார். கொடூர மனிதர்களாலேயே எமது உறவுகள் காணாமலாக்கப்பட்டனர்.

அத்துடன், நீதிக்கான செயன்முறையின் பொறுப்பாளிகள் நியாயமானவர்களாக இருந்தால் நீதிக்கான பயணம் மிகக் குறுகியதாகும் எனக் குறிப்பிட்ட அவர், எனவே அத்தகைய நியாயமானவர்களை இதற்குப் பொறுப்பாக



நியமிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு ஆரம்பிக்கப்பட்டது முதல் நீதி நிலைநாட்டப்படும் வரையான அனைத்து செயன்முறைகளிலும் சர்வதேசத்தின் கண்காணிப்பும் வகிபாகமும் அவசியம் என வேலன் சுவாமிகள் மாநாட்டில் வலியுறுத்தியிருந்தார்.

# முன்னணி சமூக ஊடக வலைத்தளங்களில் விற்கப்படும் பெண்களின் புகைப்படங்கள்?

BEHIND ME MEDIA

பேஸ்புக் உள்ளிட்ட முன்னணி சமூக ஊடக வலைத்தளங்களில் பல்வேறு குழுக்களை உருவாக்கி, சிறுவர்கள் மற்றும் பெண்களின் ஆபாச காணொளிகள் மற்றும் தனிப்பட்ட புகைப்படங்களை பணத்திற்கு விற்கும் மற்றும் வாங்கும் இணைய மோசடி குறித்து தகவல்கள் வெளியாகி உள்ளதாக சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலைமை தொடர்பில் அமைச்சின் முழுமையான கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், பெண்கள் மற்றும் சிறுவர்கள் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்குத் தேவையான துரித தலையீடுகளை மேற்கொண்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



மேற்கொள்ளப்பட்ட ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்த தகவல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக, இலங்கை பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்திற்கும், கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கும் இவ்விடயம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மோசடிக் குழுக்களை சோதனையிட்டதில், போலி கணக்குகள் ஊடாக தமது நெருங்கியவர்கள் மற்றும் குடும்பப் பெண்களின் புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை இவ்வாறு விற்பனை செய்ய முயற்சிப்பது தெரியவந்துள்ளது.

இந்தக் குழுக்களில் பெரும்பாலானவை வெளிநாடுகளில் இருந்து செயற்படுத்தப்படுவதும் கண்டறியப்பட்டுள்ளது.

தமது குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் மற்றும் சிறுவர்கள் வீட்டிலேயே ,வ்வாறு பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளப்படும் அபாயம் உள்ளதால், பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் சமூக ஊடகப் பயன்பாடு மற்றும் அவர்கள் பழகும் நண்பர்கள் குறித்து மிகுந்த அவதானத்துடன் ,ருக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

ஒருவேளை குடும்ப உறுப்பினர் ஒருவர் இத்தகைய மோசடியில் பாதிக்கப்பட்டவராகவோ அல்லது இதற்கு அடிமையானவராகவோ காணப்பட்டால், உடனடியாக அவர்களை உளவியல் சமூக ஆலோசனைகளுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, இவ்வாறான சட்டவிரோதச் செயல்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ளவும், உரிய சட்ட உதவிகளைப் பெற்றுக் கொள்ளவும் சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சினால் 1938 மற்றும் 1929 ஆகிய கட்டணமில்லா உதவி தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

மேலும், இந்த அபாயகரமான நிலைமை குறித்துப் பயனர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, சமூக ஊடக ஆர்வலர்களும் தற்போது இணையத்தில் ஏராளமான கட்டுரைகள் மற்றும் காணொளிகளை வெளியிட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

# ஐக்கிய நாடுகள் சபைக்கு இலங்கை அரசாங்கத்தின் பதில்



நீதிபதிகளின் ஓய்வு வயதை நீடிக்கவும், நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் முன்மொழியப்பட்டுள்ள திருத்தமானது நீதித்துறையின் சுதந்திரத்தில் எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத்தாது என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளின் சுதந்திரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் மார்கரெட் சட்டெர்வெயிட் (Margaret Satterthwaite) வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றுக்குப் பதிலளிக்கும் விதமாகவே இலங்கை அரசாங்கம் தனது உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள அரசியலமைப்புத் திருத்தத்தின் ஊடாக நீதித்துறையின் நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை உயர்த்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் மூலம் தற்போது சேவையில் உள்ள நீதிபதிகளின் ஓய்வு வயதும் நீட்டிக்கப்படுவதாக விசேட அறிக்கையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, இது நிறைவேற்றுத்துறையின் தலையீடு இன்றி இடம்பெறுவதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நீதிமன்றங்களில் அதிகளவான வழக்குகள் தேங்கிக் கிடப்பதைக் குறைப்பதும் தாமதங்களைக் குறைப்பதும் இத்திருத்தங்களின் பிரதான நோக்கமாகும் என குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நீர்கொழும்பு சிறையின் பிரதான ஜெயிலர் உள்ளிட்ட 20 பேருக்கு அழைப்பாணை

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலில் 32 பேர் உயிரிழந்தமை தொடர்பான சந்தேகநபர்களை அடையாளம் காணும் அணிவகுப்புக்காக 20 பேருக்கு அழைப்பாணை விடுக்குமாறு நீர்கொழும்பு பிரதான நீதவான் ஷிலானி பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதல்களுடன் தொடர்புடைய வழக்கு கடந்த 28 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் செப்டம்பர் 8 ஆம் திகதி நீர்கொழும்பு நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு நீர்கொழும்பு பிரதான ஜெயிலர் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட 20 பேருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.



இதன்போது, கடந்த வழக்கு விசாரணையின் போது குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் 70 சந்தேகநபர்கள் பெயரிடப்பட்டிருந்ததுடன், சந்தேகநபர் இலக்கம் 1 முதல் 6 வரையிலானவர்கள் இன்று அடையாளம் காணும் அணிவகுப்புக்காக ஆஜர்படுத்தப்படவிருந்தனர்.

எவ்வாறாயினும், சுகாதாரக் காரணங்கள் மற்றும் வேறு வழக்கு நடவடிக்கை காரணமாக சந்தேகநபர்கள் இருவர் இன்று ஆஜர்படுத்தப்படவில்லை என்பதுடன், நான்கு சந்தேகநபர்களும் அவர்களை அடையாளம் காண்பதற்காகக் குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் நான்கு சாட்சிகளும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

ஆஜர்படுத்தப்படாத இரண்டு சந்தேகநபர்கள் தொடர்பில் சிறைச்சாலை தரப்பினால் நீதிமன்றத்திற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது. இதன்போது, அடையாளம் காணும் அணிவகுப்புக்காக நான்கு சாட்சிகள் ஆஜராகியதுடன்,

அவர்கள் சந்தேகநபர்களை அடையாளம் கண்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக இதுவரை 2,100 க்கும் மேற்பட்டவர்களிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் பல வாக்குமூலங்களைப் பதிவு செய்ய வேண்டியுள்ளதாகவும் குற்றப் புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

நீர்கொழும்பு சிறைச்சாலை கைதிகள் இரு தரப்பினரிடையே கடந்த ஜூலை 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் ஏற்பட்ட மோதலில் 10 சிறைச்சாலை அதிகாரிகளும் 22 கைதிகளும் உயிரிழந்ததுடன், 100 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். போதனா வைத்தியசாலை குடிநீர் - கழிவுநீர் முகாமைத்துவத் திட்டம்!

BEHIND ME MEDIA

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி Shannon Cowlin மற்றும் ஆலோசகர்கள், வடமாகாண மற்றும் யாழ். மாவட்ட தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பொறியியலாளர்கள் அண்மையில் விஜயம் மேற்கொண்டனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் தினமும் பல்லாயிரக்கணக்கான நோயாளிகள், பார்வையாளர்கள் மற்றும் பணியாளர்கள் வந்து செல்கின்றனர். எனவே, வைத்தியசாலையில் அனைவருக்கும் போதுமான அளவு பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதை உறுதிப்படுத்துவதுடன், வைத்தியசாலையிலிருந்து வெளியேறும் கழிவுநீரை முறையாகச் சுத்திகரித்து வெளியேற்றுவதற்கான கட்டமைப்பையும் மேம்படுத்த வேண்டிய அவசியம் குறித்து இவ்விஜயத்தின்போது கலந்துரையாடப்பட்டது.









வடக்கின் முக்கிய குடிநீர்த் திட்டமான தாளையடி கடல்நீரை நன்னீராக்கும் நிலையத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் நீர் தற்போது யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இதன் ஒரு பகுதியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கும் இந்நீர் கிடைக்கின்றது. வைத்தியசாலையின் உள்ளக நீர் சேமிப்பு மற்றும் விநியோகக் கட்டமைப்புகளை மேலும் சீரமைத்து, பாதுகாப்பான குடிநீரை பரவலாக வழங்குவதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி சாதகமான அக்கறையை வெளிப்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீரின் தரம் பல இடங்களில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், குடிநீருக்காக போத்தல் நீர் உள்ளிட்ட பல்வேறு நீர் மூலங்களில் தங்கியிருக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. இந்நிலையில், தாளையடியில் நவீன தொழில்நுட்பத்தின் மூலம் சுத்திகரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் நீரை குடிநீர் மற்றும் ஏனைய பாதுகாப்பான பயன்பாடுகளுக்கு அதிகளவில் பயன்படுத்துவது சிறந்த மாற்றாக அமையும்.

அதேவேளை, சிறிய பிளாஸ்டிக் போத்தல்களில் அடைக்கப்பட்ட நீரின் தரம், சேமிப்பு முறை மற்றும் நீண்டகால வெப்பத் தாக்கம் போன்ற விடயங்களிலும் கவனம் செலுத்த வேண்டும். பிளாஸ்டிக் போத்தல்கள் நீண்ட நேரம் அதிக வெப்பம் அல்லது நேரடி சூரிய ஒளியில் வைக்கப்படுவது நீரின் தரத்தைப் பாதிக்கக்கூடிய காரணியாக இருக்கலாம். எனவே உரிய தரநிலைகளுக்கு அமைவாக வழங்கப்படும் குடிநீருக்கு முன்னுரிமை வழங்குவது சிறந்தது.

மேலும், எமது பிரதேசத்தில் ஒருமுறைப் பயன்பாட்டு பிளாஸ்டிக் தண்ணீர் போத்தல்களின் பயன்பாட்டைக் குறைப்பதும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு மிகவும் அவசியமானதாகும்.

## காத்திரமாக அமைந்த செம்மணி எழுச்சி : அணையா தீபம் விழித்தெழு தமிழா!

தொடர்ச்சி

ஊடாக எலும்புகளாக தோண்டி எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற எமது உறவுகளுக் காக குரல் கொடுக்க வேண்டியது ஒவ்வொரு தமிழனதும் தார்மீகப் பொறுப்பு என்பது குறித்தும் தனது கருத்துக்களைப் பதிவு செய்தார்.

அத்துடன் ஒரு சில அமைப்புகளைத் தவிர ஏனைய கனேடிய தமிழ் அமைப்புக்களைச் சேர்ந்தவர்களை பல்வேறு விதமாக வழிகளில் அழைத்தும் அவர்கள் வரவில்லை. 2009ஆம் ஆண்டுக்குப் பின் எம்மினத்தின் அடையாளங்களாகத் தங்களைக் காட்டிக் கொண்டவர்கள் எங்கே போனார்கள்? ஆனால் ஒரு ஊடகமான நாம் நடாத்திக் கொண்டிருக்கின்ற நீதிக்கான போராட்டத்தில் பல ஊடகங்கள் இன்று எம்முடன் இணைந்து கொண்டிருக்கின்றார்கள் இது எமது செயற்பாடுகள் சரி என்பதற்கான ஆதாரம் தானே என்றார்.

எமக்குப் பின்னால் எவ்வளவு இளைஞர்கள் இருக்கின்றார்கள். நாம் யாரையும் பலவந்தமாக இங்கே அழைக்கவேயில்லை. என அவர் குறிப்பிட்டுக்கொண்டிருந்த போது நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒருவர் “தேசியத் தலைவரின் பெயரைச் சொல்லி வாழத் தான் இன்று இங்கே வராதவர்கள் இருக்கின்றார்களே தவிர எமது மக்களுக்காக இல்லை” எனக் குறிப்பிட்டிருந்தார்.

மேற்படி போராட்ட நிகழ்வுக்கு நிதி உதவிகள், அனுசரணைகள் வழங்கியோர் சகலருக்கும் நன்றிகளைத் தெரிவித்த கணா செல்வா அவர்கள், அழித்தொழிக்கப்பட்ட எம்மினத்துக்கு நீதி கேட்கும் இன்றைய நிகழ்வில் கலந்து கொள்ளாத கனேடிய தமிழ் அரசியல்வாதிகளை நோக்கி நீங்கள் அமைப்புக்களின் பின்னால் தான் நிற்பீர்கள் என்றால் ஏன் எம்மினத்தவரிடம் வாக்குக் கேட்டுச் செல்கிறீர்கள்? எனக் கேள்வி எழுப்பியிருந்தார்.

‘செம்மணி மனிதப் பேரவலத்தை’ சர்வதேச சமூகத்தின் கவனத் துக்குக் கொண்டு வந்து பன்னாட்டு விசாரணைக்குரிய அழுத்தத்தை கொடுக்க வேண்டியது புலம்பெயர் சமூகத்தின் தார்மீகப் பொறுப்பு அதை நாம் சரிவரச் செய்ய வேண்டும் என்று கூறி நிகழ்வில் இணைந்திருந்த சகலருக்கும் நன்றிகளைத் தெரிவித்து தனது உரையை நிறைவு செய்தார்.

தாயக எழுச்சிப் பாடல்கள், நடனங்கள், ஆவணத் தொகுப்புக்கள்... பிரமுகர்களின் கருத்துக்கள், எதிர்காலச் செயற்பாடுகள் குறித்த திட்டங்களோடு செம்மணி எழுச்சி - அணையா தீபம் விழித்தெழு தமிழா! நிகழ்வு நிறைவுபெற்றது.



## “ஒன்ராறியோ ஏரி” திறப்பு: நாங்கள் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம் : ஒன்ராறியோ முதல்வர் டக் ஃபோர்ட்

தொடர்ச்சி

மேலும் தொடர்ந்த அவர், ”நாங்கள் மனஉறுதியும் வலிமையும் கொண்ட கனடியர்கள். நாங்கள் எப்போதும் எங்கள் இறையாண்மையைப் பாதுகாப்போம். எந்தவொரு அடாவடிக்காரருக்கும் (Bully) நாங்கள் ஒருபோதும் பணிய மாட்டோம்” என ஆவேசமாகத் தெரிவித்தார்.பிரதமர் மார்க் காரினியின் எதிர்ப்பு:கனடிய பிரதமர் மார்க் காரினியும் (Mark Carney) இந்த பெயர் மாற்றத்தை முற்றாக நிராகரித்துள்ளார்.

இந்த ஏரியின் 400 ஆண்டுகால வரலாற்றையும், பழங்குடி வெண்டாட் (றுநனெயவ) மொழியில் இதன் பெயருக்கான அர்த்தத்தையும் அவர் சுட்டிக்காட்டினார். ‘ஒன்டாரியோ’ (Ontari'io) என்ற வெண்டாட் மொழிச் சொல்லுக்கு ”அழகான ஏரி, பெரிய ஏரி” என்று பொருளாகும். இந்தப் பெயர் கனடாவின் கூட்டமைப்பு மற்றும் அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனம் ஆகிய இரண்டிற்கும் முந்தையது என பிரதமர் காரினி தனது பதிவில் குறிப்பிட்டிருந்தார். ‘அனைத்து முடிவுகளும் பரிசீலனையில் உள்ளன’ வர்த்தகப் பேச்சுகளில் ஒட்டாவா (மத்திய அரசு) எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் தனது முழு ஆதரவு உண்டு எனத் தெரிவித்த டக் ஃபோர்ட், கனடிய தொழிலாளர்கள் மற்றும் வணிகங்களைப் பாதுகாக்கும் ஒரு நியாயமான ஒப்பந்தத்தை எட்ட அனைத்து மாகாணங்களும் ஒன்றாக இணைந்து செயல் படுவதாகக் கூறினார்.

அமெரிக்கா முன்வைத்த முந்தைய வர்த்தக யோசனைகள் மிகவும் மோசமானவை என்றும், அது எஃகு, வாகன உற்பத்தி போன்ற ஒன்ராறியோவின் முக்கிய பொருளாதாரத் துறைகளைப் பாதித்திருக்கும் என்றும் சாடிய அவர், ”ஒரு மோசமான ஒப்பந்தத்தை விட, ஒப்பந்தமே இல்லாமல் இருப்பது நல்லது” என்றும் குறிப்பிட்டார்.

# கனடா புங்குடுதீவு பழைய மாணவர்கள் சங்கத்தின் 30வது ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டியும்!

BEHIND ME MEDIA





கனடா புங்குடுதீவு மக்கள் ஒன்றியமானது ஒன்ராறியோவின் ஸ்கார்பரோவில் உள்ள மோர்னிங்சைட் பூங்காவில் புங்குடுதீவு பழைய மாணவர்கள் சங்கத்தின் 30 - வது ஆண்டுவிழா மற்றும் விளையாட்டுப் போட்டியை கடந்த ஆகஸ்ட் 29 ஆம் திகதி மிக பிரம்மாண்டமாக நடத்தியது. நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட இந்த நிகழ்வு தகுந்த திட்டமிடல்கள் ஒருங்கிணைந்த செயற்பாடுகள் ஊடாக சிறப்பாக நடைபெற்றது.

பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் ஸ்ரீலங்காவிலிருந்து வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீ கஜனும் புங்குடுதீவைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உலகெங்கும் பரந்து வாழ்ந்து கொண்டிருக்கும் - புங்குடுதீவைத் தாயகமாகக் கொண்ட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஸ்கார்பரோ மோர்னிங்சைட் பூங்கா புங்குடுதீவு மக்களது கலாசார பாரம்பரிய மையமாக அன்றைய தினம் முற்று முழுதாக மாறியிருந்தது. புலத்தில் வாழ்ந்தாலும் எமது பாரம்பரியத்தோடு மீண்டும் இணைந்து கொண்டமை மன நிறைவைத் தந்ததாக கூடியிருந்தவர்கள் சிலாகித்துக் கொண்டார்கள்.

குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு விளையாட்டு கள் முதல் பெரியவர்களுக்கான பொது மற்றும் பாரம்பரிய விளையாட்டுக்கள் என காலை தொடக்கம் மாலை வரை பூங்காவில் கலகலப்புக்குப் பஞ்சமிருக்கவில்லை.

அது மாத்திரமன்றி சுவையான பாரம்பரிய சைவ மற்றும் அசைவ உணவுகள், இனிப்புகள், கார தின்பண்டங்கள் மற்றும் பழங்கள் என ஒரு தொடர்ச்சியாக விருந்துபசாரங்களும் நடைபெற்றுக் கொண்டேயிருந்தன.

இங்கே குறிப்பிடத்தக்க மற்றுமொரு விடயம் தங்களின் தாயகமான புங்குடுதீவு மண்ணுடன் புலம்பெயர் மக்கள் கொண்டுள்ள நீடித்த நேசத்தின் பிரதிபலிப்பாக புங்குடுதீவு மக்களுக்குத் தேவையான மேம்பாடுகள், உட்கட்டமைப்பு திட்டங்கள் மற்றும் தற்போதைய தொண்டு உதவிகள் குறித்து கலந்துரையாடுவதற்கான ஒரு தளமாகவும் இந்த ஒன்றுகூடல் அமைந்திருந்தது.












2026 September, 01
219, Kandy Road Jaffna.
Tel : +94762390159,
+14376883493
Email:
info@behindmemedia.com,
website:
www.behindmenews.org

## ‘ஒன்ராறியோ ஏரி’ பெயரில் புதிய ஆடைகளை அறிமுகப்படுத்தி கனடிய நிறுவனங்கள் எதிர்ப்பு!

ஒன்ராறியோ ஏரி’யின் (Lake Ontario) பெயரை ”அமெரிக்கா ஏரி” (Lake America) என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மாற்றியமைத்ததற்கு எதிராக, கனடிய நிறுவனங்கள் ‘ஒன்ராறியோ ஏரி’ எனும் வாசகம் பொறித்த புதிய ஆடைத் தயாரிப்புகளை அறிமுகப்படுத்தித் தங்களின் ஆதரவையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்தி வருகின்றன.

கனடா மற்றும் அமெரிக்கா இடையிலான வர்த்தகப் போர் தீவிரமடைந்து வரும் வேளையில், டிரம்பின் இந்த நடவடிக்கையை கனடிய நிறுவனங்கள் கனடாவில் தயாரிக்கப்படும் (Made-in-Canada) பொருட்களின் முக்கியத்துவத்தை உலகிற்கு உணர்த்தும் வாய்ப்பாகப் பயன்படுத்தி வருகின்றன.

கனடிய ஆடை நிறுவனமான “ஜாக்பைன்” (Jackpine) அமைப்பின் இணை நிறுவனரும் முதன்மை செயல் அதிகாரியுமான (CEO) லியாம் மூனி (Liam Mooney), CP24 ஊடகத்திற்கு அளித்த பேட்டியில், ”ஒன்ராறியோ ஏரி” என்று எழுதப்பட்ட தொப்பிகள் மற்றும் டி-ஷர்ட்டுகளைத் தங்களது நிறுவனம் விரைவாக உற்பத்தி செய்யத் தொடங்கி யுள்ளதாகத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறுகையில்:

”கனடியர்களுக்கு இந்த ஏமாற்றமளிக்கும் தருணத்தில், மக்களை ஒன்றாக இணைப்பதில் நாங்கள் பெருமைப்படுகிறோம். இது எங்கள் ஏரி. இது ஒன்ராறியோ ஏரி, இதன் பெயர் ஒருபோதும் மாறப்போவதில்லை. இந்த அரசியல் சர்ச்சையை வெறும் வியாபாரமாக்காமல், கனடிய தயாரிப்புகள், தொழில் நுட்பம் மற்றும் கனடியர்களின் திறமையை வெளிப்படுத்தவே நாங்கள் இதைச் செய்கிறோம்” என்றார்.

முன்னதாக, இந்நிறுவனம் உருவாக்கிய “கனடா விற்பனைக்கு அல்ல” (Canada Is Not For Sale) எனும் வாசகம் பொறிக்கப்பட்ட தொப்பியை ஒன்ராறியோ மாகாண முதல்வர் டக் ∴போர்ட் அணிந்தது பெரும் வரவேற்பைப் பெற்றதுடன், சமூக வலைதளங்களில் வைரலானது குறிப்பிடத்தக்கது.




ஜாக்பைன் நிறுவனத்தைத் தவிர, “புரோவின்ஸ் ஆ∴ப் கனடா“ (Province of Canada) என்ற மற்றொரு ஆடை நிறுவனமும் “ஒன்ராறியோ ஏரி“ பொறிக்கப்பட்ட ஆடைகளை விற்பனைக்குக் கொண்டுவந்துள்ளது.

தங்களது ஒவ்வொரு விற்பனை ஆர்டரிலிருந்தும் 15 சதவீத தொகையை, கனடாவின் பழங்குடியின (First Nations, Inuit and Métis) மாணவர்களின் கல்விக்காகச் செயல்படும் “இன்ஸ்பயர்” (Indspire) என்ற தொண்டு நிறுவனத்திற்கு நன்கொடையாக வழங்கவுள்ளதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

நாட்டின் பல்வேறு நகரங்களில் உள்ள ஆடை ஆலைகள் மற்றும் உள்ளூர் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து உருவாக்கப்படும் இந்த உடைகள், கனடியர்களின் ஒற்றுமையின் அடையாளமாகப் பார்க்கப்படுகின்றன.

## செம்மணி இனப்படுகொலைக்கு கனேடிய தமிழ் அரசியல்வாதிகள் ஆதரவா? நீதன் ஷானைத் தவிர ஏனையோர் எங்கே? வாக்களித்த கனேடியர்கள் கேள்வி!

செம்மணி இனப்படுகொலைக்கு நீதி கோரி BEHIND ME MEDIA நடாத்திய போராட்டத்தில் கனேடிய தமிழ் அரசியல்வாதிகளில் நீதன் ஷானை ஒருவரைத் தவிர ஏனைய கனேடிய தமிழ் அரசியல் வாதிகள் ஏன் இணைய மறுத்தார்கள்? அவர்கள் செம்மணி இனப்படுகொலைக்கு ஆதரவா? என வாக்களித்து கனேடிய பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்த மக்கள் கேள்வியெழுப்பியுள்ளார்கள்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமான நேற்று ஆகஸ்ட் 30 ஆம் திகதி BEHIND ME MEDIA மற்றும் BEHIND ME FOUNDATION ஆகிய நிறுவனங்களின் ஏற்பாட்டில் ‘செம்மணி எழுச்சி - அணையா தீபம்’ ‘விழித்தெழு தமிழா!’ நிகழ்வு பெருந்திரளான மக்களின் ஆதரவுடன் கனடா ALBERT CAMPBELL SQUARE இல் நடைபெற்றது.

காணாமற் போன எம் உறவுகள் குறித்த உண்மைகள் வெளிவரவேண்டும் என்ற எம்மினத்தின் ஆறாத வலிகள், தேடல்கள், காத்திருப்புக்கள், போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், மௌனித்த வார்த்தைகள்... என எல்லாவற்றுக்கும் சர்வதேச நீதிமன்றத்தின் ஊடாகப் பதிலைப் பெறுவதற்கு நேற்றுக் கூடிய நிகழ்வில் உங்களுக்காகக் குரல் கொடுக்க எங்களைத் தலைவராக்குங்கள் என வாக்குறுதிகளை வழங்கி -தமிழ் மக்களுக்காக கனேடிய அரசியல் அரங்கத்துக்குள் சென்ற தமிழ்த் தலைமைகள் எங்கே என்ற கேள்வி Behind Me Media வின் நிறுவனரும் தலைவருமான கணா செல்வா ஏற்புரை வழங்கிக் கொண்டிருக்கும் போது பொது மக்களால் கேட்கப்பட்டது.

இதே அவலங்கள் எமக்கு வரக் கூடாதென்று தானே நாட்டை விட்டு ஓடி வந்தோம். இந்த அவலங்களைக் காட்டித்தானே புலத்தில் குடியுரிமைகளை கண்ணீர் விட்டுப் பெற்றுக் கொண்டோம். அந்த நன்றியை கனேடிய தமிழ் அரசியல் பிரமுகர்கள் எப்படி மறக்கலாம்?

ஒரு சில அமைப்புகளைத் தவிர ஏனைய கனேடிய தமிழ் அமைப்புக்களைச் சேர்ந்தவர்களை பல்வேறு விதமாக வழிகளில் அழைக்கப்பட்டும் சமூகமளிக்க வில்லை என்பது தற்போது கனேடிய மண்ணில் மாத்திரமன்றி உலகளாவிய ரீதியில் பேசுபெருளாகி யுள்ளது குறிப்பிடத்தக்கது.

உலகளாவிய ரீதியிலான ஆதரவுக் குரல்களோடு நடைபெற்ற மேற்படி விழித்தெழு தமிழா! நிகழ்வில் செம்மணி மனிதப் புதைகுழிப் பேரவலமே எம்மினத்தின் மீது சிங்களப் பேரினவாத அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலைக்கான சாட்சியாக உள்ளதை கனேடிய தமிழ் அரசியல் தலைமைகள் மறந்தது எப்படி என்ற கேள்விக்கான பதிலைக் கொடுக்க வேண்டியது நிகழ்வில் சமூகமளிக்கத் தவறிய ஒவ்வொருவரதும் கடமை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

செம்மணியில் கடந்த ஆகஸ்ட் 19ஆம் திகதி வரை மீட்கப்பட்ட கைக் குழந்தைகள் உட்பட்ட சகல வயதுகளையும் சேர்ந்த 583 மனித எலும்புக் கூடுகளுக்குமாக அரை மணி நேரத்தைக் கூட ஒதுக்க முடியத கையாலாகாத மனிதர்களாக நாம் ஏன் வாழ வேண்டும் என்ற கேள்விகளுக்கு பதிலை யார் வழங்குவார்கள்? போன்ற வலி மிகுந்த கேள்விகளை எமது ஊடக அலுவலகத்திற்கு வரும் அழைப்புக்கள் பெருமளவில் தாங்கி வந்து கொண்டிருப்பதை இங்கே பதிவுசெய்ய விரும்புகின்றோம்.

## நேபாள வெள்ளப்பெருக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிப்பு



நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கு காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 903 ஆக அதிகரித்துள்ளதுடன், 4,247 க்கும் மேற்பட்டோர் தொடர்ந்து மாயமாகியுள்ளனர்.

நேபாளத்தின் திபெத் எல்லைக்கு அருகிலுள்ள ரசுவா பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக, நிர்மாணிக்கப்பட்டு வரும் நீர்மின் நிலைய சுரங்கங்களுக்குள் 350 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் சிக்கியுள்ளனர். அவர்களை மீட்கும் பணிகள் தற்போது தீவிரமாகத் தொடங்கப்பட்டுள்ளன.

நேபாள பேரிடர் மேலாண்மை அதிகாரசபையைச் சேர்ந்த 10,000 க்கும் மேற்பட்ட பணியாளர்கள் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இப் பணிகளுக்குச் சீனா மற்றும் இந்திய நிபுணர்களின் உதவியும் வழங்கப்பட்டுள்ளது.

நேபாள விமானப் படையின் உதவியுடன் கனரக இயந்திரங்கள் அப்பகுதிக்குக் கொண்டு வரப்பட்டு, சுரங்கப்பாதைகளில் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்கும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

26 ஆம் திகதி நேபாள - திபெத் எல்லைக்கு அருகில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாகப் பனிச்சரிவு ஏற்பட்டு, “போடே கோஷி“ ஆறு திடீரென அரணை உடைத்துக் கொண்டு பெருக்கெடுத்ததால் இப் பேரிடர் ஏற்பட்டது.

இத் திடீர் வெள்ளப்பெருக்கு காரணமாக நேபாளத்தின் நீர்மின் நிலைய அமைப்புகளில் 10 சதவீதத்திற்கும் அதிகமானவை பலத்த சேதமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

## நேபாளத்தில் 1,643 மாணவர்களைக் காப்பாற்றிய அதிபர்

நேபாளத்தின் நுவாகோட் மாவட்டத்தில் உள்ள பாடசாலையை நோக்கி ஆபத்தான முறையில் பெருக்கெடுத்து வந்த வெள்ளத்தில் இருந்து, பாடசாலை அதிபரின் துரிதமான நடவடிக்கையால் 1,643 மாணவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

திரிசூலி பள்ளத்தாக்கில் உள்ள திரிபுவன் திரிசூலி இடைநிலைப் பாடசாலையின் ஆங்கில ஆசிரியரும் அதிபருமான 47 வயது ராஜேந்திர தவாடி, பாடசாலையில் இருந்தபோது இப்பகுதியில் மிகப்பெரிய வெள்ளம் வரவுள்ளதாக அவருக்கு எச்சரிக்கை வந்தது.

உடனடியாக பாடசாலையைக் காலி செய்யும்படி அவர் உத்தரவிட்டு, நேபாளத்தின் நுவாகோட் மாவட்டத்தில் நிகழ்ந்த கொடூரமான திடீர் வெள்ளத்தில் இருந்து 1,643 மாணவர்களைக் காப்பாற்ற உதவினார்.

புதன்கிழமை காலை 9:20 மணியளவில், அருகிலுள்ள ஒரு கிராமத்தை ஆற்று வெள்ளம் அடித்துச் சென்றுவிட்டதாக அவரது நண்பர் ஒருவர் தொலைபேசியில் அழைத்து எச்சரித்தார். உடனடியாக அங்கிருந்து தப்பியோடும்படி அவர் தவாடியிடம் கூறியதாக “தி டைம்ஸ்” செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த வெள்ளப்பெருக்கினால் நேபாளம் மற்றும் திபெத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர் ஆயிரக்கணக்கானோரைக் காணவில்லை.

தற்போதைய நிலவரப்படி நேபாளத்தில் 768 பேர் இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், 2,500-க்கும் மேற்பட்டோ ரைக் காணவில்லை. திபெத்தில் 16 பேர் உயிரிழந்ததாகவும், 546 பேரைக் காணவில்லை என்றும் சீனா தெரிவித்துள்ளது.

இந்த வெள்ளத்தால் பல நீர்மின் திட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. 100 - க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் சுரங்கப்பாதைகளுக்குள் சிக்கி யிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. அவர்களை மீட்கும் பணியில் மீட்புக்குழுவினர் ஈடுபட்டுள்ளனர். திரிசூலி 3A நீர்மின் திட்டத்தின் சுரங்கப்பாதைக்குள் நேபாள ராணுவம் குழாய் மூலம் காற்றைச் செலுத்தியுள்ளது.

# இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் விசேட கலந்துரையாடல்



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் நிர்வாகிகள், செயற்பாட்டாளர்களுடனான சமகால அரசியல் நிலவரங்கள் குறித்த கலந்துரையாடல் அண்மையில் கட்சியின் மாவட்டப் பணிமனையான "அறிவகத்தில்" நடைபெற்றது."

சமகால அரசியல் நிலவரங்கள், அபிவிருத்திப் திட்டங்கள் மற்றும் ஏனைய முக்கிய விடயங்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. அத்துடன், தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது."

கிளிநொச்சி மாவட்டக் கிளையின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், வடக்கு மாகாண சபையின் மேனாள் கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, கட்சியின் மாவட்டக் கிளைச் செயலாளர் வீரபாகு விஜயகுமார், கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் தவிசாளர் சட்டத்தரணி சுப்பிரமணியன் சுரேன், பூநகரிப் பிரதேச சபையின் கௌரவ தவிசாளர் சிவகுமார் சிறீரஞ்சன், கிளிநொச்சி மாவட்ட வர்த்தகர் சங்கத்தின் தலைவர் இளையதம்பி விஜயசிங்கம், பிரதேச சபைகளின் கௌரவ உறுப்பினர்கள், மூலக்கிளைகளின் உறுப்பினர்கள், கட்சியின் அமைப்பாளர்கள், இளைஞர் அணியின் உறுப்பினர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.









BEHIND ME MEDIA

# கைத்தொலைபேசியைச் சார்ஜ் செய்து நெஞ்சில் வைத்த படி உறங்கிய இளைஞனுக்கு ஏற்பட்ட சோகம்!



இளைஞரொருவர் உறங்கிய நிலையில் மின்சாரம் தடைப்பட்ட சந்தர்ப்பத்தில் கைத்தொலைபேசி வெடித்துப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். குறித்த துயரச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை (27.08.2026) இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் தனது வீட்டில் கையடக்கத் தொலைபேசியைச் சார்ஜ் செய்தவாறு நெஞ்சில் வைத்துக் கொண்டு இளைஞரொருவர் உறங்கிய நிலையில் மின்சாரம் தடைப்பட்ட சந்தர்ப்பத்தில் கைத்தொலைபேசி வெடித்துப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு வாழைச்சேனையைச் சேர்ந்த கமலேஸ்வரன் சங்கீதன் (வயது-19) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவர்.

# சர்வஜனவாக்கெடுப்பை நடத்த திட்டமா?

எதிர்வரும் ஐந்தாம் திகதி முதல் ஜனாதிபதி அனுரகுமாரதிசநாயக்க நாடளாவிய ரீதியில் பல பேரணிகள் கூட்டங்களில் கலந்துகொள்ள திட்டமிட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினா தயாசிறிஜயசேகர அரசாங்கம் 22 வது திருத்தம் தொடர்பில் சர்வஜனவாக்கெடுப்பிற்கு திட்டமிடுகின்றதா என கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது அரசாங்கம் ஏன் இந்த தொடர் பிரச்சார கூட்டத்திற்கு திட்டமிட்டுள்ளது என நாங்கள் கேள்வி எழுப்புகின்றோம், 22வது திருத்தத்தின் நிலைமை குறித்து ஜனாதிபதி நன்கு அறிந்திருக்க வேண்டும் அதனால் தான் அவர் பிரச்சார கூட்டங்களை திட்டமிட்டுள்ளார்.

உயர்நீதிமன்றத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஜனாதிபதி பலநீதிபதிகளை நியமிப்பது குறித்து ஆராயலாம் என அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்

# இந்தியாவில் அகதிகளாக வாழும் இலங்கைப் பிரஜைகள் அச்சமின்றி நாடு திரும்பலாம்



இந்தியாவில் அகதிகளாக வாழும் இலங்கைப் பிரஜைகள் எவ்வித விசாரணைகளுக்கோ அல்லது கைதுகளுக்கோ உள்ளாகாமல், நாட்டின் எந்தவொரு சர்வதேச விமான நிலையத்தி னூடாகவும் பாதுகாப்பாகத் தாயகம் திரும்பு வதற்குத் தேவையான சட்டரீதியான தளர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட அலுவலகத்தில் புதன்கிழமை (26) அன்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் ஆகியோருடன் இணைந்து நடைபெற்ற இச்சந்திப்பில், ஜனாதிபதியுடனான உயர்மட்டக் கலந்துரையாடலில் எட்டப்பட்ட தீர்மானங்கள் உள்ளிட்ட மாவட்ட மட்டத்திலான முக்கிய விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

அமைச்சர் இதன்போது மேலும் தெரிவித்ததாவது:

“யுத்த காலத்தில் முறைசாரா வழிகளில் நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் அகதிகளாக வாழ்ந்து வரும் இலங்கையர்கள், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் ஊடாக நாடு திரும்பியபோது வழங்கப்பட்டிருந்த சில விலக்குகள், அண்மையில் பலாலி விமான நிலையம் ஊடாக நாடு திரும்பிய சிலருக்கு வழங்கப்படாததன் காரணமாகக் கைதுச் சம்பவங்கள் நடைபெற்றன. இதனையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் மற்றும் பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால ஆகியோரின் தலையீட்டின் மூலம் குறித்த நபர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து, இரண்டு வாரங்களுக்கு முன்னர் அமைச்சரவையில் முக்கியமான தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, உயிரைப் பாதுகாப்பதற்காக முறைசாரா வழிகளில் நாட்டை விட்டு வெளியேறிய இலங்கைப் பிரஜைகள் அனைவரும் தற்போது நாட்டின் எந்தவொரு சர்வதேச விமான நிலையத்தினூடாகவும் அச்சமின்றித் தாயகம் திரும்புவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.”

நாடு திரும்பும் இவ்வாறான நபர்கள் மீள்குடி யேற்றம் செய்யப்படுவதற்கும், தேவையான காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களாகச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் ஊடாகத் தேவையான உதவிகள் வழங்கப்படும். அத்துடன், கடந்த ஆகஸ்ட் 20 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் நாடாளு மன்றத்தில் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக, தேசிய பாதுகாப்புப்பையும் மக்களின் உரிமை களையும் சமநிலையில் பேணியவாறு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணிகளை விடுவிக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

# மத்திய வங்கி பிணைமுறி வழக்கு: அர்ஜுன மகேந்திரன் ‘ஹர்ஜன் அலெக்சாண்டர்’ எனப் பெயர் மாற்றம்

இலங்கையின் 2015-ம் ஆண்டு மத்திய வங்கி பிணைமுறி ஊழல் வழக்குடன் தொடர்புடைய தேடப்படும் குற்றவாளியான முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், தற்போது சிங்கப்பூரில் வசித்து வருவதாகவும், தனது பெயரைச் சட்டப்பூர்வமாக “ஹர்ஜன் அலெக்சாண்டர்” (Harjan Alexander) என மாற்றிக்கொண்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தப்பெயர் மாற்றம் குறித்து சர்வதேசக் காவல்துறையான ‘இன்டர்போல்’ (Interpol) ஏற்கனவே அறிக்கை வெளியிட்டிருந்தது.



அர்ஜுன மகேந்திரனைச் சிங்கப்பூரிலிருந்து நாடு கடத்துவதில் (Extradition) சட்டப் பிரச்சினைகள் மற்றும் தடைகள் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அவரை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கான மாற்றுச் சட்ட வழிமுறைகளை இலங்கை அதிகாரிகள் தற்போது தீவிரமாக ஆராய்ந்து வருவதாகப் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

அவரது இந்தப்பெயர் மாற்றத்தைக் குற்றப் புலனாய்வுத் துறை (CID) உறுதிப்படுத்தியுள்ளதாகக் கூறப்படும் நிலையில், பிணைமுறி பரிவர்த்தனைகள் தொடர்பான நீதிமன்றச் சட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இலங்கை அரசு இதற்கு முன்னர் மகேந்திரனை நாடு கடத்துமாறு சிங்கப்பூரிடம் உத்தியோகபூர்வமாகக் கோரிக்கை விடுத்திருந்தது. எனினும், அந்த நாடு கடத்தல் கோரிக்கை தங்களது நாட்டின் சட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை எனச் சிங்கப்பூர் அரசு சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாடு திரும்பும் இவ்வாறான நபர்கள் மீள்குடியேற்றம் செய்யப்படுவதற்கும், தேவையான காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களாகச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் ஊடாகத் தேவையான உதவிகள் வழங்கப்படும். அத்துடன், கடந்த ஆகஸ்ட் 20 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக, தேசிய பாதுகாப்புப்பையும் மக்களின் உரிமைகளையும் சமநிலையில் பேணியவாறு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணிகளை விடுவிக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதன்படி, 2009 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 811 ஏக்கர் அரச காணிகளும் 21,942 ஏக்கர் தனியார் காணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், 2025 ஜனவரி முதல் 2026 ஆகஸ்ட் 20 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் 65 ஏக்கர், கிளிநொச்சியில் 128 ஏக்கர், முல்லைத்தீவில் 615 ஏக்கர், மன்னாரில் 135 ஏக்கர் மற்றும் வவுனியாவில் 150 ஏக்கருக்கும் அதிகமான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனிடையே, பலாலி விமான நிலைய வீதியின் கிழக்குப் பகுதியில் தற்போது விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் பொதுமக்களுக்கு எதிர்வரும் செப்டம்பர் மாதத்திற்குள் வீடுகளை அமைத்து நிரந்தரமாகக் குடியேறுவதற்கு அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வாசவிளான் வீதியின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள காணிகளில் பாதுகாப்புத் தேவைகளுக்கு அத்தியாவசியமான காணிகளைத் தவிர்ந்த ஏனைய காணிகளை மீள வழங்குவது தொடர்பிலும், நிரந்தரமாகத் தேவைப்படும் காணிகளுக்குப் பொருத்தமான தற்போதைய மதிப்பின்படி இழப்பீட்டை வழங்குவது தொடர்பிலும் ஆராயப்பட்டு வருகின்றன.

தற்போதைய அரசாங்கம் பொறுப்பேற்றபோது அடையாளம் காணப்பட்ட 15,966 குடும்பங்களில் 11,000 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கான அடிப்படை ஆவணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும், இதற்காக வரவு செலவுத் திட்டத்தில் 300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், விசாரணைகளை முன்னெடுப்பதற்காக 25 பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளதுடன், ஆரம்ப கட்டமாக 101 குடும்பங்களுக்குத் தலா 2 இலட்சம் ரூபா வீதம் இடைக்காலக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

BEHIND ME MEDIA

# தமிழீழ விடுதலைப் புலிகள், பிள்ளையான், கருணா மற்றும் தவ்ஹீத் ஜமாத் அமைப்புகளுடன் அசாத் மௌலானா தொடர்பில் இருந்தார் - தேசபக்தி தேசிய இயக்கம் திட்டவட்டம்



தமிழீழ விடுதலைப் புலிகள், பிள்ளையான் தரப்பு, கருணா தரப்பு மற்றும் சஹ்ரானின் தவ்ஹீத் ஜமாத் ஆகிய அமைப்புகளுடன் அசாத் மௌலானா நேரடியாகத் தொடர்பிலிருந்த ஒரு தீவிரவாதி என்று தேசபக்தி தேசிய இயக்கம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானியும் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரலுமான சுரேஷ் சலேயின் தடுத்து காவல் உத்தரவை மேலும் நீடிக்கும் நோக்கில், புலனாய்வாளர்கள் உள்ளிட்ட தரப்பினர் நீதிமன்றில் அப்பட்டமான பொய்த் தகவல்களைச் சமர்ப்பித்து வருவதாகச் சுட்டிக்காட்டியுள்ள அவ்வியக்கம், இத்தகைய பின்னணியைக் கொண்ட அசாத் மௌலானாவின் சாட்சியத்தை அடிப்படையாகக் கொண்டே அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே தன்னிச்சையாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும் குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் புதன்கிழமை (26) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே தேசபக்தி தேசிய இயக்கத்தின் பிரதிநிதியும் சட்டத்தரணியுமான சஞ்சீவ வீரவிக்ரம மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே கைது செய்யப்படுவதற்கு முன்னர், ஏதேனும் ஒரு நியாயமான காரணத்தின் அடிப்படையில் அவர் சந்தேகநபராக அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. இலங்கையின் உயர் நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ‘சிறிசேன குரே எதிர் சட்டமா அதிபர்’ வழக்குத் தீர்ப்புக்கு அமைய, ஒருவரைக் கைது செய்வதற்கு முன்னர் அதற்கான தகுந்த காரணங்களும் சான்றுகளும் அதிகாரிகளின் வசம் இருக்க வேண்டும். ஆனால், ஷானி அபேசேகர தலைமையிலான அதிகாரிகளிடம் அத்தகைய சான்றுகள் எதுவும் இருக்கவில்லை. சட்டமா அதிபரின் ஆலோசனையோ அல்லது நீதவானின் பிடியாணையோ இன்றி மேற்கொள்ளப்பட்ட இந்தக் கைது முழுமையாக ஒரு தன்னிச்சையான நடவடிக்கையாகும்.

அத்துடன், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் புதிய திருத்தங்களின்படி, நபரொருவர் கைது செய்யப்பட்டால் 48 மணி நேரத்துக்குள் அது குறித்து நீதவான் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும். ஆனால் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அதனைச் செய்யாமல் மறைத்ததுடன், எமது சட்டத்தரணிகள் குழு நீதிமன்றத்துக்குச் சென்று வினவிய பின்னரே அவரைத் தடுத்து வைத்துள்ளதை ஒப்புக்கொண்டனர். பிரான்ஸில் தஞ்சம் கோரியுள்ள அசாத் மௌலானாவுக்கு எதிராக கல்முனை நீதவான் நீதிமன்றில் B811/23 என்ற வழக்கின் கீழ் திறந்த பிடியாணை நிலுவையில் உள்ள நிலையில், ஷானி அபேசேகர அதனைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, பிரான்ஸிலுள்ள இலங்கைத் தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் தனியாகச் சென்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளமை முற்றிலும் சட்டவிரோதமான செயலாகும்.

மேலும், சுரேஷ் சலே தாக்கல் செய்த சீராய்வு மனுவுக்கு எதிராக கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தாக்கல் செய்துள்ள இடைமனுவில் அப்பட்டமான பொய்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. 2012 முதல் 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி தாக்குதல் நடக்கும் வரை சுரேஷ் சலே இராணுவப் புலனாய்வுத் துறையின் பணிப்பாளராகப் பணியாற்றினார் என கர்தினால் ஆண்டகை தனது சத்தியக் கடதாசியில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் உண்மை நிலைமை என்னவெனில், சுரேஷ் சலே 2006 முதல் 2009 வரை பிரான்ஸ் நாட்டின் தலைநகரில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் புலனாய்வு நடவடிக்கைகளை முறியடிக்கும் சிறப்புப் பிரிவின் அதிகாரியாகப் பணியாற்றினார். பின்னர் 2012 முதல் 2015 வரை இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளராக இருந்த அவர், 2016 முதல் 2019 வரையான காலப்பகுதியில் மலேசியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திலும், இந்திய இராணுவக் கல்லூரியிலுமே கடமையாற்றினார். அக்காலப்பகுதியில் அவர் இராணுவப் புலனாய்வுத் துறையில் எந்தவொரு பதவியையும் வகிக்கவில்லை.

இவ்வாறான அநீதியான முறையில், பொய்களை அடிப்படையாகக் கொண்டு அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே தடுத்து வைக்கப்பட்டுள்ளார். எனவே, அவரது தடுத்து காவல் உத்தரவை மேலும் நீடிக்காமல் உடனடியாக அவரை விடுவிக்க குடியரசுத் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# இறுதி யுத்தத்தின்போது இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட 29 சிறுவர்கள் எங்கே?

இறுதி யுத்தத்தின்போது பெற்றோர்களால் இலங்கை இராணுவத்திடம் உயிருடன் கையளிக்கப்பட்ட 29 சிறுவர்களுக்கு என்ன நடந்தது என இதுவரை கூற முடியாத காணாமல் போனோர் அலுவலகத்திற்கு (OMP) யாழ்ப்பாணத்தில் சர்வதேச காணாமல் போனோர் தினத்தைக் கொண்டாடுவதற்கு என்ன அருகதை இருக்கிறது என, காணாமல் ஆக்கப் பட்டவர்களின் பெற்றோர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (25) அன்று இடம்பெற்ற சர்வதேச காணாமல் போனோர் தினத்தை முன்னிட்டு, காணாமல் போனோர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சர்வதேச மாநாடு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர்கள் இவ்வாறு கேள்வியெழுப்பினர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்:

“இறுதி யுத்தம் இடம்பெற்று 15 வருடங்கள் கடந்துள்ள நிலையில், 29 சிறுவர்கள் உட்பட 100 பேர் வரை இலங்கை இராணுவத்திடம் அவர்களின் உறவினர்களால் உயிருடன் கையளிக்கப்பட்டனர். ஆனால், இன்று வரை அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் தேடிக்கண்டறிய முடியாத ஓ.எம்.பி (OMP), சர்வதேச காணாமல் போனோர் தினத்தை யாழ்ப்பாணத்தில் நடத்துவது இலங்கை அரசாங்கத்தைத் திருப்திப்படுத்தும் ஒரு செயற்பாடாகவும், பாதிக்கப்பட்ட தரப்பினரை மேலும் காயப்படுத்தும் ஒரு செயலாகும்.

இலங்கையில் தமிழர்கள் காணாமலாக்கப்படுதல் என்பது மிகச் சாதாரண விடயமாக மாறிவிட்டது. வயது, பால் வேறுபாடின்றி காலத்துக்குக் காலம் இவர்கள் கடத்தப்பட்டும், காணாமலாக்கப்பட்டும் உள்ளனர்.

அவ்வாறு காணாமலாக்கப் பட்டவர்களில் அதிகமான ஆண்களும், அதற்கு அடுத்த நிலையில் பெண்களும் இருக்கின்றனர். இதில் சிறுவர்கள் எனக் குறிப்பிடப்படும் விவரமறியாத பிள்ளைகளும் காணாமலாக்கப்பட்டுள்ளனர். அதையும் தாண்டி குழந்தைகளும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். குழந்தைகள் காணாமல் ஆக்கப்படுதல் என்பது இலங்கையைத் தவிர உலகில் எங்குமே நடைபெற்றிருக்காத ஒரு விடயமாக வடக்கு, கிழக்குத் தமிழர் பகுதிகளில் இடம்பெற்றிருக்கிறது.




இதுவரை பல குழந்தைகள் இலங்கை இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டும், அவர்களால் கடத்தப்பட்டும் காணாமலாக்கப்பட்டுள்ளனர். இதற்கான நேரடிச் சாட்சிகள் இன்றும் உயிருடன் இருக்கிறார்கள். 2009 ஆம் ஆண்டில் போர் முடிவுக்கு வந்த வேளையில், அதிகமான குழந்தைகள் தம் பெற்றாருடன் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த பின்னரே காணாமலாக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு பெற்றாருடன் அழைத்துச் செல்லப்பட்ட சிறார்கள் மீளத் திரும்பவில்லை.

இந்த விடயம் காணாமல் போனோர் அலுவலகத்தின் விசாரணை அமர்வுகளில் ஆதாரத்துடன் முன்வைக்கப்பட்ட போதிலும், அந்தச் சிறுவர்களுக்கு என்ன நடந்தது என இன்று வரை கூற முடியாத நிலையிலேயே இந்த அலுவலகம் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. இலங்கையில் காலத்துக்குக் காலம் மாறிவரும் அரசாங்கங்கள் இந்த விவகாரம் தொடர்பில் பேச மறுத்து வருகின்ற நிலையில், இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட 29 சிறுவர்கள் தொடர்பான விடயங்களை வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் ஐ.நா. சபைக்குப் பட்டியலிட்டு அனுப்பியுள்ளது.

இவ்வாறான ஒரு நிலையில், காணாமல் போனோர் அலுவலகம் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் சர்வதேச காணாமல் போனோர் தினத்தைக் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்திருந்தது. இந்த அலுவலகம் உண்மையில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி வழங்குவதற்காக அமைக்கப்பட்ட அலுவலகம் அல்ல் இது சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காக அமைக்கப்பட்டுள்ள அலுவலகம் எனப் பாதிக்கப்பட்ட உறவுகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட காணாமல் போனோர் அலுவலகத்தில் இதுவரை 23 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், 9,819 முறைப்பாடுகளின் விசாரணைகள் நிறைவுபெற்றதாக அலுவலகத்தின் தலைவர் யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருந்தார். ஆனால், பல முறைப்பாடுகளில் இலங்கை இராணுவத்துக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட நிலையில், அவர்களிடமிருந்து பெறப்பட்ட பதில்கள் தொடர்பில் அலுவலகத்திடம் எந்தப் பதிலும் இல்லை.

இதுவரை முறைப்பாடு கிடைக்கப்பெற்றவர்களில் 31 பேர் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், இராணுவத்தினரிடம் இருந்து எவரும் கண்டுபிடிக்கப்படவில்லை எனக் கூறுகின்றனர். அப்படியானால், இராணுவத்திடம் உயிருடன் கையளிக்கப்பட்ட 29 சிறுவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் ஏன் பதில் இல்லை? இவ்வாறான ஒரு நிலையில், இந்த மாநாட்டைத் தமிழர் பகுதிகளில் காணாமல் போனோர் அலுவலகம் நடத்துவது மக்களின் உணர்வுகளைக் காயப்படுத்தும் ஒரு செயற்பாடாகவே பார்க்கிறோம்” என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# மண்டைதீவு படுகொலையின் 36ஆம் ஆண்டு நினைவு

1990களில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட மண்டைதீவு படுகொலையின் 36ஆவது ஆண்டு நினைவு நாள் கடந்த 26ஆம் திகதி உறவுகளின் கண்ணீருடன், உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது.

36 வருடங்களுக்கு முன்னர் இதே தினத்தன்று இலங்கையின் இராணுவத்தால் மண்டைதீவில் நடத்தப்பட்ட படுகொலைச் சாட்சி நினைவிடத்திலேயே இன்றையதினம் தீவக மக்கள் ஒன்றுகூடி தமது உறவுகளை நினைவுகூரி சுடரேற்றி மலர் தூவி அஞ்சலித்தனர்.

தீவக நினைவேந்தல் குழு மற்றும் தீவக முன்னேற்றக்கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற குறித்த நினைவேந்தல் அனுஸ்டிப்பு நிகழ்வில் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட உறவுகளின் வாழும் உறவான ஸ்பன் மற்றில்டா முதன்மைச் சுடரேற்றிவைத்து நினைவு நினைவு கூரலை ஆரம்பித்து வைத்தார்.



தொடர்ந்து அருட்தந்தை வசந்தன் மற்றும் தீவக முன்னேற்றக் கழக தலைவர் பிரகலாதன் ஆகியோரால் நினைவிடத்துக்கு மலர்மாலை அணிவித்து நிகழ்விவேந்தல் நடைபெற்றது.

இதேநேரம் குறித்த சம்பவம் குறித்து வாழும் சாட்சியாக இருக்கும் படுகொலைசெய்யப்பட்ட ஒருவரது தாயாரும் சகோதரியும் அன்றைய நாள் வடுக்களையும் வேதனைகளையும் சாட்சியாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர்.

இதன்போது மகன இழந்த தாயார் கூறுகையில், 1990.08.25 மற்றும் 26 ஆம் திகதிகளில் இந்த படுகொலையும் காணாமலாக்கலும் இராணுவத்தால் அரங்கேற்றப்பட்டது. இதில் தனது மகன் இராணுவத்தால் என் கண் முன்னே கைது செய்யப்படு எனது உறவினர் ஒருவரது வீடின் பின் பகுதியில் வைத்து கடும் சித்திரவதைக்கு உள்ளாகினார்.

அதன் பின்னர் அவர்களை சுட்டுக் கொன்றனர். இந்த கோர சம்பவத்துக்கு நான் சாட்சி. அதேபோன்று சுற்றுவட்டத்தில் இவ்வாறு கொல்லப்பட்ட பல உடலங்களை சிலவற்றை அவ்வூர் மக்களைக்கொண்டு சேகரித்து கிணறுகளில் போட்டு மூடினர்.

அவ்வாறு புதைக்கப்பட்ட கிணறுகளில் ஒன்றுதான் இன்று நினைவு கூறப்படும் கிணறு. இந்த கிணறு போன்று இன்னும் சில கிணறுகள் இன்னும் இருக்கின்றன என கண்ணீர் மல்க தெரிவித்தார்.

# பலாலி விமான நிலைய விரிவாக்கத்திற்குத்தேவையான காணியின் அளவு இன்னும் தீர்மானிக்கப்படவில்லை

பலாலியில் உள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை விரிவாக்கம் செய்வது அவசியமானது என்றாலும், அந்த விரிவாக்கத்திற்காகக் கையகப்படுத்தப்பட வேண்டிய காணியின் அளவு குறித்து இன்னும் இறுதித் தீர்மானம் எட்டப்படவில்லை என இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை (CAA) தெரிவித்துள்ளது.

சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் வான்செலவுச் சேவைகள் பணிப்பாளரும் அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளருமான திலின ரீ வர்ணசிங்க, கருத்துத் தெரிவிக்கையில் விமான நிலையத்தில் தற்போது விமானங்கள் இயங்குவதற்குத் தேவையான அடிப்படை அணுகுமுறைகளும் வசதிகளும் மட்டுமே உள்ளன என்றும், இதற்கு அப்பால் முன்னெடுக்கப்படும் எந்தவொரு விரிவாக்கத்திற்கும் காணி கையகப்படுத்துதல் அவசியம் என்றும் கூறினார்.




இருப்பினும், விமான நிலையம் மற்றும் வான்சேவைகள் நிறுவனம் (AASL) தொழில்நுட்ப ரீதியாக விரிவாக்கம் குறித்த எந்தவொரு உறுதியான தகவலையும் இதுவரை சமர்ப்பிக்கவில்லை என்றும், அதனால் தேவைப்படும் காணியின் அளவு இன்னும் தெளிவற்று உள்ளதாகவும் வர்ணசிங்க தெரிவித்தார். ‘‘அவர்கள் விரிவாக்கம் செய்யப் போகிறார்களா இல்லையா என்பதை இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. அது விரிவாக்கத்தின் தன்மையைப் பொறுத்தே அமையும்,’’ என்று அவர் சுட்டிக்காட்டினார். ‘‘கூடுதல் காணிகளைக் கையகப்படுத்துவது குறித்து பரிசீலிப்பதற்கு முன், அரசுக்குச் சொந்தமான காணிகள் சரியாக எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு அளவீடு செய்யப்பட வேண்டும்’’ என்றும் அவர் மேலும் கூறினார்.

காணிகள் ஏதேனும் கையகப்படுத்தப்பட்டால், அது அரசின் தரநிலைகளின்படி மேற்கொள்ளப்படும் என்றும், அதற்கான இழப்பீடுகள் முறையாக வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். ‘‘சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைக்குச் சொந்தமான காணிகளுக்கு ஏற்கனவே பணம் செலுத்தப்பட்டு, இழப்பீடுகள் வழங்கப்பட்டு முழுமையாகச் சரிசெய்யப்பட்டுவிட்டன. இது பல காலத்திற்கு முன்பே நடந்துவிட்டது,’’ என்றார்.

வர்ணசிங்க அளித்த தகவலின்படி, மீதமுள்ள காணிகள் பாதுகாப்பு அமைச்சுக்குச் சொந்தமானவையாகும். ‘‘எனக்குக் கிடைத்த தகவல்களின்படி, பாதுகாப்பு அமைச்சிடம் தனியார் காணிகள் சில உள்ளன. அவை யுத்த காலத்திலோ அல்லது வேறு காலகட்டத்திலோ கையகப்படுத்தப்பட்டவை ஆகும். அந்தக் காணிகளுக்கு அவர்கள் இழப்பீடு ஏதும் வழங்கியுள்ளார்களா என்பது எனக்குத் தெரியாது,’’ என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில், இதுகுறித்து கருத்துப் பெறுவதற்காக சிவில் விமானப் போக்குவரத்து பிரதி அமைச்சரைத் தொடர்பு கொள்ள மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.

பாதுகாப்பு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் பிரிகேடியர் பிராங்க்ளின் ஜோசப் கூறுகையில், இம்மாற்றம் குறித்து அமைச்சின் நாடாளுமன்ற விவகாரப் பிரிவிடம் சரிபார்க்க வேண்டும் எனத் தெரிவித்தார். ‘‘விமான நிலையத்தை விரிவாக்கம் செய்வது தொடர்பாகப் பேசப்பட்டு வருகிறது, ஆனால் அந்தச் சொத்துக்கள் குறித்து என்ன முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது எனக்குத் தெரியாது. அமைச்சில் உள்ள நாடாளுமன்ற விவகாரப் பிரிவே இதுபற்றி உறுதிப்படுத்த வேண்டும்,’’ என அவர் கூறினார்.

பலாலி / யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய விரிவாக்கத்திற்காக வலிகாமம் வடக்கு பகுதியில் காணிகளைக் கையகப்படுத்த அரசு முன்மொழிந்துள்ளதாகவும், மயிலிட்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு விரிவாக்கத்திற்காக அடையாளமிடப்பட்டுள்ள காணிகள் தொடர்பாக அறிவிப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனிடையே, விமான நிலைய வளர்ச்சித் திட்டத்திற்காக சுமார் 3,000 ஏக்கர் காணிகள் கையகப்படுத்தப்படக்கூடும் என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

# 22ஆவது திருத்தம்: NPP எம்.பியும் மனுத்தாக்கல்



அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கு ஆதரவு தெரிவித்து, தேசிய மக்கள் சக்தியின் (NPP) பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் நிபுணஆராச்சி உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

அச்சட்டமூலத்தின் ஏற்பாடுகள் மக்களின் இறைமையையோ அல்லது நீதித்துறையின் சுதந்திரத்தையோ மீறவில்லை என்று அந்த மனுவில் வாதிடப்பட்டுள்ளது.

எனவே, இந்தத் திருத்தத்திற்குப் பொது மக்கள் வாக்கெடுப்பு (Referendum) ஒன்றின் ஒப்புதல் தேவையில்லை என்றும், அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள பாராளுமன்ற நடைமுறை மூலமாக அதனை நிறைவேற்ற முடியும் எனத் தீர்மானிக்குமாறு நிபுணஆராச்சி உயர் நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.

குறித்த திருத்தச் சட்டமூலத்தின் அரசியலமைப்புச் சட்டம் குறித்த விவகாரங்கள் உயர் நீதிமன்றத்தில் சட்டரீதியான சவால்களை எதிர் கொண்டுள்ள நிலையில், அதன் அரசியலமைப்பைக் கேள்விக்குள்ளாக்கும் வகையில் குறைந்தது 23 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள பின்னணியிலேயே இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுடன் முன்னோக்கிச் செல்லத் தயாராக இருப்பதாகவும், பொது வாக்கெடுப்புத் தேவையா என்பது குறித்து உயர் நீதிமன்றம் வழங்கும் எந்தவொரு வழிகாட்டலையும் பின்பற்றுவதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றம் முன்மொழியப்பட்ட அரசியலமைப்புத் திருத்தத்துடன் தொடர்வதற்கு முன்னர், சட்ட மூலத்தைச் சவாலுக்குட்படுத்தும் மனுக்களை உயர் நீதிமன்றம் பரிசீலிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

**BEHIND ME MEDIA**

# ஷிரான்பாசிக்குடன் நெருங்கிய தொடர்பு - எட்டு அரசியல்வாதிகள் விரைவில் கைது



துபாயிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட போதைப்பொருள் கடத்தல்காரன் ஷிரான் பாசிக்கிற்கும் அரசியல்வாதிகள் பலருக்கும் உள்ள தொடர்புகள் குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஷிரான் பாசிக்குடன் உள்ள தொடர்புகள் குறித்த விசாரணைக்காக 8 அரசியல்வாதிகளை கைதுசெய்யவுள்ளதாக பொலிஸ்தலைமையக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் நான்கு முன்னாள் அமைச்சர்கள் உட்பட பலரை பொலிஸார் விசாரணைக்குட்படுத்தவுள்ளனர், பெண் அரசியல்வாதியொருவரையும் பொலிஸார் கைதுசெய்ய திட்டமிட்டுள்ளனர்.

ஷிரான் பாசிக் இந்த அரசியல்வாதிகளுக்கு தேர்தல் பிரச்சாரத்திற்காக பெருந்தொகை பணத்தை வழங்கியது உட்பட பல குற்றச்சாட்டுகள் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.
இரண்டு அரசியல்வாதிகள் வீடுகள் மற்றும் ஹோட்டல்களை நிர்மாணிப்பதற்காக பாசிக் பணம் வழங்கியமை குறித்தும் விசாரணைகள் இடம்பெறவுள்ளன

# அழகு நிலையத்தில் 7 கோடி ரூபா ஹெரோயின்: தம்பதியினர் கைது!



மாத்தறை ரயில் நிலைய வீதியில் அமைந்துள்ள அழகு நிலையம் ஒன்றில் வைத்து இன்று (27) சுமார் 7 கோடி ரூபாய் மதிப்பிலான ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருட்களுடன் தம்பதி ஒன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைவாக, குறித்த அழகுநிலையத்தை முற்றுகையிட்டு மேற்கொண்ட சோதனையின்போதே இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாக மாத்தறை பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

மாத்தறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்தன விஜேசேகரவுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, மாத்தறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த ஜயமினி குமாரவின் மேற்பார்வையில் இந்த முற்றுகை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மாத்தறை வெலேகொட பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய சந்தேகநபரிடமிருந்து 02 கிலோகிராம் 45 கிராம் ஹெரோயின் மற்றும் 50 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவரது 26 வயதுடைய மனைவியிடமிருந்து 06 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

கூடுதலாக, போதைப்பொருள் வியாபாரம் மூலம் ஈட்டப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 6,25,000 ரூபாய் பணம், இரண்டு மின்னணு தராசுகள் மற்றும் நான்கு கைப்பேசிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஒரு கிராம் ஹெரோயின் 25,000 ரூபாய் என்ற விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளதுடன், கைது செய்யப்பட்ட தம்பதியினர் நீண்டகாலமாக இப்போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்துள்ளமை ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



TORONTO TAMIL
INTERNATIONAL
FILM FESTIVAL
7TH ANNUAL
TORONTO TAMIL
INTERNATIONAL
FILM FESTIVAL
SEPTEMBER
25TH - 27TH 2026
ONE FESTIVAL
MANY NIGHTS!
TORONTO TAMIL INTERNATIONAL FILM FESTIVAL RETURNS WITH FILM SCREENINGS, NETWORKING EXPERIENCES, AND THE AWARDS GALA.
STAY TUNED FOR WHAT'S NEXT.
CELEBRATING
TAMIL STORIES-
WORLDWIDE
WWW.TTFF.CA
GET YOUR TICKETS




# “வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எம் தமிழ் உறவுகளை தேடி” லண்டனிலும் போராட்டம்!












சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான கடந்த 30ஆம் திகதி இலங்கையில் இடம்பெற்ற இன அழிப்பு போரின் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி கோரி தமிழர் பகுதிகளில் போராட்டங்கள் மற்றும் மாநாடு இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்து, லண்டனில் அமைந்துள்ள இலங்கை தூதரகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

“வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எம் தமிழ் உறவுகளை தேடி” எனும் தொனிப்பொருளுடன் சர்வதேச நீதியை வலியுறுத்தி இந்த மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளது.

இந்த மாபெரும் போராட்டத்தில் லண்டனில் வாழும் ஈழத்தமிழர்கள், இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பலரும் பெருமளவில் கலந்து கொண்டு தமது ஆதரவையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்தினர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும், உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும், குற்றவாளிகள் பொறுப்புக்கூற வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகள் போராட்டத்தின் ஊடாக வலியுறுத்தப்பட்டன.

# லண்டனில் Dr. ஐங்கரன் விக்னேஸ்வராவின் 4 நூல்கள் வெளியீடு






Dr. ஐங்கரன் விக்னேஸ்வரன் அவர்கள் எழுதிய நான்கு நூல்களின் வெளியீட்டு விழா, கடந்த சனிக்கிழமை மாலை லண்டனில் அரங்கம் நிறைந்த மக்களின் பேராதரவுடன் நடைபெற்றது.

இன்று, நாற்பது ஆண்டுகளைக் கடந்த தனது எழுத்துப் பயணத்தில், ஒரு தனிமனிதனாக மட்டுமல்லாது, ஒரு சமூகத்தின் நினைவுகளையும், வரலாற்றையும், விடுதலைக்கான போராட்டங்களையும் பதிவு செய்யும் படைப்பாளியாக Dr. ஐங்கரன் விக்னேஸ்வரன் உயர்ந்து நிற்கிறார்.

நிகழ்ந்தும், நிகழ்ந்துகொண்டும் இருக்கும் பல்வேறு விடுதலைப் போராட்டங்களைத் தேடித் திரிந்து, ஆராய்ந்து, வரலாற்றுத் தகவல்களைத் தொகுத்து இந்நான்கு நூல்களும் உருவாக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



சோள டப்பாவில் சுமார் 600 கிராம் செம்டெக்ஸ் வெடிமருந்து மற்றும் தொலைபேசி சிம் கார்டு, ஆண்டெனா ஆகியவற்றைப் பயன்படுத்தி இந்த குண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் முயற்சி குறித்த விசாரணைகள் தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.





BEHIND ME MEDIA

# ஜெர்மன் விமான நிலையத்தை தகர்க்க முயற்சி



விளாடிமிர் புட்டின் ஆதரவுடன் ஜெர்மனியின் லைப்சிக்∴ஹாலே (Leipzig/Halle) விமான நிலையத்தை செம்டெக்ஸ் (Semtex) வெடிமருந்து நிரப்பப்பட்ட ஆளில்லா விமானம் (Drone) மூலம் தாக்க நடத்தப்பட்ட சதி முயற்சி, பிரிட்டனை இலக்கு வைத்து நடத்தப்பட்ட பார்சல் குண்டு தாக்குதல்களுடன் தொடர்புடையது என கண்டறியப்பட்டுள்ளது.

உக்ரைனுக்கு ராணுவ உபகரணங்களை ஏற்றிச் செல்லவிருந்த அன்டோனோவ் (Antonov An-124) ரக விமானத்தின் மீது மோதிய இந்த ட்ரோன், வெடிக்கத் தவறியது. விமான நிலையப் பேருந்து ஓட்டுநர் ஒருவர் விழிப்புடன் செயல்பட்டு, அந்த ட்ரோனைப் பிடித்து பாதுகாப்புக் படையினரிடம் ஒப்படைத்தார்.

ட்ரோனில் கண்டெடுக்கப்பட்ட டிஎன்ஏ மாதிரிகள், லித்துவேனியாவில் பிரிட்டன் பார்சல் குண்டு சதி வழக்கில் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரின் டிஎன்ஏவுடன் ஒத்துப்போவதாக ஜெர்மன் மற்றும் பிரிட்டன் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் லைப்சிக் விமான நிலையத்தில் பிரிட்டனுக்கு அனுப்பப்படவிருந்த னுர்டு பார்சல் ஒன்று தீப்பிடித்தது. அதைத் தொடர்ந்து இங்கிலாந்து மற்றும் போலந்து நாடுகளிலும் இதுபோன்ற பார்சல் குண்டுகள் கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

லித்துவேனியா மற்றும் போலந்து நாடுகளில் ரஷ்யாவின் புசுரு உளவுத்துறைக்காகச் செயல்பட்டதாகக் கூறப்படும் 22 சந்தேக நபர்களை புலனாய்வாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர். இந்த நெட்வொர்க்கே இந்த ட்ரோன் தாக்குதலுக்கும் பின்னணியில் இருப்பதாக நம்பப்படுகிறது.

சோள டப்பாவில் சுமார் 600 கிராம் செம்டெக்ஸ் வெடிமருந்து மற்றும் தொலைபேசி சிம் கார்டு, ஆண்டெனா ஆகியவற்றைப் பயன்படுத்தி இந்த குண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் முயற்சி குறித்த விசாரணைகள் தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.








# பிரிட்டன் - காஞ்சோண்டியை கொண்டாடும் நாடு

BEHIND ME MEDIA

இளைய அப்துல்லாஹ் - லண்டன்

காஞ்சோண்டி ( Urtica Dioica ) பெயரைக்கேட்டாலே உடலெல்லாம் அரிப்பு எடுத்துவிடும் செடி. எங்களுக்கு காஞ்சோண்டி மனிதரின் விரோதியாக மட்டுமே இலங்கையில் தெரியும். ஆனால் அதன் மருத்துவக்குணங்களை கேட்டால் ஆச்சரியப்பட்டு விடுவீர்கள். ஒவ்வொருவரும் மறக்காமல் உண்ண வேண்டிய இலை காஞ்சோண்டி இலை. வறுத்து,சுண்டல் செய்து அல்லது காய வைத்து உலர்த்தி நீரில் அவித்து தேனீர் போல குடிக்க வேண்டிய முக்கிய மூலிகை என்றால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.

இங்கெ பிரிட்டனில் காஞ்சோண்டிஇலையை பச்சையாக சாப்பிடும் நிகழ்வை திருவிழாவாகவே கொண்டாடுகிறார்கள் என்றால் நம்ப முடிகிறதா?

2024 உலக காஞ்சோண்டி சாப்பிடும் சாம்பியன்ஷிப்பை வென்றவர் ஒரு புதிய சாதனையை படைத்துள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரிட்போர்ட்டுக்கு அருகிலுள்ள டோர்செட் நெக்டர் சைடர் பண்ணையில் நடந்த முட்கள் நிறைந்த காஞ்சோண்டி போட்டியில் அமெரிக்கா மற்றும் நெதர்லாந்து போன்ற தொலைதூர நாடுகளைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

லண்டனைச் சேர்ந்த டாம் வீலர், 116 அடி (35.4 மீ) காஞ்சோண்டி தண்டுகளிலிருந்து இலைகளை பிய்த்து சாப்பிட்டு ஆண்கள் கோப்பையை வென்றார், இது கடந்த ஆண்டு 64 அடி (19.5 மீ) என்ற சாதனையை முறியடித்தது.

நடப்பு மகளிர் சாம்பியனான பெத் ஹாட்ஜஸ் தனது பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டார், 2023 இல் நிறுவப்பட்ட 60 அடி (18.3 மீ) என்ற தனது சொந்த சாதனையை முறியடித்தார்.

வேல்ஸிலிருந்து வந்திருந்த திருமதி ஹாட்ஜஸ், தனது கைகள் இன்னும் வலியுடன் இருந்தபோதிலும், மீண்டும் வெற்றி பெற்றதில் ஆச்சரியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பதாகக் கூறினார். இலையில் முள் உள்ள பின்புறத்தை லாவகமாக மடித்து முள் இல்லாத முன் புறத்தை வாயில் போட்டு காஞ்சோண்டி இலையை லாவகமாக உண்ண வேண்டும்.

”நான் உண்மையில் என் வாயின் உட்புறத்தை கருத்தில் கொண்டேன்., நாக்கு மிகவும் விசித்திரமான நிறமாக மாறும், ஆனால் இலைகளை அவசரமாக பறிப்பதில் நான் என் கைகளில் உள்ள வலியில் அதிக கவனம் செலுத்தினேன், அதனால் நான் என் வாயைப் பற்றி மறந்துவிட்டேன்.

முன்னர் மார்ஷ்வுட்டில் உள்ள ஒரு விடுதியில் நடத்தப்பட்டு, பின்னர் அது மூடப்பட்டுள்ளது, பிரிட்டனில் 1980களில் இருந்து வரும் இந்த பாரம்பரியம், அருகிலுள்ள வேடவுனில் உள்ள டோர்செட் நெக்டர் சைடர் பண்ணையில் ரியான் ஸ்ட்ராங்கால் தற்பொழுது காஞ்சோண்டி இலை சாப்பிடும் போட்டி நடத்தப்படுகிறது.

தொட்டால் எரிச்சலூட்டுகிற ஒருவகை செடியான காஞ்சோண்டி தண்டுகள் சேகரிக்கப்பட்டு 2 அடி (61 செ.மீ) நீளமாக வெட்டப்பட்டு, போட்டியாளர்களுக்கு சைடரும் (cider) வழங்கப்படுகிறது, அதை அவர்கள் குடிக்கலாம் அல்லது காஞ்சோண்டி இலையை நனைத்து ஈரப்படுத்தலாம்.

காஞ்சோண்டி இலையை உண்பதற்கு இங்கே மக்களை தூண்டுவதன் நோக்கமென்ன அதன் மருத்துவ குணங்கள் என்ன என்று அடுத்து பார்க்கலாம்.

இத் தாவரத்தை " The Doctor ´s medicin " என்று குறிப்பிட்டுள்ளார்கள். 1800 ம் ஆண்டுகளில் இருந்துமிகவும் முக்கியமான வைத்திய நிவாரணியாக காஞ்சோண்டி பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் அதிக அளவில் புரதச் சத்து, விட்டமின் A, விட்டமின் C, கல்சியம், பொஸ்பரஸ் , இரும்புச் சத்து, போன்றவற்றை அதிக அளவில் காணப்படுகின்றன.

இதைவிட முக்கியமாக உடலின் உள்ளே உள்ள உறுப்புக்களில் தொற்றுக்கள், நோய்கள் ஏற்படும் போது அக் கிருமிகளை அழிக்கக் கூடிய Flavonoids எனப்படும் சத்தையும் இது அதிக அளவில் கொண்டுள்ளது.

காஞ்சோண்டியை சுடுநீரில் கழுவும் போது இதன் சுணைக்கும் தன்மை அகன்றுவிடும்.

உள் உறுப்புக்களில் நோய், நாட்பட்ட உட்காயங்களை இல்லாமல் செய்ய உதவுகின்றது. சலப் பையில் கற்கள் உருவாகுவதை, உருவாகியுள்ள கற்களை அழிக்கக் கூடியது. இருமல், நாட்பட்ட இருமல் தீர்க்கும் நிவாரணியாகின்றது. இரத்தத்தில் சீனியின் அளவை கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்க கூடியது. உடம்பிலுள்ள மேலதிக நீரை (கால் வீக்கம் ) வெளியேற்ற உதவுகின்றது.

இரத்த அழுத்தத்தை சரி செய்கின்றது. இரத்தத்தைச் சுத்திகரித்து தேவையற்ற கழிவுநீரை வெளியேற்ற உதவுகின்றது. வாதம் உள்ளவர்களுக்கு சிறந்த மருந்தாகின்றது. குழந்தை பெற்ற பால் கொடுக்கும் பெண்களிற்கு பால் ஊறுவதற்கு உதவுகின்றது. தலை முடி உதிர்வதை தடை செய்கின்றது.

தோலில் ஏற்படும் படைகள் - Eczema மீது இவ் இலையை அரைத்துப் பூசி வர நோய் குணமாகும்.

காஞ்சோண்டி தேநீர் பெண்களுக்கு பல்வேறு நன்மைகளை வழங்குகிறது, இதில் வீக்கத்தைக் குறைத்தல், எலும்பு ஆரோக்கியத்தை அதிகரித்தல் மற்றும் மாதவிடாய் பிரச்சனைகளுக்கு உதவுதல் ஆகியவை அடங்கும்.



காஞ்சோண்டி தேநீர் பெண்களுக்கு பல்வேறு நன்மைகளை வழங்குகிறது, இதில் வீக்கத்தைக் குறைத்தல், எலும்பு ஆரோக்கியத்தை அதிகரித்தல் மற்றும் மாதவிடாய் பிரச்சனைகளுக்கு உதவுதல் ஆகியவை அடங்கும். இது இரும்புச்சத்து, வைட்டமின்கள் மற்றும் தாதுக்களின் கொண்ட மூலமாகும், இது ஒட்டுமொத்த ஆரோக்கியம் மற்றும் ஆற்றல் தேவைகளுக்கு நன்மை பயக்கும்.

மாதவிடாய் நேரத்தில் வரும் தசைப்பிடிப்பு மற்றும் வீக்கம் நிவாரணம் தேநீரின் துவர்ப்பு பண்புகள் மாதவிடாய் பிடிப்புகள் மற்றும் வீக்கத்தைக் குறைக்க உதவும்.

இது மாதவிடாய் ஓட்டத்தை ஒழுங்குபடுத்தவும் அதிகப்படியான இரத்தப்போக்கைக் குறைக்கவும் உதவும்.

உடல் முழுவதும் வீக்கத்தைக் குறைக்க உதவும், இது மூட்டுவலி போன்ற நிலைமைகளுக்கு பயனளிக்கும்.

கல்சியம் மற்றும் பிற தாதுக்கள் நிறைந்த இது வலுவான எலும்பு ஆரோக்கியத்திற்கு பங்களிக்கும்.

விட்டமின்கள் (ஏ, சி, கே) மற்றும் தாதுக்கள் (இரும்பு, கால்சியம்) ஆகியவற்றின் நல்ல மூலமாகும்.

இதன் அதிக இரும்புச்சத்து உள்ளடக்கம் பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் அல்லது இரத்த சோகையைத் தடுப்பதில் குறிப்பாக நன்மை பயக்கும்.

தொட்டால் எரிச்சலூட்டுகிற ஒருவகை செடி இது ஆனால் ஒரு இயற்கையான ஆண்டிஹிஸ்டமைனாகச் செயல்பட்டு, ஒவ்வாமைகளிலிருந்து நிவாரணம் அளிக்கிறது.

இங்கு பிரிட்டனில் சாதாரமாகவே கடைகளில் காஞ்சோண்டி தூள் தேனீர் பைக்கட்டுகள் வாங்கலாம்.

இன்னுமொரு விடயம் தெரியுமா காஞ்சோண்டி செடி நிறைய நார்த்தன்னை கொண்டது அதனால் அதிலிருந்து நூல் எடுத்து பல ஜவுளி பொருட்கள் செய்கிறார்கள்.


இன்னுமொரு விடயம் தெரியுமா காஞ்சோண்டி செடி நிறைய நார்த்தன்னை கொண்டது அதனால் அதிலிருந்து நூல் எடுத்து பல ஜவுளி பொருட்கள் செய்கிறார்கள்.

தொட்டால் எரிச்சலூட்டுகிற ஒருவகை செடிதான் இது என்றாலும் தண்டுகளில் ஒரு வகை பாஸ்ட் நார் உள்ளது, இதன் நூல் பாரம்பரியமாக ஆடைகள் நெய்ய பயன்படுத்தப்படுகிறது மற்றும் தேங்காய் நார் போலல்லாமல் இலகுவாக கையாள முடிகிறது. பருத்தியைப் போலல்லாமல், காஞ்சோண்டி செடி பூச்சிக்கொல்லிகள் இல்லாமல் எளிதில் வளரும். இருப்பினும், இழைகள் கரடுமுரடானவை.

வரலாற்று ரீதியாக, வெண்கல யுகத்தின் பண்டைய காலத்தில் காஞ்சோண்டி செடியிலிருந்து உருவாக்கிய நூலிளையால் செய்யப்பட்ட ஜவுளிகள் டென்மார்க்கில் கண்டுபிடிக்கப்பட்டதால், கிட்டத்தட்ட 3,000 ஆண்டுகளாக துணிகளை தயாரிக்க பயன்படுத்தப்பட்டு வருகின்றன.







CANADA
HUMANITY
• SINCE 2024 •
BEHIND ME
FOUNDATION

# மனிதநேயம் - Behind me foundation



வாழ்வாதாரத்தைத் தேடும் கரங்களை பலப்படுத்தும் நோக்கோடு கடந்த 2024 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது **மனிதநேயம் - Behind me foundation** நிறுவனம் தனிநபர்களுக்கும் பேரிடர்களால் நிலைகுலையும் மக்களுக்குமான சேவைகளைத் தொடர்ச்சியாக ஆற்றிவருகின்றது.

உதவிகள் தேவைப்படுவோர் **Behind me foundation** ஊடாக எம்மைத் தொடர்புகொள்ளும் பட்சத்தில் உங்களுக்கான தேவைகளை நாம் எமது ஊடகங்களின் வாயிலாக அறிவித்து தனி நபர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் ஊடாக உங்களுக்கான அனுசரணைகளைப் பெற்றுத் தருவோம்.

## எமது சேவைகள்

- உதவிகளை பெற்றவர்கள் - வழங்கியவர்கள் பணம் மற்றும் பொருள் விபரங்களின் வெளிப்படைத்தன்மை பேணப்படும்.
- உதவி தேவைப்படும் மக்கள் மற்றும் காரணங்கள்
- உதவிகளை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள்
- உதவிகள் உரியவர்களைச் சென்றடைந்த உறுதிப்படுத்தல்கள்

எமது **Behind me International Media**
ஊடக வலையமைப்பில் பகிரப்படும்

## தொடர்புக்கு

| | | |
|---|---|---|
| இலங்கை | - | +94 76239 0159 |
| இந்தியா | - | + 91 917632 3079 |
| கனடா | - | + 437 688 3493 |
| மின்னஞ்சல் | - | info@behindmemedia.com |

BEHIND ME
FOUNDATION

உதவுவது நம் கடமை
மாற்றம் கொண்டுவருவது நம் குறிக்கோள்

நாம் இணைவோம்... பலரை உயர்வோம்...

# யாழ். மறைமாவட்டத்திற்குப் புதிய ஆயர்

BEHIND ME MEDIA



யாழ். மறை மாவட்டத்தின் ஆயராக திருத்தந்தையால் நியமிக்கப்பட்டுள்ள பேரருட்கலாநிதி அன்ரன் ரஞ்சித் ஆண்டகை அவர்களின் பணிப் பொறுப்பேற்கும் நிகழ்வு கடந்த 26 ஆம் திகதி புனித மரியன்னை பேராலயத்தில் இடம்பெற்றது.

யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமட நுழைவாயிலில் ஆயர் வரவேற்கப்பட்டு, பவனியாக அழைத்து வரப்பட்டார்.

தொடர்ந்து, புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன், இத்திருப்பலியில் ஆயர், யாழ். மறைமாவட்டத்தின் புதிய ஆயராக தமது பணிப்பொறுப்பை அதிகாரப்பூர்வமாக ஏற்றார்.
























## உலகில் குறைந்த சம்பளம் பெறும் நாடுகளின் பட்டியலில் 120 வது இடத்தில் இலங்கை!

உலகில் குறைந்த சம்பளம் பெறும் நாடுகளின் பட்டியலில் இலங்கை 120 வது இடத்தில் உள்ளதாக “விசுவல் கேப்பிட்டலிஸ்ட்“ (Visual Capitalist) இணையத்தளம் தெரிவித்துள்ளது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தரவுகளுக்கு அமைவாக, நாடுகளில் நிலவும் மாதச் சம்பளம் மற்றும் அந்த நாடுகளின் வாங்கும் திறனை ஒப்பிட்டு இந்த தரவரிசை தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இலங்கைக்கு கீழே நைஜர், பூட்டான், ஹைட்டி, கினி, கானா மற்றும் காம்பியா ஆகிய நாடுகள் தரப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையின் குறைந்தபட்ச மாதச் சம்பளத்துடன் வாங்கும் திறனைப் பொருத்தும்போது, குறித்த தொகையானது 200 அமெரிக்க டொலர்களாக தொடர்புடைய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அது இலங்கைப் பண மதிப்பில் சுமார் 66,000 ரூபாவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசியாவில் அதிகூடிய குறைந்தபட்ச சம்பளம் பெறும் நாடுகளுக்கு மத்தியில் தென் கொரியா முன்னிலையில் உள்ளதுடன், அங்கு அந்த மதிப்பு 2366 அமெரிக்க டொலர்களாகும்.

இந்த தரவரிசையில் முதலாம் இடத்தில் உள்ள சுவிட்சர்லாந்து குறைந்தபட்ச சம்பளமாக 3804 அமெரிக்க டொலர்களை வழங்கி வருகின்றது.

## துறைமுக நகர சீனப் பிரஜை கொலை வழக்கு: சிகிரியாவில் மேலும் 2 சீனர்கள் கைது!



கொழும்பு துறைமுக நகர வளாகத்தில் மூன்று சீனப் பிரஜைகள் மீது தாக்குதல் நடத்தி, அவர்களில் ஒருவரைக் கடத்திச் சென்று படுகொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய தேடப்பட்டு வந்த மேலும் இரு சீனப் பிரஜைகளைக் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் சிகிரியாவில் வைத்து சனிக்கிழமை (29) கைது செய்துள்ளனர்.

கடந்த ஜூலை 23ஆம் திகதி கொழும்பு துறைமுக நகர வளாகத்தில் இரு சீனக் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலையடுத்து, ஒரு சீனப் பிரஜை கடத்திச் செல்லப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

பின்னர் அவரது சடலம் எஹெலியகொட பகுதியிலிருந்து மீட்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் ஏற்கனவே சிலர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், தப்பிச் சென்ற ஏனைய சந்தேகநபர்களைக் கைது செய்வதற்காகக் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

அத்துடன், இக்குற்றத்துடன் தொடர்புடைய மூன்று சீனப் பிரஜைகளைக் கைது செய்யப் பொலிஸார் பொதுமக்களின் உதவியையும் கோரியிருந்தனர்.

இதற்கமைய, சிகிரியாவிலுள்ள உணவகம் ஒன்றில் மறைந்திருந்த போதே இவ்விரு சந்தேகநபர்களும் வெள்ளிக்கிழமை (28) கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# தமிழர் சுயநிர்ணய உரிமைத் தீர்வுக்காக இன்னும் எத்தனை ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்?

தமிழர் சுயநிர்ணய உரிமை மற்றும் இறையாண்மை தொடர்பான கேள்வியை சர்வதேச நீதிமன்றத்தின் (ICJ) முன் கொண்டுசெல்வதற்கோ அல்லது ஐ.நா. பொதுச் சபையின் மூலம் ஆலோசனைக் கருத்தைப் பெறுவதற்கோ பிரித்தானியா சட்ட வழிமுறைகளை ஆராய வேண்டும் என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வவுனியாவில் கடந்த சனிக்கிழமை (29) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர்கள், எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிய தமிழ்த் தாய்மார்கள் இன்னும் எத்தனை ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்றும் உருக்கமாகக் கேள்வி எழுப்பினர்.




ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்கள் தெரிவித்த முக்கிய கருத்துக்கள்,

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கருத்துத் தெரிவித்த அவர்கள், கடந்த 3,478 நாட்களாகத் தங்களது பிள்ளைகளையும் அன்புக்குரியவர்களையும் தேடி வீதியில் நின்று போராடி வருவதாகச் சுட்டிக்காட்டினர்.

1948ஆம் ஆண்டு பிரித்தானியா அதிகாரத்தை ஒப்படைத்தபோது உருவாக்கப்பட்ட மையப்படுத்தப்பட்ட அரசியலமைப்பு, தமிழர்களின் அரசியல் உரிமைகள் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யத் தவறிவிட்டது.

BEHIND ME MEDIA






காலனித்துவ ஆட்சியிலும் அதன்பின்னரான அதிகாரக் கையளிப்பிலும் பிரித்தானியா வகித்த பங்கு குறித்து முறையான வரலாற்று மற்றும் சட்ட ஆய்வை மேற்கொள்ள வேண்டும்.

அரசாங்க மாற்றங்கள், ஆணைக்குழுக்கள் மற்றும் வாக்குறுதிகள் எவையும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதற்கான நம்பகமான பதிலை இதுவரை வழங்கவில்லை.

நேரடி வழக்கிற்கான சட்ட அதிகாரம் பொருந்தாத பட்சத்தில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் (UNGA) மூலம் சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனைக் கருத்தைப் (Advisory Opinion) பெறுவதற்குப் பிரித்தானிய அரசாங்கம் ஆதரவளிக்க வேண்டும்.

எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டு அரசியலமைப்பு மாற்றங்கள் தோல்வியடைந்துள்ளதால், தமிழர் இறையாண்மையை மீட்டெடுப்பதும், அமைதியான ஜனநாயக நடைமுறையின் மூலம் சுதந்திர தமிழ் ஈழத்தை உருவாக்குவதும் ஒரு சர்வதேச அரசியல் தீர்வாகப் பரிசீலிக்கப்பட வேண்டும்.

இலங்கையில் தீர்க்கப்படாமல் இருக்கும் தமிழர் தேசியப் பிரச்சினைக்குச் சர்வதேச சட்டத்தின் மூலம் நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தர பிரித்தானியாவும் சர்வதேச சமூகமும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் இதன்போது வலியுறுத்தினர்.



# செம்மணி மனிதப் புதைகுழி குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த வேண்டும் - பிராம்ப்டன் மேயர் பேட்ரிக் பிரவுன்

BEHIND ME MEDIA



தமிழ் இனப்படுகொலைக்கு பொறுப்பான இலங்கை போர்க் குற்றவாளிகள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ஐஊஊ) முன் நிறுத்தப்படத் தகுதியானவர்கள்." பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியும் பொறுப்புக்கூறலும் கிடைக்க வேண்டும் என்பதில் தாம் தொடர்ந்து உறுதியோடு செயல்படப் போவதாகவும் அவர் தனது பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.



செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில் இலங்கை போர்க் குற்றவாளிகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ஐஊஊ) முன் நிறுத்தப்பட வேண்டும் என கனடாவின் பிராம்ப்டன் மாநகர மேயர் பேட்ரிக் பிரவுன் வலியுறுத்தியுள்ளார்.

பலவந்தமாக காணாமலாக்கப் பட்டோருக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு, கனடாவில் அமைந்துள்ள "தமிழ் இனப்படுகொலை நினைவகத்திற்கு" (Tamil Genocide Monument) மேயர் பேட்ரிக் பிரவுன் விஜயம் செய்தார். நினைவுச் சின்னத்தில் அஞ்சலி செலுத்திய பின்னர் இது குறித்து கருத்து வெளியிட்ட அவர்:"இன்று இரவு, பலவந்தமாக காணாமலாக்கப பட்டோருக்கான சர்வதேச தினத்தை நினைவுகூரவும், செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்பான நீதி மற்றும் பொறுப்புக்கூறலை வலியுறுத்தவும் தமிழ் இனப்படுகொலை நினைவகத்திற்கு விஜயம் செய்தமைக்கு பெருமை அடைகிறேன்.





# "ராஜகோபுரம் எங்கள் தலைவன்..." பாடகி கோவை கமலா கனடாவில்!



தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களைப் போற்றிப் பாடும் "ராஜகோபுரம் எங்கள் தலைவன்" என்ற அற்புதமான பாடலின் கம்பீரமான குரலுக்கு இவர் சொந்தக்காரியான தமிழ் நாட்டின் பிரபல பக்திப் பாடகி கோவை கமலா அவர்கள் தற்போது கனடா வந்துள்ளார்.

கடந்த 28ம் திகதி வெள்ளிக் கிழமையன்று மாலை ஸ்காபுறோவில் உள்ள சீனக் கலாசார மண்டபத்தில் இவரது இசை நிகழ்ச்சி நடைபெற்றது.























# இந்த வாரம்

BEHIND ME MEDIA





## 1-9-2026

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். சிம்மம் மாதம். கிருஷ்ண பட்சம். சக 1948 பாத்ரபதம் 10
பேராயிரம் நாமாவளி என்பது இறைவனின் ஆயிரம் திருப்பெயர்களை கொண்டு போற்றும் பக்தி வழிபாடு.
சதுர்த்தி கா.07.56 வரை, பின்பு பஞ்சமி - ரேவதி கா.04.26 வரை, பின்பு அசுபதி.

ஸ்ரீ பராபவ ஆவணி **15** | **SEP - TUE** செவ்வாய் | ரபிஉல் அவ்வல் **18** | தேய்பிறை 244 / 121

தேய். சதுர்த்தி 04.40 (கா. 07.56) அசுபதி 53.40 (கா. 03.32) தியாஜ் 44.05 சித்த யோகம். திருச்செந்தூர் ஸ்ரீமுருகப் பெருமான் கேடயச்சப்பரத்திலும் இரவு பல்லக்கிலும் திருவீதியுலா. சுவாமிமலை ஸ்ரீமுருகப் பெருமான் பேராயிரம் நாமாவளி கொண்ட தங்கப் பூமாலை சூடியருளல்.

| நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை: 7.45-8.45 | 10.45-11.45 | 03.00 | 12.00 | 09.00 |
| மாலை: 4.45-5.45 | 7.30-8.30 | 04.30 | 01.30 | 10.30 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால் | சிம்ம லக்கனம் இருப்பு நா. 2 வி. 53 | சந்திராஷ்டமம்: ஹஸ்தம்
கரணம் : 7.30-9 | சூரிய உதயம் : 6.04

சனி | செ | ரா | வி | 1 சிம்-புத 15 துலா-சுக் 17 கன்-புத | புசூ கே | சு
சம ↔ | திதி பஞ்சமி

**நூறு வாக்குறுதியை விட ஒரு செயல் மேலானது**

**இராசிபலன்**
- மேஷம் - நன்மை
- ரிஷபம் - இன்சொல்
- மிதுனம் - பரிசு
- கடகம் - சிக்கல்
- சிம்மம் - ஓய்வு
- கன்னி - செலவு
- துலாம் - சிரமம்
- விருச்சி - பயம்
- தனுசு - எதிர்ப்பு
- மகரம் - நலம்
- கும்பம் - ஆதாயம்
- மீனம் - புகழ்

## 2-9-26



தேய்பிறை ஷஷ்டி விரதம்

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். சிம்மம் மாதம். கிருஷ்ண பட்சம். சக 1948 பாத்ரபதம் 11
மனக்கவலை நீக்கி, சந்திரனின் அருள் கிடைக்கும் அற்புத தேய்பிறை ஷஷ்டி விரதம் இன்று.
பஞ்சமி கா.06.11 வரை, பின்பு ஷஷ்டி - அசுபதி கா.03.32 வரை, பின்பு பரணி.

ஸ்ரீ பராபவ ஆவணி **16** | **SEP - WED** புதன் | ரபிஉல் அவ்வல் **19** | தேய்பிறை 245 / 120

தேய். பஞ்சமி 00.18 (கா. 06.11) ஷஷ்டி 55.19 (கா. 04.12) பரணி 50.41 (கா. 02.20) தியாஜ் 16.30 சித்த 50.41 மேல் அமிர்த யோகம். **தேய்பிறை ஷஷ்டி விரதம்.** திருச்செந்தூர் ஸ்ரீமுருகப் பெருமான் காலை பூங்கோயில் சப்பரத்திலும் இரவு தங்க முத்துக் கிடா வாகனத்திலும் பவனி.

| நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை: 9.15-10.15 | 10.45-11.45 | 12.00 | 10.30 | 07.30 |
| மாலை: 4.45-5.45 | 6.30-7.30 | 01.30 | 12.00 | 09.00 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால் | சிம்ம லக்கனம் இருப்பு நா. 2 வி. 43 | சந்திராஷ்டமம்: சித்திரை
கரணம் : 6-7.30 | சூரிய உதயம் : 6.04

சனி | செ | ரா | வி | 1 சிம்-புத 15 துலா-சுக் 17 கன்-புத | புசூ கே | சு
கீழ் ↓ | திதி ஷஷ்டி

**பணம் கொண்டு கடவுளை கண்டுபிடிக்க முடியாது.**

**இராசிபலன்**
- மேஷம் - பாராட்டு
- ரிஷபம் - சலனம்
- மிதுனம் - உற்சாகம்
- கடகம் - நற்செய்தி
- சிம்மம் - குழப்பம்
- கன்னி - ஆர்வம்
- துலாம் - முயற்சி
- விருச்சி - எதிர்ப்பு
- தனுசு - பெருமை
- மகரம் - சாதனை
- கும்பம் - பொறுமை
- மீனம் - நிறைவு

## 3-9-26

★ கார்த்திகை விரதம்



கார்த்திகை விரதம்

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். சிம்மம் மாதம். கிருஷ்ண பட்சம். சக 1948 பாத்ரபதம் 12
கவலைகளை நீக்கி, நற்பலன்களை அருளும் முருகப் பெருமானின் புனித கார்த்திகை விரதம் இன்று.
ஷஷ்டி கா.04.12 வரை, பின்பு ஸப்தமி - பரணி கா.02.20 வரை, பின்பு கார்த்திகை.

ஸ்ரீ பராபவ ஆவணி **17** | **SEP - THU** வியாழன் | ரபிஉல் அவ்வல் **20** | தேய்பிறை 246 / 119

தேய். சப்தமி 50.09 (கா. 02.08) கார்த்திகை 47.11 (கா. 12.56) தியாஜ் 18.58 மரண யோகம். **கார்த்திகை விரதம்.** திருச்செந்தூர் முருகப் பெருமான் தங்க முத்துக்கிடா வாகனத்திலும் இரவு வெள்ளி யானை வாகனத்திலும் அம்பாள் வெள்ளி சப்பரத்திலும் புறப்பாடு. பெரிய நகசு.

| நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை 10.45-11.45 | ------------ | 01.30 | 09.00 | 06.00 |
| மாலை: 12.15-1.15 | 6.30-7.30 | 03.00 | 10.30 | 07.30 |

சூலம் : தெற்கு; பரிகாரம் : தைலம் | சிம்ம லக்கனம் இருப்பு நா. 2 வி. 32 | சந்திராஷ்டமம்: சுவாதி விசாகம்
கரணம் : 3-4.30 | சூரிய உதயம் : 6.04

சனி | செ | ரா | வி | 1 சிம்-புத 15 துலா-சுக் 17 கன்-புத | சூ கே | சு | பு
கீழ் ↓ | திதி ஸப்தமி

**கோழையின் கண்ணுக்கு பூனையும் யானையாக தெரியும்**

**இராசிபலன்**
- மேஷம் - நற்செயல்
- ரிஷபம் - செலவு
- மிதுனம் - பயணம்
- கடகம் - இன்சொல்
- சிம்மம் - பணிவு
- கன்னி - தாமதம்
- துலாம் - மகிழ்ச்சி
- விருச்சி - ஆதரவு
- தனுசு - பொறுமை
- மகரம் - சோர்வு
- கும்பம் - கவனம்
- மீனம் - சிரமம்

## 4-9-26

■ அஷ்டமி



அரசு விடுமுறை



கோகுலாஷ்டமி

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். சிம்மம் மாதம். கிருஷ்ண பட்சம். சக 1948 பாத்ரபதம் 13
ஆவணி மாதம் தேய்பிறை அஷ்டமி - பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் பிறந்த நாளான கோகுலாஷ்டமி இன்று.
ஸப்தமி கா.02.08 அஷ்டமி மா.11.46 பின்பு நவமி - கார்த்திகை கா.12.56 ரோகிணி மா.11.22 பின்பு மிருகசீருஷம்.

ஸ்ரீ பராபவ ஆவணி **18** | **SEP - FRI** வெள்ளி | ரபிஉல் அவ்வல் **21** | தேய்பிறை 247 / 118

தேய். அஷ்டமி 44.15 (மா. 11.46) ரோகிணி 43.15 (மா. 11.22) தியாஜ் 24.35, 56.20 மரண 43.15 மேல் சித்த யோகம். சூரியஸாவர்ணி மன்வாதி. **கோகுலாஷ்டமி. அரசு விடுமுறை. ஸ்ரீபாஞ்சராத்திர ஜெயந்தி. அஷ்டமி.** ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீஆண்டாள் புறப்பாடு. சிறிய நகசு.

| நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை: 9.15-10.15 | 12.15-1.15 | 10.30 | 07.30 | 03.00 |
| மாலை: 2.00-3.00 | 6.30-7.30 | 12.00 | 09.00 | 04.30 |

சூலம் : மேற்கு; பரிகாரம் : வெல்லம் | சிம்ம லக்கனம் இருப்பு நா. 2 வி. 22 | சந்திராஷ்டமம்: விசாகம் அனுஷம்
கரணம் : 1.30-3 | சூரிய உதயம் : 6.04

சனி | செ | ரா | வி | 1 சிம்-புத 15 துலா-சுக் 17 கன்-புத | சூ கே | சு | பு
மேல் ↑ | திதி அஷ்டமி

**அறிவாளியை கேட்காதே அனுபவசாலியை கேள்**

**இராசிபலன்**
- மேஷம் - சாந்தம்
- ரிஷபம் - மேன்மை
- மிதுனம் - விவேகம்
- கடகம் - போட்டி
- சிம்மம் - சாதனை
- கன்னி - தேர்ச்சி
- துலாம் - ஊக்கம்
- விருச்சி - பொறுமை
- தனுசு - மகிழ்ச்சி
- மகரம் - ஆர்வம்
- கும்பம் - ஆதரவு
- மீனம் - பாராட்டு

## 5-9-2026

▲ நவமி

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். சிம்மம் மாதம். கிருஷ்ண பட்சம். சக 1948 பாத்ரபதம் 14
குரு பலவீனமாக இப்பவர்கள், நவமி அன்று சண்ட ஹோமம் செய்வது மிக சிறந்த பலன் தரும்.
நவமி மா.09.21 வரை, பின்பு தசமி - மிருகசீருஷம் 09.44 வரை, பின்பு திருவாதிரை.

ஸ்ரீ பராபவ ஆவணி **19** | **SEP - SAT** சனி | ரபிஉல் அவ்வல் **22** | தேய்பிறை 248 / 117

தேய். நவமி 38.13 (மா. 09.21) மிருகசீருஷம் 39.09 (மா. 09.44) சேஷம் 00.20 தியாஜ் 58.45 சித்த யோகம். **நவமி.** மதுரை நவநீதகிருஷ்ண சுவாமி சேஷ வாகனத்தில் உறியடி உற்சவம். உப்பூர் ஸ்ரீவிநாயகப் பெருமான் உற்சவம் ஆரம்பம். மூஷிக வாகனத்தில் பவனி.

| நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை: 8.00-9.00 | 10.45-11.45 | 09.00 | 06.00 | 01.30 |
| மாலை: 4.45-5.45 | 9.30-10.30 | 10.30 | 07.30 | 03.00 |

சூலம் : கிழக்கு; பரிகாரம் : தயிர் | சிம்ம லக்கனம் இருப்பு நா. 2 வி. 12 | சந்திராஷ்டமம்: அனுஷம் கேட்டை
கரணம் : 12-1.30 | சூரிய உதயம் : 6.04

சனி | செ | ரா | வி | 1 சிம்-புத 15 துலா-சுக் 17 கன்-புத | சூ கே | சு | பு
சம ↔ | திதி நவமி

**தாய்க்கு உதவாதவன் யாருக்கும் உதவ மாட்டான்**

**இராசிபலன்**
- மேஷம் - நன்மை
- ரிஷபம் - பரிவு
- மிதுனம் - கவலை
- கடகம் - தடங்கல்
- சிம்மம் - பயம்
- கன்னி - சிக்கல்
- துலாம் - சிரமம்
- விருச்சி - தனம்
- தனுசு - நட்பு
- மகரம் - பாராட்டு
- கும்பம் - களிப்பு
- மீனம் - தாமதம்

## 6-9-2026

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். சிம்மம் மாதம். கிருஷ்ண பட்சம். சக 1948 பாத்ரபதம் 15
நினைத்த காரியங்களை நிறைவேற்றும் நிமிஷாம்பாள் மற்றும் நாராயண வழிபாட்டுக்கு ஏற்ற தசமி திதி இன்று.
தசமி மா.06.57 வரை, பின்பு ஏகாதசி - திருவாதிரை மா.08.06 வரை, பின்பு புனர்பூசம்.

ஸ்ரீ பராபவ ஆவணி **20** | **SEP - SUN** ஞாயிறு | ரபிஉல் அவ்வல் **23** | தேய்பிறை 249 / 116

தேய். தசமி 32.12 (மா. 06.57) திருவாதிரை 35.04 (மா. 08.06) சேஷம் 02.45 சித்த யோகம். பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் காலை வெள்ளி கேடய சப்பரம் இரவு சிம்ம வாகன பவனி. திருவலஞ்சுழி சுவேதவிநாயகர் உற்சவ ஆரம்பம். பெருவயல் முருகப் பெருமான் பவனி.

| நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை: 6.00-7.00 | 10.45-11.45 | 04.30 | 03.00 | 12.00 |
| மாலை: 3.15-4.15 | 1.30-2.30 | 06.00 | 04.30 | 01.30 |

சூலம் : மேற்கு; பரிகாரம் : வெல்லம் | சிம்ம லக்கனம் இருப்பு நா. 2 வி. 02 | சந்திராஷ்டமம்: கேட்டை மூலம்
கரணம் : 10.30-12 | சூரிய உதயம் : 6.04

சனி | செ | ரா | வி | 1 சிம்-புத 15 துலா-சுக் 17 கன்-புத | சூ கே | சு | பு
மேல் ↑ | திதி தசமி

**முட்டாள் இறுதியில் செய்வான். அறிவாளி முதலில் செய்வான்.**

**இராசிபலன்**
- மேஷம் - பயம்
- ரிஷபம் - முயற்சி
- மிதுனம் - நலம்
- கடகம் - பிரீதி
- சிம்மம் - ஓய்வு
- கன்னி - செலவு
- துலாம் - வெற்றி
- விருச்சி - வரவு
- தனுசு - தெளிவு
- மகரம் - விருப்பம்
- கும்பம் - பணிவு
- மீனம் - சினம்

## 7-9-2026



சுபமுகூர்த்தம்



சர்வ ஏகாதசி

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். சிம்மம் மாதம். கிருஷ்ண பட்சம். சக 1948 பாத்ரபதம் 16
திருமணம் உள்ளிட்ட அனைத்து சுப ஆரம்பங்களுக்கும் ஏற்ற சுப யோக சுப தினம் இன்று.
ஏகாதசி மா.04.38 வரை, பின்பு துவாதசி - புனர்பூசம் மா.06.33 வரை, பின்பு பூசம்.

ஸ்ரீ பராபவ ஆவணி **21** | **SEP - MON** திங்கள் | ரபிஉல் அவ்வல் **24** | தேய்பிறை 250 / 115

தேய். ஏகாதசி 26.24 (மா. 04.38) புனர்பூசம் 31.12 (மா. 06.33) தியாஜ் 03.12, 50.05 அமிர்த 31.12 மேல் சித்தயோகம். **சுபமுகூர்த்தம். சர்வ ஏகாதசி.** பிள்ளையார்பட்டி கற்பகவிநாயகர் பூத வாகன உலா. பத்ராசலம் ராமபிரான் புறப்பாடு. மதுரை கூடலழகர் புறப்பாடு. சிறிய நகசு.

| நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை: 6.00-7.00 | 9.15-10.15 | 07.30 | 01.30 | 10.30 |
| மாலை: 4.45-5.45 | 7.30-8.30 | 09.00 | 03.00 | 12.00 |

சூலம் : கிழக்கு; பரிகாரம் : தயிர் | சிம்ம லக்கனம் இருப்பு நா. 1 வி. 52 | சந்திராஷ்டமம்: மூலம் பூராடம்
கரணம் : 9-10.30 | சூரிய உதயம் : 6.04

சனி | செ | ரா | வி | 1 சிம்-புத 15 துலா-சுக் 17 கன்-புத | சூ கே | சு | பு
சம ↔ | திதி ஏகாதசி

**வீரனை போரிலும், நண்பனை துன்பத்திலும் அறியலாம்.**

**இராசிபலன்**
- மேஷம் - சிரமம்
- ரிஷபம் - நஷ்டம்
- மிதுனம் - பொறுமை
- கடகம் - வருத்தம்
- சிம்மம் - ஊக்கம்
- கன்னி - அச்சம்
- துலாம் - நட்பு
- விருச்சி - முயற்சி
- தனுசு - ஆதாயம்
- மகரம் - பயம்
- கும்பம் - கவனம்
- மீனம் - வெற்றி

# உலகக் கண்ணோட்டம்

BEHIND ME MEDIA

## ஹோர்முஸ் நீரிணையின் சர்வதேசக் கடல் பகுதியில் இருந்து அகற்றப்பட்ட கண்ணிவெடிகள்!



ஹோர்முஸ் நீரிணையின் சர்வதேசக் கடல் பகுதிக்குள் ,ருந்த அனைத்துக் கண்ணிவெடிகளும் அகற்றப்பட்டு விட்டன என்று அமெரிக்கக் கடற்படை தன்னிடம் தெரிவித்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் தனது ட்ருத் சோஷியல் சமூக வலைதளப் பதிவில் ,தனைக் கூறியுள்ளார்.

,ந்நிலையில், புதிதாகக் கண்ணிவெடிகளை வைக்கும் எந்தவொரு கப்பலும் அல்லது படகும் உடனடியாகவும் துல்லியமாகவும் அழிக்கப்படும் என்று ஈரானுக்கு எச்சரிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது என்று அவர் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நீரிணையில் கண்ணிவெடிகள் வைப்பதற்கு எதிரான "பூஜ்ய சகிப்புத்தன்மை" கொள்கை முழு வீச்சில் நடைமுறையில் உள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

## தீவிர குளிர் விமானத்தின் சக்கரப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்ட நபர்

கீழ்வரும் தீவிரக் குளிர் மற்றும் ஆக்சிஜன் பற்றாக்குறை காரணமாகவே விமானத்தின் சக்கரப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்ட நபர் உயிரிழந்ததாக மரண விசாரணை அதிகாரி (Coroner) தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகங்களின் தகவல்படி, மொராக்கோ நாட்டின் தாஞ்சியர் (Tangier) நகரிலிருந்து புறப்பட்டு மேற்கு சசெக்ஸ் (West Sussex) பகுதியில் உள்ள காட்விக் விமான நிலையத்தை (Gatwick Airport) வந்தடைந்த 'ஏர் அரேபியா' (Air Arabia) விமானத்தின் தரையிறங்கும் உபகரணப் (landing gear) பகுதியில் அடையாளம் தெரியாத நபரின் சடலம் கண்டுபிடிக்கப் பட்டது.

இதுகுறித்து லண்டன் காட்விக் விமான நிலையப் பேச்சாளர் 'பீப்பிள்' (PEOPLE) ஊடகத்திற்கு அளித்த அறிக்கையில் கூறியிருப்பதாவது: காட்விக் விமான நிலையத்தை வந்தடைந்த 'ஏர் அரேபியா' விமானத்தில் ஒரு சம்பவம் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, விமான நிலைய அவசரகாலப் பிரிவினர் உடனடியாக அங்கு விரைந்தனர்."

"சசெக்ஸ் காவல்துறை உறுதிப் படுத்தியுள்ளபடி, அங்கு ஒரு சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது" என்று அவர் மேலும் தெரிவித்தார். "எங்கள் குழுவினர் சசெக்ஸ் காவல் துறைக்கும் மரண விசாரணை அதிகாரிக்கும் உரிய ஒத்துழைப்பை வழங்கினர். இச்சம்பவத்தால் பாதிக்கப்பட்டுள்ள அனை வருக்கும் எங்கள் அனுதாபங்கள்."




இந்தச் சம்பவம் நடந்து இரண்டு மாதங்களுக்குப் பிறகு, அந்த நபரின் மரணம் குறித்து ஹார்ஷம் (Horsham) மரண விசாரணை நீதிமன்றத்தில் அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

விமானத்தில் வழக்கமான சோதனைகளில் ஈடுபட்ட தரைவழிப் பொறியாளர் (ground engineer) ஒருவர் சடலத்தைக் கண்டெடுத்ததை அடுத்து, அந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டதாக பிபிசி செய்தி வெளியிட்டுள்ளது. விசாரணையின்போது தாக்கல் செய்யப்பட்ட பிரேதப் பரிசோதனை அறிக்கையில், மாரடைப்பு (cardiac arrest), ஹைபாக்சியா (hypoxia - ஆக்சிஜன் பற்றாக்குறை) மற்றும் ஹைப்போதெர்மியா (hypothermia - தீவிரக் குளிர் தாக்கம்) ஆகியவையே அந்த நபரின் இறப்புக்கான காரணங்கள் என்பது தெரியவந்துள்ளது. விமானத்தின் சக்கரப் பகுதியிலிருந்து பேக்கிங் பெல்ட் (packing strap) ஒன்று வெளியே தொங்குவதைக் கண்ட பின்னர்தான், தரைவழிப் பணியாளர்கள் அந்த நபரின் உடலைக் கண்டுபிடித்ததாக 'தி அர்கஸ்' ஊடகமும் தெரிவித்துள்ளது.

மரண விசாரணை அதிகாரி ஒருவர் நீதிமன்றத்தில் தெரிவிக்கையில், அந்த நபரின் மரணம் "இயற்கையானது அல்ல" என்று நம்புவதற்குத் தமக்குக் காரணம் இருப்பதாகக் கூறினார். மேலும், விமானத்தின் சக்கரப் பகுதிக்குள் நிலவிய சூழல் மிகக் கடுமையான குளிராகவும், ஆக்சிஜன் அளவு மிகவும் குறைவானதாகவும் இருந்திருக்கக்கூடும் என்றும் 'தி ஸ்டாண்டர்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

கூடுதல் விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை என்றாலும், இது தொடர்பான விசாரணை வரும் பிப்ரவரி மாதம் மீண்டும் தொடரவுள்ளது.

இது குறித்து 'பீப்பிள்' ஊடகம் தரப்பில் எழுப்பிய கேள்விகளுக்கு சசெக்ஸ் காவல்துறை, 'ஏர் அரேபியா' மற்றும் மேற்கு சசெக்ஸ் மரண விசாரணை சேவைப் பிரிவு ஆகியவை உடனடியாகப் பதிலளிக்கவில்லை.

## அவுஸ்திரேலியாவில் பாலூட்டி விலங்கில் முதன்முறையாக எச்5என்1 பறவைக் காய்ச்சல் தொற்று உறுதி




அவுஸ்திரேலியாவில் முதன்முறையாக பாலூட்டி விலங்கொன்றில் எச்5என்1 (H5N1) பறவைக் காய்ச்சல் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தெற்கு அவுஸ்திரேலியாவின் பீச்போர்ட் கடலோரப் பகுதியில் இறந்து கிடந்த 'நீண்ட மூக்கு கடல்நாய்' ஒன்றிலேயே இத்தொற்று பரவியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

காட்டுப் பறவைகள் மூலம் இந்த வைரஸ் கடல்நாய்க்கு பரவியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் நிலையில், நாட்டின் விவசாயத்துறை அல்லது பண்ணை விலங்குகளுக்கு இத்தொற்று இதுவரை பரவவில்லை என அவுஸ்திரேலிய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

வனவிலங்குகளிடையே இந்நோய் பரவுவதைத் தடுப்பது கடினம் எனக் குறிப்பிட்டுள்ள அதிகாரிகள், பொதுமக்களுக்கு இதனால் ஏற்படும் சுகாதார ஆபத்து மிகக் குறைவாகவே உள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

## கியூபாவின் ஜோஹன்னா 'மிஸ் டீன் இன்டர்நேஷனல்'




இந்தியாவின், ஜெய்ப்பூரில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கியூபாவைச் சேர்ந்த ஜோஹன்னா உரங்கா, "மிஸ் டீன் இன்டர்நேஷனல் (Miss Teen International 2026) பட்டத்தை தனதாக்கிக் கொண்டார்.

இராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் 2026 ம் ஆண்டுக்கான மிஸ் டீன் இன்டர்நேஷனல் போட்டி நடைபெற்றது.

உலகெங்கிலும் உள்ள 13 முதல் 19 வயது வரையிலான இளம் பெண்களுக்காக நடத்தப்பட்ட இந்த புகழ்பெற்ற சர்வதேச அழகுப் போட்டியில் 30 க்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்தவர்கள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

இறுதிப் போட்டியில் கியூபாவைச் சேர்ந்த ஜோஹன்னா உராங்கா வெற்றி பெற்று 'மிஸ் டீன் இன்டர்நேஷனல் 2026' பட்டத்தை தனதாக்கிக் கொண்டார்.

அதேவேளை, நமீபியாவைச் சேர்ந்த சாண்டல் போரன் முதல் ரன்னரப்பாகவும், பராகுவேயைச் சேர்ந்த கியுலியானா ஒகாரிஸ் இரண்டாம் ரன்னரப்பாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஆண்ட்ரியா அல்மெஸ்டிகா மூன்றாம் ரன்னரப்பாக தெரிவு செய்யப்பட்டார்.

பட்டம் வென்ற கியூபா அழகி ஜோஹன்னா உராங்கா தனது வெற்றி குறித்து கருத்து தெரிவிக்கையில், "கனவு நனவானது", "இந்தப் போட்டிக்காக மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நான் தயாராகி வந்தேன். உண்மையைச் சொல்வதானால், எனது கடின உழைப்புக்கு தற்போது நல்ல பலன் கிடைத்துள்ளது. இது எனது மிகப்பெரிய கனவுகளில் ஒன்றாகும். அந்தக் கனவு தற்போது நனவாகியுள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.

## அதிநவீன சக்திவாய்ந்த 'நான்சி கிரேஸ் ரோமன்' தொலைநோக்கியை வெற்றிகரமாக ஏவியது நாசா

இருண்ட ஆற்றல், கறுப்பு ஓட்டைகள் மற்றும் அண்டத்தின் பிற அறியப்படாத இரகசியங்களை ஆராயும் வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்துடன், நாசாவின் அதிநவீன 'நான்சி கிரேஸ் ரோமன்' விண்வெளித் தொலைநோக்கி வெற்றிகரமாக விண்வெளியில் ஏவப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் உள்ள கென்னடி விண்வெளி மையத்திலி ருந்து ஸ்பேஸ்எக்ஸ் ரொக்கெட் மூலம் ஞாயிற்றுக்கிழமை இத்தொலைநோக்கி விண்ணில் செலுத்தப்பட்டது.



ரோமன் தொலைநோக்கியானது புகழ்பெற்ற ஹப்பிள் மற்றும் ஜேம்ஸ் வெப் தொலைநோக்கிகளை விட 100 மடங்கு அதிக பரப்பளவை ஒரே நேரத்தில் பார்க்கும் அதிநவீன அகச்சிவப்பு கமராக்களைக் கொண்டுள்ளது.

பூமியிலிருந்து சுமார் 10 இலட்சம் மைல்கள் (1.6 மில்லியன் கி.மீ) தொலைவில் உள்ள தனது இலக்கை அடைய இது 100 நாட்கள் பயணிக்கவுள்ளது.

1960-களில் நாசாவின் முதல் பெண் தலைமை வானியலாளராகப் பணியாற்றி, ஹப்பிள் தொலைநோக்கி உருவாக முக்கிய பங்காற்றிய இயற்பியலாளர் நான்சி கிரேஸ் ரோமனின் நினைவாக இத்தொலைநோக்கிக்கு பெயர் சூட்டப் பட்டுள்ளது.

முதற்கட்டமாக 5 ஆண்டுகள் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இத்தொலைநோக்கி, 10 ஆண்டுகள் வரை தனது ஆராய்ச்சிப் பணிகளைத் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 55.7 % இலங்கையர் பன்முக அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர் - ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம்

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின்,பன்முக அச்சுறுத்தல் சுட்டெண் அறிக்கையின் தரவுகளுக்கமைய, இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் 55.7 சதவீதமானோர் கல்வி, சுகாதாரம்,கடன் சுமை மற்றும் வாழ்க்கைத்தரம் ஆகிய துறைகளின் கீழ் “பன்முக அச்சுறுத்தலுக்கு“ உள்ளாகியுள்ளனர். வறுமை விகிதம் 25 சதவீதத்துக்கும் அதிகமாக உள்ளதாகவும், மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமானோர் உணவு மற்றும் மருந்துகள் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கடன் பெற அல்லது பொருட்களை அடகு வைக்கத் தள்ளப்பட்டுள்ளனர்.





இந்த இரண்டு அறிக்கைகளின் மூலமும் இலங்கையின் கள யதார்த்தம் உண்மையாக வெளிப்பட்ட போதிலும், அரசாங்கம் தொடர்ந்து நாட்டின் வறுமையைக் குறைத்துள்ளதாகவும், அரசாங்கத்தின் திறைசேரி நிரம்பி வழிவதாகவும் குறிப்பிடுகிறது.அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நுண்பொருளாதார அறிவிப்புகளுக்கும், நாட்டின் உழைக்கும் மக்கள் எதிர்கொள்ளும் உண்மையான வாழ்க்கைத்தர வீழ்ச்சிக்கும் இடையிலான இடைவெளி கவலைக்குரியது என தினன தகுன அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் கீழ் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்வதன் ஊடாக மாத்திரம் நாட்டில் நிலவும் உண்மையான வருமான வீழ்ச்சியையும் வறுமை நெருக்கடியையும் மறைத்துவிட முடியாது



அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நுண்பொருளாதார அறிவிப்புகளுக்கும், நாட்டின் உழைக்கும் மக்கள் எதிர்கொள்ளும் உண்மையான வாழ்க்கைத்தர வீழ்ச்சிக்கும் இடையிலான இடைவெளி கவலைக்குரியது.

முதன்மை கணக்கின் இருப்பு நேர்மறையான மதிப்பைப் பெறுதல், வரவு செலவுத் திட்ட இடைவெளியைக் கட்டுப்படுத்தக்கூடிய மட்டத்தில் வைத்திருத்தல் மற்றும் நிதி ஸ்திரத்தன்மை குறித்து திறைசேரி மற்றும் சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட நிறுவனங்கள் எவ்வாறான சாதகமான கருத்துக்களை முன்வைத்தாலும், அந்த ஆவணப்படுத்தப்பட்ட தரவுகள் சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கை யதார்த்தத்தைப் பிரதிபலிக்கவில்லை என்பது அறிவியல் பூர்வமான தகவல்கள் மூலமும் கள யதார்த்தத்தின் மூலமும் தெளிவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உண்மையான வருமானத்தை ஈட்டும் திறனில் இலங்கை உலகளவில் மிகக் குறைந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமைக்கு அரசாங்கத்தின் பொருளாதார முகாமைத்துவத்தில் உள்ள பாரிய குறைபாடாகும்.

தெற்காசிய பிராந்தியத்தில் உண்மையான உழைப்பு கொள்வனவு திறனில் இலங்கை மிகக் குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதை இச்சுட்டெண் காட்டுகிறது. இது பாகிஸ்தானில் 570 டொலர்களாகவும்,நேபாளத்தில் 490 டொலர்களாகவும்,பங்களாதேஷில் 379 டொலர்களாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று இந்தியாவில் இந்த மதிப்பு 233 டொலர்களாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் கீழ் வட்டி செலுத்தப்படாத அரச உபரி வருவாய் அடைந்துள்ளதாக அரசாங்கம் கூறுகிறது. ஆனால்,பெறுமதி சேர்க்கப்பட்ட வரியை விரிவுபடுத்துதல், மறைமுக வரிகளை உயர்த்தல் மற்றும் பொதுச் செலவினங்களைக் கடுமையாகக் கட்டுப்படுத்தி உள்நாட்டிலிருந்து வருவாயை திரட்டுவதன் மூலமுமே அரசாங்கம் இந்த முடிவை எட்டியுள்ளது.

அரச கடன் ஸ்திரத்தன்மை அவசியமானது என்ற போதிலும், வீடுகளின் உண்மையான வருமானத்தைக் கடுமையாக நெருக்கடிக்கு உள்ளாக்கி எட்டப்படும் நிதி நிலுவைகளை ஒரு உண்மையான பொருளாதார வெற்றியாக வரையறுக்க முடியாது. பொருளாதார பரிமாற்றச் சட்டத்தின் மூலம் நீண்டகால பொருளாதார இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டாலும், மக்கள் எதிர்கொள்ளும் கடுமையான வாழ்க்கைச் செலவு நெருக்கடிக்கு அதிலிருந்து உடனடி நிவாரணம் கிடைக்காது என்பது ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்ட ஒரு யதார்த்தமாகும்.

அத்தியாவசிய நுகர்வோர் மற்றும் உற்பத்திகளுக்கான உள்ளீடுகள் மீது விதிக்கப்பட்டுள்ள வரிச்சுமையைத் தளர்த்தி, நிதி ஒருங்கிணைப்பின் சுமையை சாதாரண நுகர்வோர் மீது மட்டும் சுமத்துவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் தங்களது ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற ஊதியத்தை வழங்கக்கூடிய வகையில், குறிப்பாக அதிக மின்சாரக் கட்டணம் உள்ளிட்ட உற்பத்திச் செலவுகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரு நாட்டின் பொருளாதார ஆரோக்கியம் என்பது வெறும் நிதி இலக்குகளை அடைவதை வைத்து மட்டும் அளவிடப்படாமல், உண்மையான ஊதிய வளர்ச்சி, வறுமை ஒழிப்பு மற்றும் மக்களின் உண்மையான கொள்வனவு திறன் இயல்பு நிலைக்கு திரும்புவதை அடிப்படையாகக் கொண்டே அளவிடப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி, அதனை அடிப்படையாகக் கொண்ட அரச கொள்கையொன்றை அறிமுகப்படுத்த வேண்டும்.



விசுவல் கெபிலடிஸ் நிறுவனத்தால் சமீபத்தில் வெளியாக்கப்பட்ட சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தரவுகளின் அடிப்படையில், கொள்வனவு திறன் சமநிலை முறைப்படி தயாரிக்கப்பட்ட புதிய உலகளாவிய குறைந்தபட்ச ஊதியச் சுட்டெண் மூலம் நாட்டில் நிலவும் நெருக்கடியின் தீவிரத்தன்மை தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

உலகின் 130 நாடுகளில் நுகர்வோர் பொருட்களைக் கொள்வனவு செய்யும் திறனில் இலங்கை 120ஆவது இடத்தைப் பெற்றுள்ளதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. இதன் மூலம் இலங்கையின் உண்மையான கொள்வனவு திறனின் அடிப்படையில் நாட்டின் குறைந்தபட்ச ஊதியம் மாதத்திற்கு 200 டொலர்களாக மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது உறுதியாகியுள்ளது.



ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின், பன்முக அச்சுறுத்தல் சுட்டெண் அறிக்கையின் தரவுகளுக்கமைய, இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் 55.7 சதவீதமானோர் கல்வி,சுகாதாரம்,கடன் சுமை மற்றும் வாழ்க்கைத்தரம் ஆகிய துறைகளின் கீழ் “பன்முக அச்சுறுத்தலுக்கு“ உள்ளாகியுள்ளனர்.

நாட்டில் வறுமை விகிதம் 25 சதவீதத்துக்கும் அதிகமாக உள்ளதாகவும், மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமானோர் உணவு மற்றும் மருந்துகள் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கடன் பெற அல்லது பொருட்களை அடகு வைக்கத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்த இரண்டு அறிக்கைகளின் மூலமும் இலங்கையின் கள யதார்த்தம் உண்மையாக வெளிப்பட்ட போதிலும், அரசாங்கம் தொடர்ந்து நாட்டின் வறுமையைக் குறைத்துள்ளதாகவும்,அரசாங்கத்தின் திறைசேரி நிரம்பி வழிவதாகவும் குறிப்பிடுகிறது.

# ஆலய வழிபாடுகளில் சைவ, தமிழ் மரபுகளை சிதைக்கும் கலாசார சீர்கேடுகள் - இந்துக் குருமார் அமைப்பு கண்டனம்

BEHIND ME MEDIA

ஈழத்தின் சைவ, தமிழ் மரபுகளை சிதைக்கும் கலாசார சீர்கேடுகளுக்கு இந்துக் குருமார் அமைப்பு கண்டனம் வெளியிட்டுள்ளது.

இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் சிவாகம கலாநிதி சிவஸ்ரீ. கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள் மற்றும் செயலாளர் சிவஸ்ரீ. ச. சாந்தருப குருக்கள் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

சைவம் தழைத்தோங்கும் எமது ஈழமணி திருநாட்டிலே வழிபாட்டியல் விழுமியங்கள், பண்பாடு, கலை, கலாச்சாரம் அத்தனையையும் போற்றி வந்த ஒரு புண்ணிய பூமியான எமது இலங்கைத் திருநாட்டில், குறிப்பாக வடமாகாணத்தில் இவையெல்லாம் மிகச் சிறப்பாகக் கடைபிடிக்கப்பட்டு வந்தன.





ஆனால், அண்மைக்காலமாக மிகவும் மனதுக்கு வேதனையையும் துயரையும் தரக்கூடிய வகையிலே சில கலாச்சார சீர்கேடுகளும் அசிங்கங்களும் ஆலய வழிபாட்டியல்களில் அரங்கேறி வருவது கண்டிக்கத்தக்கது.

மங்கள வாத்தியக் கலைஞர்களுக்கு வழங்கிய மரியாதை குறைந்து, தேவையற்ற புதிய புகுத்தல்கள் ஆலயங்களில் இடம்பெறுகின்றன, பாரம்பரிய மயிலாட்டம் போன்ற கலைகளின் பெயரால், சகோதர சமய மற்றும் சமூகங்களைச் சார்ந்த இளம் பெண்களை அழைத்து நாகரிகமற்ற உடைகளை அணிவித்துத் தேவையற்ற நடனங்கள் நிகழ்த்தப்படுவது மிகவும் கருணைகொடுரமாகப் பார்க்கப்பட வேண்டிய விடயமாகும்.



இந்து குருமார் அமைப்பு
HINDU PRIESTS ASSOCIATION
(Reg No.: HA/04/CBO/140)
10/2, Bhathiya Mawatha, Kalubowila, Dehiwela, 10350, Sri Lanka.

President
"Sivagama Kalanithi"
Dr. SIVASRI K.V.K.VYTHEESWARA KURUKKAL
Tel : (+94)11 2721671, 0777349123
E-mail: kvytheeswaran@gmail.com

Secretary :
SIVASRI S.SHANTHARUBA KURUKKAL
Kopay North, Jaffna,
Sri Lanka.
Tel : (+94)75 1481621

Treasurer :
SIVASRI N.KRISHNAMOHANA KURUKKAL
Tel : (+94)71 2670280
E-mail : hindupriestsassociation@gmail.com

**ஈழத்தின் சைவ, தமிழ் மரபுகளைச் சிதைக்கும் கலாச்சார சீர்கேடுகளுக்கு இந்து குருமார் அமைப்பின் கடும் கண்டனம்!**

சைவம் தழைத்தோங்கும் எமது ஈழமணி திருநாட்டிலே, பல்லடுங்கு காலமாக சைவமும் தமிழும் தழைத்து ஓங்கி வருவதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. அனைவருமே மொழியையும் இனத்தையும் நேசித்து போற்றிவந்ததுடன், அதற்கு மேலாகத் தம் சமயமான சைவப் பெருநெறியையும் போற்றிப் பாதுகாத்து வந்துள்ளனர். வழிபாட்டியல் விழுமியங்கள், பண்பாடு, கலை, கலாச்சாரம் அத்தனையையும் போற்றி வந்த ஒரு புண்ணிய பூமியான எமது இலங்கைத் திருநாட்டில், குறிப்பாக வடமாகாணத்தில் இவையெல்லாம் மிகச் சிறப்பாகக் கடைபிடிக்கப்பட்டு வந்தன.

ஆனால், அண்மைக்காலமாக மிகவும் மனதுக்கு வேதனையையும் துயரையும் தரக்கூடிய வகையிலே சில கலாச்சார சீர்கேடுகளும் அசிங்கங்களும் ஆலய வழிபாட்டியல்களில் அரங்கேறி வருவது கண்டிக்கத்தக்கது.

**முக்கிய சீர்கேடுகளும் கவலைக்குரிய விடயங்களும்:**

- **மங்கள வாத்தியங்களின் வீழ்ச்சி:**
  மங்கள வாத்தியக் கலைஞர்களுக்கு வழங்கிய மரியாதை குறைந்து, தேவையற்ற புதிய புகுத்தல்கள் ஆலயங்களில் இடம்பெறுகின்றன.
- **கலாச்சாரச் சிதைவும் முறையற்ற நடனங்களும்:**
  பாரம்பரிய மயிலாட்டம் போன்ற கலைகளின் பெயரால், சகோதர சமய மற்றும் சமூகங்களைச் சார்ந்த இளம் பெண்களை அழைத்து நாகரிகமற்ற உடைகளை அணிவித்துத் தேவையற்ற நடனங்கள் நிகழ்த்தப்படுவது மிகவும் கருணைகொடுரமாகப் பார்க்கப்பட வேண்டிய விடயமாகும்.
- **வணிகமயமாக்கலும் போட்டி மனப்பான்மையும்:**
  இறைபக்திக்குரிய ஆலயங்களை வணிக மையமாக்கி, இந்தியாவில் இருந்து விமானம் மூலம் பாடகர்களை விலைக்கு அமர்த்தி அழைத்து வந்து, 'ஆலயத்திற்கு இரண்டு, நான்கு, எட்டு' எனப் போட்டி போட்டுக்கொண்டு மேடையேற்றும் கலாச்சாரம் வேதனை அளிக்கிறது.
- **பக்திக்குப் பதிலாக சினிமா குத்தாட்டங்கள்:**
  பக்தி இசைக்குப் பதிலாக முழுமையாக சினிமாப் பாடல்களும், குறிப்பாக குத்துப் பாடல்களும் இசைக்கப்பட்டு, எதிர்கால சந்ததியினரை ஆலய வளாகங்களிலேயே மற்றும் பிரகாரங்களிலேயே குத்தாட்டம் போட வைப்பது மன்னிக்க முடியாத செயலாகும். அண்மையில் வட புகுதியில், குறிப்பாக நெல்லியடிப் பிரதேசத்தில் இளம் சிறார்களை மேடையில் ஏற்றி நடத்தப்பட்ட குத்தாட்ட நிகழ்வுகள் இதற்குச் சான்றாகும்.
- **அதிகப்படியான மின் ஒளி மற்றும் ஒலித் தொல்லைகள்:**
  அதீதமான மின் ஒளியும் ஒலியும் பக்தர்களின் கண்பார்வையில் நூற்றுக்கணக்கான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன. ஆலயத்திற்கு வந்து ஆனந்தக் கண்ணீர் விட்டு மனக்கஷ்டங்களைத் தீர்க்கும் மக்கள், இன்று வேதனைக் கண்ணீர் சிந்துகின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

**எமது கோரிக்கைகளும் எச்சரிக்கையும்:**

கண்டனத் அறிக்கைகளை வெளியிடுவதரல் மட்டுமே இந்த நிலையை மாற்றிவிட முடியாது. ஆலய நிர்வாகங்கள், சமய சமூக அமைப்பு சார்ந்தவர்கள், திருவிழா உபயங்கள் செய்வோர் அனைவரும் இதனை ஆழமாக உணர வேண்டும்.

- ஆலய வழிபாடுகளில் காணப்படும் தேவையற்ற பண்பாட்டு விழுமிய, கலாச்சார மபை மீறல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
- போட்டி மனப்பான்மைலயத் தவிர்த்து, இறைவன் மேல் கொண்ட பக்தியின் உச்சியை உணர வேண்டும்.
- கிராமங்கள் தோறும் சரியான வழிபாட்டியல் முறைகளைக் கொண்டுவந்து, எமது சமயத்தையும் சந்ததியினரையும் நல்வாழ்வு பெறச் செய்ய வேண்டும்.

இனிவரும் காலங்களிலாவது இவ்வாறான செயற்பாடுகள் முழுமையாகத் தவிர்க்கப்பட வேண்டும் என எமது இந்து குருமார் அமைப்பு சார்பில் மிகமிகப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

அன்புடன்,

"Sivagama Kalanithi"
Dr. Sivasri K.V.K. Vytheeswara Kurukkal
President, Hindu Priests' Association
Regd. No. HA/04/CBO/140
10/2, Bhathiya Mawatha, Kalubowila, Dehiwela,
Sri Lanka.

இறைபக்திக்குரிய ஆலயங்களை வணிக மையமாக்கி, இந்தியாவில் இருந்து விமானம் மூலம் பாடகர்களை விலைக்கு அமர்த்தி அழைத்து வந்து, 'ஆலயத்திற்கு இரண்டு, நான்கு, எட்டு' எனப் போட்டி போட்டுக்கொண்டு மேடையேற்றும் கலாசாரம் வேதனை அளிக்கிறது.

பக்தி இசைக்குப் பதிலாக முழுமையாக சினிமாப் பாடல்களும், குறிப்பாக குத்துப் பாடல்களும் இசைக்கப்பட்டு, எதிர்கால சந்ததியினரை ஆலய வளாகங்களிலேயே மற்றும் பிரகாரங்களிலேயே குத்தாட்டம் போட வைப்பது மன்னிக்க முடியாத செயலாகும். அண்மையில் வட பகுதியில், குறிப்பாக நெல்லியடிப் பிரதேசத்தில் இளம் சிறார்களை மேடையில் ஏற்றி நடத்தப்பட்ட குத்தாட்ட நிகழ்வுகள் இதற்குச் சான்றாகும்.

அதீதமான மின் ஒளியும் ஒலியும் பக்தர்களின் கண்பார்வையில் நூற்றுக்கணக்கான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன. ஆலயத்திற்கு வந்து ஆனந்தக் கண்ணீர் விட்டு மனக்கஷ்டங்களைத் தீர்க்கும் மக்கள், இன்று வேதனைக் கண்ணீர் சிந்துகின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

அந்த வகையில், ஆலய நிர்வாகங்கள், சமய சமூக அமைப்பு சார்ந்தவர்கள், திருவிழா உபயங்கள் செய்வோர் அனைவரும் இதனை ஆழமாக உணர வேண்டும். ஆலய வழிபாடுகளில் காணப்படும் தேவையற்ற பண்பாட்டு விழுமிய, கலாச்சார மரபு மீறல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

# இந்தியாவுக்கு நீண்டகால அடிப்படையில் யுரேனியம்



நீண்டகால அடிப்படையில் இந்தியாவுக்கு யுரேனியம் வழங்க உஸ்பெகிஸ்தானுடன் முக்கிய ஒப்பந்தம் கையெழுத்தானது. மேலும், பிரதமர் மோடிக்கு உஸ்பெகிஸ்தான் நாட்டின் உயரிய விருதான ‘ஒலி டரஜாலி டஸ்ட்லிக்’ விருது வழங்கப்பட்டது.

பிரதமர் நரேந்திர மோடி இரண்டு நாள் அரசு முறை பயணமாக கடந்த சனிக் கிழமை உஸ்பெகிஸ்தான் தலைநகர் தாஷ்கண்டுக்கு சென்றார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிரதமர் மோடியும், உஸ்பெகிஸ்தான் அதிபர் மிர்சியோயேவும் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினர். அந்தப் பேச்சு வார்த்தையில், இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகத்தை மேம்படுத்துவது, பாதுகாப்பு, எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

அப்போது வர்த்தகம், பாதுகாப்பு, எரிசக்தி, கலாச்சாரம், உயர் கல்வி, அறிவியல் ஆராய்ச்சி, ஆயர்வேதம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, அகழ்வாராய்ச்சி, சுற்றுலா, கனிம வளம், புவியியல் ஆராய்ச்சி தொடர்பாக இரு நாடுகள் இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. குறிப்பாக நீண்டகால அடிப்படையில் இந்தியாவுக்கு யுரேனியம் வழங்க உஸ்பெகிஸ்தானுடன் முக்கிய ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்தியாவில் இருந்து உஸ்பெகிஸ்தானுக்கு மருந்துகள் மற்றும் தொழில் துறைக்கு தேவையான இயந்திரங்கள் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அந்த நாட்டில் இருந்து உரங்கள், பழங்கள் இறக்குமதி செய்யப்படுகிறது. கல்வி, தகவல் தொழில்துட்ப துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# மு.க.ஸ்டாலினுக்கு பாதுகாப்பு குறைப்பு: அரசைக் கண்டித்து தி.மு.க. ஆர்ப்பாட்டம்



முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பைக் குறைத்துத் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், ஆளுங்கட்சியான த.வெ.க. அரசைக் கண்டித்து தி.மு.க.வினர் சமூக வலைதளங்களில் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

‘இசட் பிளஸ்’ பாதுகாப்பு வாபஸ்: கடந்த 2021-ல் முதலமைச்சராகப் பதவியேற்ற மு.க.ஸ்டாலினுக்குத் தினமும் 55 போலீசார் சுழற்சி முறையில் ஈடுபடும் ‘இசட் பிளஸ்’ (Z+) பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்தது.

சமீபத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. ஆட்சி அதிகாரத்தை இழந்ததோடு, கொளத்தூர் தொகுதியில் மு.க.ஸ்டாலினும் தோல்வியடைந்ததையடுத்து, வழக்கமான அரசு நடைமுறைகளின்படி தற்போது அவரது பாதுகாப்பு ‘இசட்’(Z) பிரிவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

சென்னை ஆழ்வார்ப்பேட்டை செனடாப் சாலையில் உள்ள மு.க.ஸ்டாலின் இல்லத்திற்குச் செல்லும் 4 நுழைவுவாயில்களில் 20 போலீசார் சுழற்சி முறையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வந்தனர். தற்போது இது 2 நுழைவுவாயில்களில் 10 போலீசாராகக் குறைக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டில் இணைய மின்கட்டணம் செலுத்துவோர் 10 கோடி மக்கள்?

தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தில் (TANGEDCO) இணையம் உள்ளிட்ட டிஜிட்டல் முறைகள் மூலம் மின் கட்டணம் செலுத்துவோரின் எண்ணிக்கை 10 கோடியைத் தாண்டிப் புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.

மின் பயன்பாட்டுக் கட்டணம் மற்றும் டிஜிட்டல் பரிவர்த்தனைகள் குறித்த முக்கிய விவரங்கள்:

நுகர்வோர் எண்ணிக்கை: தமிழ்நாட்டில் 2.54 கோடி வீடுகள் உள்பட அனைத்துப் பிரிவுகளிலும் சேர்த்து மொத்தம் 3.51 கோடி மின் நுகர்வோர்கள் உள்ளனர்.

இலவச மின்சாரப் பயனாளிகள் போக, மாதம் சராசரியாக 1 கோடி முதல் 1.15 கோடி பேர் வரை மின் கட்டணம் செலுத்துகின்றனர்.



2025-26 வளர்ச்சி: 2025–26 நிதியாண்டில் டிஜிட்டல் முறையில் மின் கட்டணம் செலுத்தியவர்களின் எண்ணிக்கை 10.63 கோடியாக உயர்ந்துள்ளது. இதன்மூலம் வசூலான மொத்தத் தொகை ரூ. 62,537 கோடி ஆகும்.

நுகர்வோரின் வசதிக்காக விரைவில் மேலும் பல புதிய ஆன்லைன் சேவைகள் தொடங்கப்பட உள்ளதால், டிஜிட்டல் பரிவர்த்தனைகள் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# “சமூக நீதித் தலைவர்களின் பெயர்களை அரசு திட்டமிட்டு நீக்கவில்லை” – அமைச்சர் ராஜ்மோகன்

“இடஒதுக்கீடு மானிய கோரிக்கையில் சமூக நீதித் தலைவர்களின் பெயர்களை திட்டமிட்டு நீக்கவில்லை. பெரியார், அம்பேத்கரை நாங்கள் கொள்கைத் தலைவர்களாக கொண்டிருக்கிறோம். அவர்களின் பெயர்கள் விரைவில் இடஒதுக்கீடு மானிய கோரிக்கையில் சேர்க்கப்படும்” என்று பள்ளி கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார்.

பெரம்பலூரில் பல்வேறு துறைகளின் கீழ் கட்டப்பட்ட புதிய கட்டிடங்கள் மற்றும் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு மாவட்ட ஆட்சியர் அலுவலத்தில் நடந்தது. பேட்டி அளித்த அமைச்சர் ராஜ்மோகன் கூறுகையில், “இடஒதுக்கீடு மானிய கோரிக்கையில் சமூக நீதித் தலைவர்களின் பெயர்களை திட்டமிட்டு நீக்கவில்லை. இதற்கு முந்தைய ஆட்சியில் நீக்கப்பட்டதா என்பதை ஆய்வு செய்தோம். அதன்படி திமுக ஆட்சியில் கடந்த 3 ஆண்டுகளாக நேரு, பெரியார், அம்பேத்கரின் பெயர்கள் இடஒதுக்கீடு திட்டத்தில் இடம்பெறாமல் இருந்தது. எப்படி நடந்தது என்பது தெரியவில்லை.

ஆனால் நாங்கள் வேண்டுமென்று சமூக நீதிதலைவர்களின் பெயர்களை நீக்கவில்லை. பெரியார், அம்பேத்கரை நாங்கள் கொள்கைத் தலைவர்களாக கொண்டிருக்கிறோம். அவர்களின் பெயர்கள் விரைவில் இடஒதுக்கீடு மானிய கோரிக்கையில் சேர்க்கப்படும் என்றார்.



# அரசு ஊழியர்கள் பணி நேரத்தில் எவ்வளவு பணம் வைத்திருக்கலாம்?

அரசு அலுவலகங்களில் பணி நேரத்தில் அரசு ஊழியர்கள் தங்களிடம் எவ்வளவு ரொக்கம் வைத்திருக்கலாம் என்ற விதியை வகுக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த கலா என்பவர் மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், முக்கூடல் சார் பதிவாளராகப் கடந்த 2021-ம் ஆண்டு பணியாற்றியபோது, அலுவலகத்தில் நான் ரூ.45,000 வைத்திருந்ததாக லஞ்ச ஒழிப்புத் துறை நடத்திய சோதனையில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டது. இந்த நடவடிக்கையை ரத்து செய்ய வேண்டும் என குறிப்பிட்டிருந்தார்.



இந்த வழக்கு நீதிபதி புகழேந்தி முன்பாக விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில், அந்த பணம் சொந்த செலவுக்காக வைக்கப்பட்டிருந்தது என தெரிவிக்கப்பட்டது.

அரசுத் தரப்பில், பதிவுத்துறையின் தலைமைப் பதிவாளர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையின்படி பணியில் இருக்கும்போது தங்களிடம் வைத்திருக்கக் கூடிய பண வரம்பு குறித்தும், இது தொடர்பான பதிவேடுகளைப் பராமரிப்பது குறித்தும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

# விவசாய நில கையகப்படுத்தல் செங்கோட்டையன் கருத்தால் விவசாயிகள் அதிருப்தி



தமிழகத்தில் மின்கட்டணம், சொத்துவரிக் குறைப்பு, வேலையின்மை பிரச்சினைக்கு தீர்வு காணுதல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் ஆக.21 முதல் 31-ம் தேதி வரை மக்கள் சந்திப்பு இயக்கம் மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக சோழிங்கநல்லூர், பெருங்குடி கல்லுக்குட்டை பகுதியில் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், பொதுமக்களை நேரில் சந்தித்து துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

பட்டா வழங்கவேண்டிய அரசாங்கம், பட்டா வழங்காத காரணத்தாலேயே எந்தவிதமான அடிப்படை வசதிகளையும் பெறுவதற்கு இம்மக்கள் தகுதியற்றவர்களா? 40 ஆண்டுகள் மக்கள் வாழும் பகுதிகளை குடியிருப்புகளாக அங்கீகரித்து குடிமனை பட்டா வழங்குவதற்கு தமிழக அரசு முன்வர வேண்டும். மேட்டூர் அணையில் 45 நாட்களுக்கு மட்டுமே தண்ணீர் திறந்துவிடப்படும் என்பது ஏற்புடையதல்ல. 150 நாட்கள் வரை இருந்தால்தான் சம்பா சாகுபடி செய்ய முடியும். எனவே, தமிழக அரசு உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் கர்நாடகத்திடம் இருந்து தண்ணீரைப் பெற்று, சம்பா சாகுபடி முழுமையாக நடைபெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் இவ்வாறு அவர் கூறினார்.


BEHIND ME MEDIA
BEHIND ME MEDIA
WE SEE BOTH AHEAD AND BEHIND
web : behindmenews.org
பிரசுரம் இலவசம்
இது உங்களுக்கான தளம்
ஆலய நிகழ்வுகள்
ஒன்றுகூடல்கள்
விழிப்புணர்வு நிகழ்வுகள்
நினைவேந்தல்கள்
மரண அறிவித்தல்கள்
கொண்டாட்டங்கள்
ஆலோசனை நிகழ்வுகள்
கலை - கலாசார அம்சங்கள்
அறிவித்தல்கள்
போன்ற எமது சமூகம் சார் நிகழ்வுகள்
தொடர்புக்கு
இலங்கை - +94 76239 0159
இந்தியா - + 91 917632 3079
கனடா - + 437 688 3493
மின்னஞ்சல் - info@behindmemedia.com






BEHIND ME MEDIA








1. மகாகவி சுப்பிரமணிய பாரதியார் 1882ஆம் ஆண்டு எட்டயபுரத்தில் பிறந்தார்.
2. அவர் சிறந்த கவிஞர், எழுத்தாளர், பத்திரிகையாளர் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர் ஆவார்.
3. தேசப்பற்று, பெண்கள் விடுதலை, சாதி ஒழிப்பு மற்றும் சமூக சமத்துவம் குறித்து பல கவிதைகளை எழுதினார்.
4. "அச்சமில்லை அச்சமில்லை", "ஓடி விளையாடு பாப்பா", "சின்னஞ்சிறு கிளியே" போன்ற புகழ்பெற்ற படைப்புகளை இயற்றினார்.
5. தமிழ் இலக்கியத்தில் புதிய சிந்தனைகளையும் புரட்சிகரமான கருத்துகளையும் விதைத்ததால், அவர் "மகாகவி" என்று போற்றப்படுகிறார்.

## 5 வித்தியாசங்களையும் கண்டுபிடியுங்கள்!




## 10 பொது அறிவுக் கேள்விகள் மற்றும் பதில்கள்:

1. உலகின் மிகப்பெரிய கண்டம் எது? - ஆசியா
2. உலகின் மிகப்பெரிய பெருங்கடல் எது? - பசிபிக் பெருங்கடல்
3. இந்தியாவின் தேசிய மலர் எது? - தாமரை
4. இலங்கையின் நிர்வாகத் தலைநகரம் எது? - ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே
5. சூரிய குடும்பத்தில் மிகப்பெரிய கோள் எது? - வியாழன் (Jupiter)
6. மனித உடலில் இரத்தத்தை பம்ப் செய்யும் உறுப்பு எது? - இதயம்
7. உலகின் மிக உயரமான மர இனங்களில் ஒன்றான Redwood மரங்கள் எந்த நாட்டில் அதிகம் காணப்படுகின்றன? - அமெரிக்கா

## ஒலிம்பிக் பற்றி...

1. ஒலிம்பிக் போட்டிகள் உலகின் மிகப் பெரிய மற்றும் புகழ்பெற்ற சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் ஒன்றாகும். உலகம் முழுவதும் உள்ள நாடுகளைச் சேர்ந்த சிறந்த விளையாட்டு வீரர்கள் இதில் பங்கேற்கின்றனர்.
2. தொடக்கம்: பண்டைய ஒலிம்பிக் போட்டிகள் கிரேக்கத்தின் ஒலிம்பியாவில் நடைபெற்றன.
3. நவீன ஒலிம்பிக்: 1896ஆம் ஆண்டு கிரேக்கத்தின் ஏதென்ஸில் நவீன ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கின.
4. நோக்கம்: விளையாட்டின் மூலம் நாடுகளுக்கு இடையே நட்பு, ஒற்றுமை மற்றும் சமத்துவத்தை வளர்ப்பது.
5. சின்னம்: ஐந்து வளையங்கள் உலகின் ஐந்து பகுதிகளின் ஒற்றுமையை குறிக்கின்றன.
6. ஒலிம்பிக் தீபம்: ஒலிம்பிக் போட்டிகளின் முக்கிய அடையாளங்களில் ஒன்றாகும்.
7. பதக்கங்கள்: முதலிடம் பெறுபவருக்கு தங்கம், இரண்டாமிடத்திற்கு வெள்ளி, மூன்றாமிடத்திற்கு வெண்கலப் பதக்கம் வழங்கப்படுகிறது.
8. "வெற்றி பெறுவது மட்டுமல்ல பங்கேற்பதும், சிறப்பாக முயற்சி செய்வதுமே முக்கியம்" என்ற ஒலிம்பிக் உணர்வு உலகெங்கும் விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமளிக்கிறது.






BEHIND ME MEDIA

## தமிழில் 'பெத்லகேம் குடும்ப யூனிட்'



நிவின் பாலி- மமிதா பைஜு முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ள மலையாளத் திரைப்படம், 'பெத்லகேம் குடும்ப யூனிட்'. கிரிஷ் ஏ.டி இயக்கியுள்ள இப்படத்தை திலீஷ் போத்தன், ஃபஹத் பாசில், ஷ்யாம் புஷ்கரன் இணைந்து தயாரித்துள்ளனர்.

இதில் சங்கீத் பிரதாப், சுரேஷ் கிருஷ்ணா, வினய் ஃபோர்ட், ரோஷன் ஷனவாஸ், ஷ்யாம் மோகன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். விஷ்ணு விஜய் இசையமைத்துள்ள இப்படத்துக்கு அஜ்மல் சாபு ஒளிப்பதிவு செய்துள்ளார். மலையாளத்தில் வரவேற்பைப் பெற்றுள்ள இப்படம் தமிழில் வெளியாக இருக்கிறது.

"நடுத்தர வயது ஆணுக்கும், கல்லூரியில் படிக்கும் இளம்பெண்ணுக்கும் இடையே உருவாகும் காதலின் பல்வேறு முகங்களை மையமாகக் கொண்டு இப்படத்தின் கதை நகர்கிறது. வயது வித்தியாசம் கொண்ட இருவருக்கு இடையேயான ஈர்ப்பு, காதல், அதனால் ஏற்படும் குழப்பங்கள் மற்றும் சமூகத்தைச் சுற்றிய பார்வையை கொண்ட இப்படம் செப்.4-ல் வெளியாகிறது."




## இசைக் கொண்டாட்டம்!



ஹிப் ஹாப் ஆதி, இயக்கி, கதாநாயகனாக நடித்துள்ள திரைப்படம், 'மீசைய முறுக்கு 2'.

இதில், சைத்ரா ஆச்சர், கேதிகா ஷர்மா, ரம்யா ரங்கநாதன் ஆகியோர் கதாநாயகிகளாக நடித்துள்ளனர். மேலும் ஹர்ஷத் கான், கருணாஸ், நாசர், ஆடுகளம் நரேன், கருணாகரன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

அவ்னி மூவீஸ் மற்றும் பென்ஸ் மீடியா சார்பில் குஷ்பு சுந்தர், ஏ.சி.எஸ். அருண்குமார் தயாரித்துள்ள இப்படம் செப். 25-ல் வெளியாகிறது.

இப்படத்தில் இருந்து வெளியான 'ஆரா 10/10', 'பப்பாளிப் பழமே', 'கோயிந்தம்மா', 'அடி போடி' ஆகிய பாடல்கள் ஏற்கெனவே ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ள நிலையில், தற்போது படத்தின் 5-வது பாடலான 'கலைவாணியே' வெளியாகியுள்ளது. இந்தப் பாடலை கவுஷிக் கிருஷ்ணா, டி. சத்யபிரகாஷ் மற்றும் ஹிப்ஹாப் தமிழா இணைந்து பாடியுள்ளனர்.

## 'Hi' திரைப்படத்தின் விமர்சனம்




நடிப்புக் கூட்டணி: கவின் மற்றும் நயன்தாராவின் ஆன்-ஸ்கிரீன் கெமிஸ்ட்ரி மற்றும் நகைச்சுவை காட்சிகள் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றன.

நகைச்சுவை மற்றும் பொழுதுபோக்கு: விடிவி கணேஷ், சத்யன் மற்றும் ராதிகா சரத்குமார் ஆகியோரின் நகைச்சுவை மற்றும் குடும்பக் காட்சிகள் படத்திற்கு கூடுதல் பலம் சேர்த்தன. இசை: ஜென் மார்ட்டினின் பாடல்களும் பின்னணி இசையும் ஒரு ஃபீல்-குட் (Feel Good) ரொமாண்டிக் காமெடிக்கு ஏற்றவாறு அமைந்தன.

பொதுவான கருத்து: புதுமையான திருப்பங்கள் இல்லாவிட்டாலும், குடும்பத்துடன் அமர்ந்து ரசிக்கக்கூடிய ஒரு கலகலப்பான பொழுதுபோக்குத் திரைப்படமாக அமைந்தது.

## 'வேட்ட சாமி' நெல்லை மாவட்ட பின்னணியில்...

அருள்நிதி மற்றும் அமீர் இணைந்து நடித்துள்ள படம், 'வேட்ட சாமி'. இதில் ஆடுகளம் நரேன், மதுசூதன் ராவ், ஹரீஷ் பெராடி, விஜி சந்திரசேகர், இந்துமதி மணிகண்டன், மைனா நந்தினி, இயக்குநர் தமிழ், கவிதா பாரதி உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

'பம்பர்' படத்தை இயக்கிய எம்.செல்வகுமார் இயக்கியுள்ள இப்படத்தை 7 மைல்ஸ் பெர் செகண்ட் புரொடக் ஷன்ஸ் சார்பில் சாமுவேல் மேத்யூ தயாரிக்கிறார். ஜிப்ரான் இசையமைத்துள்ள இப்படத்துக்கு ஆர்.டி. ராஜசேகர் ஒளிப்பதிவு செய்துள்ளார். இப்படத்தின் முதல் தோற்றத்தை, இயக்குநர்கள் லோகேஷ் கனகராஜ், ஆர்ஜே பாலாஜி வெளியிட்டுள்ளனர்.

'நெல்லை மாவட்ட பின்னணியில் உருவாகும் இப்படத்தின் கதை, சங்கிலி பூதத்தார், சுடலை மாடன் உள்ளிட்ட தெய்வ வழிபாடுகளை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.




## இயக்குநரா அறிமுகமானா தமிழ்லதான் ஆகணும் - இயக்குநர் சஜீவ் பழூர்



பிரபல மலையாள திரை எழுத்தாள ரான சஜீவ் பழூர், இயக்குநராக அறிமுகமாகும் தமிழ்த் திரைப்படம், 'என்ன விலை'. இயக்குநர் ஷாஜி என்.கருணிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றிய இவர், சில படங்களுக்கு கதை, திரைக்கதை, வசனம் எழுதியிருக்கிறார். 'தொண்டிமுதலும் த்ரிக்சாக் ஷியும்' என்ற படத்துக்காக சிறந்த ஒரிஜினல் திரைக்கதைக்காகத் தேசிய விருது பெற்றவர். செப்.17-ல் வெளியாக இருக்கும் 'என்ன விலை' பற்றி சஜீவ் பழூரிடம் பேசினோம்.

என்னை ரொம்ப ஈர்த்தது தமிழ் சினிமா. அப்ப நான் பார்த்த, 'பண்ணையாரும் பத்மினியும்", 'நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்", 'சூது கவ்வும்", 'முண்டாசுப் பட்டி" மாதிரி வித்தியாசமான கருக்களை வச்சு தமிழ்ல வெளியான படங்கள் எனக்கு இன்ஸ்பிரேஷனா இருந்தது.

ஒரு சின்ன விஷயத்தை வச்சுகிட்டு அழகா படம் பண்ண முடியும்ங்கற நம்பிக்கையைத் தந்தது இந்தப் படங்கள். அப்படித் தான் 'தொண்டிமுதலும் த்ரிக்சாக் ஷியும்' படத்தோட கதையை எழுதினேன். அது வரவேற்பைப் பெற்றதும் இயக்குநரா அறிமுகமானா தமிழ்லதான் ஆகணும்னு முடிவு பண்ணினேன். அப்படித்தான் தமிழுக்கு வந்தேன்.

திலீப் நடிச்ச 'கேஉ ஈ வீடிண்டே நாதன்'ங்கற மலையாள காமெடி படத்துக்கு நான்தான் ஸ்கிரிப்ட் எழுதினேன். அதோட கிளைமாக்ஸ் ஷூட்டிங் ராமேசுவரம் அக்னி தீர்த்தத்துல நடந்தப்பதான் 'என்ன விலை?' க்கான கதை உருவாச்சு. அதுக்கு நிறைய ஆய்வு பண்ண வேண்டியிருந்தது. 3 வருஷம் ஆய்வு பண்ணி திரைக்கதை எழுதினேன். இது மீனவர் சமூகத்துப் பின்னணியில் நடக்கிற கதை.

கதை எழுதி முடிச்சதும் எனக்கு சிறந்த 'பெர்ஃபார்மர்' தேவைப் பட்டார். கருணாஸின் நடிப்பு எனக்கு ரொம்ப பிடிக்கும். இந்த கதையின் கதாபாத்திரத்துக்கு அவர் ரொம்ப பொருத்தமா இருந்தார்.

A இந்தப் படத்துல சொல்ற விஷயம், புதுசா இருக்கும். இப்படத்துல வர்ற மாதிரியான ஒரு வழக்கு இதுவரை வந்ததில்லை. அது நியாயமானதுங்கூட. அந்த 'கான்செப்ட்டு' க்காக பட விழாக்களுக்கு அனுப்பினோம். நான்கைந்து விருதுகள் கிடைச்சிருக்கு. மக்களுக்கும் இந்தப் படம் ரொம்ப பிடிக்கும்னு நம்பறேன்.

மீனவ கிராமத்துல படப்பிடிப்பு நடத்தணும்னு நினைக்கும்போது முதல்ல பயம் இருந்தது. ஏதும் பிரச்சினை வருமா? அவங்க உதவி பண்ணுவாங்களா? ன்னு சந்தேகம் இருந்தது. அதனால 15 நாளுக்கு முன்னாலயே அங்க போயி, அவங்களோட பழகி செட் போட்டு படப்பிடிப்பை நடத்தினோம். நீங்க நம்பவே மாட்டீங்க, இவ்வளவு அன்பான மக்கள் இருப்பாங்களா?ன்னு ஆச்சரியப்படற மாதிரி எல்லோரும் நடந்துகிட்டாங்க.

எல்லா விதத்துலயும் உதவி பண்ணினாங்க. ஒவ்வொரு வீடும் உறவினர் வீடு மாதிரி ஆயிடுச்சு. அதனால அவங்களுக்கு ஏதாவது பண்ணணும்னு முடிவு பண்ணினோம். அதனால, ஒரு நாள் பூராவும் பெரிய கொண்டாட்டமா அங்க விழா நடத்தினோம். மக்களுக்கு பிரியாணி போட்டு, அவங்களை வச்சே ஃபர்ஸ்ட் லுக்கை வெளியிட்டோம். இது அவங்க அன்புக்கு நாங்க செய்ற மரியாதை. பட ரிலீஸுக்கு பிறகும் அங்க போகணும்னு இருக்கோம்.